விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 21 வியாழக்கிழமை (03.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 136

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மனித உரிமை நிலை குறித்து இலங்கையில் ஆராய வேண்டும்

## அவுஸ்திரேலிய அமைச்சரிடம் ம.உ. அமைப்பு வலியுறுத்தல்

(கொழும்பு)

**இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் அவுஸ்ரேலிய குடியேற்ற மற்றும் குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவனிடம் கோரியுள்ளது.**

இலங்கையில் இருந்து அவுஸ்ரேலியாவுக்கு ஆட்கள் கடத்தப்படுவதை தடுத்தல் உள்ளிட்ட குடிவரவு விவகாரங்கள் குறித்து கிறிஸ் போவன் இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இந்நிலையில் இலங்கையின் மனிதவுரிமைகள் நிலைமைகள் குறித்து தனது பயணத்தின் போது அரசாங்கத்திடம் கிறிஸ் போவன் கேள்வி எழுப்பவேண்டும் என மனிதவுரிமைகள் கண்காணிப்பகம்வேண்டுகோள்விடுத்துள்ளது. அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற மனித வுரிமை மீறல் (24ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் காளைமாடு நேற்று ஒப்படைப்பு



(யாழ்ப்பாணம்)

நல்லினக் காளை மாடு தொடர்பில் யாழ்ப்பாண நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் நேற்றைய தினம் மாட்டின் உரிமையாளரால் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொள்ளப்பட்டு காளை மாடு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு உரிமையாக்கப்பட்டது.

காளை மாட்டிற்குரிய ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரத்தை யாழ்ப்பாண வணிகர் கழகம் வழங்கியது.

இதனையடுத்து யாழ்.முஸ்லிம் பகுதியில் இல.31, நாவலர் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோ. தூதுக்குழு மட்டு. விஜயம்

(மட்டக்களப்பு)

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற தூதுக்குழுவொன்று நேற்றுப் புதன் கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்தது.

ஜீன் லம்பட் தலைமையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த ஐரோப்பிய நாடாளுமன்ற தூதுக்குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராண் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பி மலை கிராமத்திற்கு சென்று ஐரோப்பிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பார்வையிட்டனர்.

அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் குடும்பி மலை குளத்தையும் பார்வையிட்ட இக்குழுவினர் குடும்பி (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வந்த குழுவுடன் இந்.பிரதமர் அவசர சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய மக்களவை எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை பிரதமர் மன்மோகன் சிங் இன்று அவசரமாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ள இச்சந்திப்பில் இலங்கையின் போருக்குப் பிற்பட்ட நல்லிணக்க முயற்சிகள் மற்றும் மீள்குடியேற்ற விடயங்கள் குறித்து கவனம் கொள்ளப்படவுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்ததாக கொழும்பிலும் புதுடில்லியிலும் சுஷ்மா சுவராஜ் தெரிவித்திருந்தார்.

ஆனால் (24ஆம் பக்கம் பார்க்க)

## மே தினத்தில் புலிக் கொடியா? அடியோடு மறுக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நடந்த எதிர்க்கட்சி மே தின கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி காணப்பட்டதாக வெளிவந்த செய்திகளை ஐ.தே.க. வன்மையான மறுத்துள்ளது. ஐக்கிய தேசிய கட்சிமீது சேறு பூசுவதற்காகவும் மக்களை ஏமாற்று வதற்காகவும் அரச ஊடகங்களில் இவ்வாறு சித்திரிக்கப்பட்டதாகவும் ஐ.தே.க. குற்றம்சாட்டியது.

தமது மேதின கூட்டத்தில் ஆயிரக்கணக்கான ஐ.தே.க. ஆதரவாளர்கள் கலந்து கொண்டதாகவும் இந்த கூட்டம் பெரும் வெற்றியாக அமைந்தது எனவும் ஐ.தே.க பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கூறினார்.

எமது கட்சியின் மதிப்பை கெடுப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிகளை கொண்ட வீடியோக்களை அரசாங்கம் சிருஷ்டித்துள்ளது. இவ்வாறான கொடிகள் எமது கூட்டத்தில் இருக்கவில்லை என்பதை அங்கு வந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவுக்கு புதுமையான பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பு நவலோகா வைத்தியசாலையின் ஏ விடுதியில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு புதுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவரது மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா, பிணை கோரி தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணைக்காக நேற்று உயர்நீதிமன்றத்துக்கு வந்த போது, ஊடகவியலாளர்களிடம் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## வெட்கமில்லாமல் தமிழ்க் கூட்டமைப்பு ஐ.தே.கவுடன் மே தினம் கொண்டாடுகிறது

### அரசாங்கம் கிண்டல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தொழிலாளர்தின ஊர்வலத்தையும், கூட்டத்தையும் நடத்தும் கூட்டமைப்பின் நிலை குறித்து தான் கவலையடைவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் கினிகெத்ஹேனையில் நடைபெற்ற தொழிலாளர்தின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானின் தலைமையில் கினிகெத்ஹேனையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்திற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன் போது தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றிய பொருளாதார அபிவிருத்தி (24ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு உதவி வழங்க முன்வரும் கருணாநிதி!

## திவயின தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்தால் அதற்கு தமது ஆதரவு வழங்கப்படுமென தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி, தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பின் மாநாட்டில் உரையாற்றும்போது தெரிவித்ததாக திவயின கூறியுள்ளது.

பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா? என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள அவர், சுதந்திரப் போராட்டத்தை நடத்தும் பிரபாகரன் உயிரிழக்கவில்லை என தெரிவித்ததாகவும், இந்தியா முழுவதும் தமிழீழ ஆதரவு அமைப்பின் அலுவலகங்களை திறந்து, அதற்கு ஆதரவு வழங்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுப்போம் எனவும் கருணாநிதி கூறியதாகவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களை அழித்தது இந்திய அமைதிப்படையே என குற்றம் சுமத்தியுள்ள கருணாநிதி, நாடு திரும்பிய இந்திய அமைதிப் படையினரை வரவேற்கதான் செல்லவில்லை என தெரிவித்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# த.தே.ம.முவின் கூட்டத்தில் புலனாய்வுத் துறை அச்சுறுத்தல்

## கட்சி அறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கரவெட்டியில் இடம்பெற்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மே தின கூட்டத்திற்கு பெரும் எண்ணிக்கையில் வந்த சிவில் உடை தரித்த இராணுவ புலானாய்வுத் துறையினர் அங்கு மக்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நிகழ்வு ஆரம்பமாவதற்கு முன்னர், கூட்டம் நடைபெறவிருந்த இடத்திற்கு பெரும் எண்ணிக்கையில் சிவில் உடையில் சென்ற புலானாய்வுத்துறையினரது செயற்பாடுகளினால் அங்கு பெரும் பதற்றமும் அச்சமான சூழலும் பரவிக் கொண்டது.

அதனால் அங்கு ஏற்பாட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் பலர் அச்சம் காரணமாக விலகிச் சென்று விட்டனர்.

நிகழ்வு நடைபெற்றக் கொண்டிருந்த போது புலானாய்வுப்பிரிவினர் வீடியோ மூலம் அதனை பதிவு செய்து கொண்டிருந்தனர். அத்துடன் ஒலி அமைப்பாளரிடம் கூட்டத்தில் உரையாற்றுபவர்களது உரைகள் அனைத்தையும் பதிவு செய்து தரவேண்டுமென வற்புறுத்தி பதிவு செய்திருந்தனர்.

பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வானது இரண்டு தேசங்கள்ஒருநாடுஎன்றஅடிப்படையில்அமைய வேண்டுமென்ற பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# கொழும்பு-யாழ்.சேவையில் ஈடுபடும் பஸ்கள் தரிப்பதில் புதிய விதிமுறை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளின் நலன்கருதி போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்துத் தனியார் பேருந்துகளும் பஸ்தியன் மாவத்தையில் மட்டுமே தரித்து நின்று போக்குவரத்தில் ஈடுபடவேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

யாழ்- கொழும்பு இடையே போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு 155 பேருந்துகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் விலைமனுக்களின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட பேருந்துகள் தவிர்ந்த 48 பேருந்துகள் அனுமதிப்பத்திரங்கள் இன்றி போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

தற்போது பஸ்தியன் மாவத்தை, வெள்ளவத்தை மற்றும் கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களில் மூன்று பேருந்து தரிப்பிடங்கள் காணப்படுவதனால் பயணிகளும் பேருந்து உரிமையாளர்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பல்வேறு இடங்களில் ஆசனப்பதிவுகளின் போது முறைகேடுகள் இடம்பெறுவதனை கருத்தில் கொண்டே இவ் புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# முதியவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியிலுள்ள வயல் கிணற்றிலிருந்து முதியவர் ஒருவரது சடலம் நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வயல் கிணற்றிலிருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலவர்கள் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். அதையடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சடலத்துக்குரியவர் இதுவரை இனம் காணப்படவில்லை. இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் (எ-4)

# நீதிமன்றம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனத்தை செலுத்திய நால்வருக்கு யாழ். நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கொக்குவில் பகுதியில் வைத்து மூவரும் திருநெல்வேலியில் வைத்து ஒருவரும் காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனத்தை செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணை செய்த யாழ் நீதிவான் மா.கணேசராஜா நால்வரும் தலா 5 ஆயிரம் அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார். (எ-4)

# வெசாக் நிகழ்வு

கருணை, அன்பு, சமத்துவம் மற்றும் இயல்பு வாழ்க்கை போன்ற தர்மங்களை அடிப்படையாக கொண்டு இவ்வாண்டு வெசாக் உற்சவத்தை கொண்டாடும் முகமாக யாழ்ப்பாண நகர மத்தியில் வெசாக் வலயமொன்றை யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகம் நிர்மாணிக்கவுள்ளது.

வெசாக் பந்தல்கள் வெசாக் அலங்காரங்கள் மற்றும் நிர்மாணிப்பு உட்பட தானசாலைகள் போன்றவற்றைக் கொண்டு அமையும் வெசாக் வலயம் யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் நாளை மறுதினம் 5 ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் மாலை 6.30 மணியிலிருந்து நடைபெறும்.

இதன் ஆரம்ப நிகழ்வு விஷேட அதிதிகள் பங்குபற்றலுடன் 5ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக பிரதான வாயிலுக்கு அருகில் நடைபெறவுள்ளது. (ஏ)

# சிறுநீரகம் வழங்க கோரிக்கை

சிறுநீரகம் பழுதடைந்துள்ள தமது கழக உறுப்பினர் ஒருவருக்கு சிறுநீரகம் வழங்கி உதவுமாறு நல்லூர் லயன்ஸ் கழகம் கேட்டுள்ளது.

அவருக்கு B+ அல்லது O குறூப் இரத்தம் உள்ள 21 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட ஒருவரிடம் இருந்து சிறுநீரகம் தேவைப்படுகிறது.

மனமுவந்து சிறுநீரகம் வழங்க முன்வருபவர் 0778693488, 0716357267, 0778704872 ஆகிய இலக்கங்களில் ஒன்றுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிறுநீரகம் வழங்க முன்வருபவருக்கு சன்மானம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# பிரிட்டன் நீதிமன்றில் குற்றவாளியாக பிக்கு

(லண்டன்)

பிரிட்டனில் உள்ள பிரபல பௌத்த பிக்குகளில் ஒருவரான பகலகமசோமரட்ண பிக்கு பெண்களிடம் கண்ணியத்தை மீறி நடந்தார் என்று குற்றம் நிரூபிக்கப்படுள்ளார். அவருக்கான தண்டனை ஜூன் முதலாம் திகதியில் வழங்கப்படவுள் ளது. அதேவேளை வயதுக்கு வராத பெண்களை பாலியல் வல்லுறவுக்குஉட்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்திருந்தார். 1970 கள் மற்றும்80களில்பாலியல்வல்லுறவுமற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. 65 வயதான இவர் குறைடனில் உள்ள தேம்ஸ்பௌத்தவிகாரையின் தலைமை பிக்குவாவார். (எ-11)


## தவறிவிட்டது

கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் கந்தசாமி இந்திராவதி என்பவரது 636243647 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, ஒரு தொகைப் பணம் மற்றும் சில ஆவணங்களுடைய கைப்பை ஒன்று 30.04.2012 அன்று யாழ். போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் E-World Net தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தொ.பே.: 021 222 1935 (8287)

## அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள்

அதிபர், ஆசிரியர்களுக்கு

தரம் 1 முதல் 5 வரையான வகுப்புகளுக்குரிய, அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிப் புத்தகங்கள் வெளிவந்துவிட்டன. உடன் பெற்றுக் கொள்ளலாம்.

தயா அச்சகம்
138, நாவலர் வீதி (மனோகரா சந்தி)
சிவதயா பிறிண்டேர்ஸ்
575, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(நாச்சிமார் கோவிலடி) TP:- 0773965214 (8286)

## செல்லா சினிமா-யாழ்ப்பாணம்




கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.

## YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பீட அனுசரணை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்

## விரைவில்

உங்கள் கரங்களில்

‘முதல்வன்’

இலங்கையின் முதற்தர காலாண்டு இதழ்

உங்கள் பிரதிக்கு முந்துங்கள் (இ)

## லக்ஸ்மி திருமண சேவை

லக்ஸ்மி திருமண சேவையில் உள்நாடு, வெளிநாடு திருமணமாகாதவர்களுக்கு திருமணம் பொருத்தி தரப்படும்.

தரகர்களும் தொடர்பு கொள்ளலாம். மண்டபம், சாப்பாடு ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: செ.கனகரத்தினம்
லக்ஸ்மி திருமண சேவை,
கல்லூரியடி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
T.P.: 021 321 7785 (8276)

AFTER A/L...

## Management Trainee (2012 Batch)

சர்வதேச ரீதியில் இயங்கும் கனடியன் நிறுவனத்திற்கு அதன் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி கிளைகளுக்கு முகாமைத் துவ பயிற்சிக்கு (Management) தகுதியானவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். A/L முடித்தவர்கள் (ஆண்கள் மட்டும்) உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

பயிற்சிக்காலம் 3-6 மாதங்கள், பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் மாதாந்தம் 50000/= மேல் பெறலாம்.

தொடர்புகளுக்கு: 0777274795, 0244907449 (8277)

## தேவை

- English Typing
- Tamil Typing
- Internet knowledge உடன் அனுபவமுள்ள Typist தேவை.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்,

K.S.N. Communication
New Market, 146,
Jaffna.
T.P.:- 021-2223079, 0777 248177 (8283)

## Computer Express

Institute Of Information Technology

- Diploma in Microsoft office — 3 Months
- Diploma in Desktop Publishing — 3 Months
- Diploma in Web page Designing — 3 Months
- Diploma in Graphic Designing — 3 Months
- Diploma in Hardware Engineering — 3 Months
- Diploma in Computerized Accounting — 3 Months
- Diploma in Computer Science — 4 Months
- Hon. Diploma in Computer Science — 4 Months
- Hon. Diploma in Programming — 3 Months
- AUTO CAD — 3 Months

Advanced Diploma Courses

- Advanced Dip. in Multimedia
- Advanced Dip. in Video Editing
- Advanced Dip. in Networking

100% செய்முறைப்பயிற்சி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| Batch i | - 04-05-2012 | Time |
| Batch ii | - 05-05-2012 | 9Am |
| Batch iii | - 06-05-2012 | or |
| Batch iv | - 09-05-2012 | 3PM |

No.15, Sirambiyadi lane, off Stanley Road, Jaffna. (ஆரியகுளத்துச்சந்திக்கு அருகில் கைலை Hotel மேல்) T.P No :- 021 222 8250, 077 722 2422, 077 490 7444

# இன்று ஒரு தகவல்

## புத்தர் இருக்கும் இடம்

ஜப்பான் நாட்டில் ஒரு பௌத்த புத்த விகாரை இருந்தது.

அந்த விகாரையில் ஒரு வயதான பௌத்த துறவி இருந்தார்.

ஒருநாள் இரவு அப்பகுதி எங்கும் மிகுந்த குளிர் வாட்ட ஆரம்பித்தது. இந்தக் குளிரை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அந்த விகாரையிலே மரத்தினாலே செதுக்கிய புத்த சிற்பங்கள் இருந்தன. அதில் ஒன்றையெடுத்து தீமூட்டி அருகில் இருந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தார். மர சிற்பம் தீ வைத்ததும் படபடவென்று வெடிக்க ஆரம்பித்தது. அந்த சத்தத்தைக் கேட்டதும் அங்கே இருந்த பௌத்த துறவிகள் எல்லோரும் வெளியே ஓடி வந்தார்கள்.

இவர் சந்தோசமாக குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார். அதனால் அவராலேயே பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

தெருவிலே திரிந்துகொண்டிருந்த அந்தப் பெரியவரை இங்கே தங்க அனுமதி வழங்கியதே இவர்தான். இவர் இப்படியாக செய்கிறாரே என்று நினைத்துக் கொண்டு அவரைக் கோபமாகப் பார்த்தார்.

''ஏன் அப்படி கோபமாக பார்க்கிறீர்கள். இப்படி வந்து அமருங்கள்" என்றார்.

இவருக்கு கோபம் தலைக்கு ஏறியது.

"எங்கள் கடவுளை எரித்துவிட்டீர்களே" என்று உரத்து சத்தம் போட்டான்.

"அப்படியா?" என்று கேட்டுக் கொண்டே அந்தச் சாம்பலைக் கிளறினான்.

"என்ன செய்கிறீர்கள்?'' என்றான்,இவன். "நான் எலும்புகளைத் தேடுகிறேன்" என்று கூறினார்.

''நீங்கள் ஒரு பைத்தியம்... இது மரச்சிற்பம்... இதிலே எலும்புகள் கிடையாது" என்றார்.

அவருக்கு கோபம் வந்துவிட்டது. "உடனே வெளியேறுங்கள்" என்று கத்தினார். வெளியே தள்ளிவிட்டு கதவை தாழ்பாள் விட்டார்.

மறுநாள் காலையிலே கதவைத் திறந்து பார்த்தால்... அந்த வயதான பெரியவர் ஒரு மைல் கல் மேலே ஒரு காட்டுப் பூக்களை வைத்து... "புத்தம் சரணம் கச்சாமி'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இவர் அவருக்கு அருகில் சென்றார். " என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

"இது எனது காலை பிரார்த்தனை'' என்றார்.

"உண்மையிலே நீங்கள் ஒரு பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் அது ஒரு மைல்கள்'' என்றார்.

அப்போது அந்தப் பெரியவர் " நீங்கள் ஒரு மரத்தை புத்தராக்கும் போது நான் ஏன் ஒரு மைல் கல்லைப் புத்தராக்கக்கூடாது?

நான் புத்தரை நேசிக்கலாம். ஏனென்றால், அவரை நான் நேசிக்கிறேன்.

அந்த சிற்பம் மரத்தால் செய்யப்பட்டது என்பது எனக்குத் தெரியும்.

நான் ஒரு மைல்கல்லை வணங்கலாம். நான் இந்த மைல் கல்லுக்குள்ளே மறைந்திருக்கும் புத்தரைப் பார்க்கிறேன்.

யாராவது ஒரு சிற்பி இதை சிலையாக்கினால்தான் நீங்கள் புத்தரைக் காணலாம்.

அன்றைய தினம் மிகவும் குளிராக இருந்தது. நான் என்னுள் இருக்கும் புத்தரையும் குளிரில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

உள்ளே இருக்கும் புத்தரைக் காப்பாற்றுவதற்காக வெளியே உள்ள புத்தரை எரிக்கலாம். அது தவறில்லை. அது அவருடைய போதனையிலே இருக்கிறது.

"உன்னுள் ஜோதியாக இரு" என்பது அவருடைய போதனை.

உனக்குள் ஜோதியாக இரு... என்று புத்தர் சொன்னார். அது மாதிரி தனக்குள் ஜோதியாக இருக்கிற இந்தக் காலத்து ஆசாமிகள் நிறையப்பேர் இருக்கிறார்கள். அதாவது எப்போதும் போதையிலே இருக்கிறவர்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தனின் வருடாந்த மஹோற்சவ காலத்தில் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வழமை போன்று 2012 ஆம் ஆண்டு வெளியிடப்படவுள்ள 20 ஆவது நல்லைக் குமரன் மலருக்குகந்த தரமான ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகள், கவிதைகள் போன்றன துறை சார்ந்த அறிஞர்கள், கல்விமான்கள், சைவப் பெரியார்கள் போன்றோர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன என யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுத்தலைவர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

அனைத்து விதமான ஆக்கங்களையும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கௌரவ பதிப்பாசிரியர், இல.21/3 ஏ, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நல்லைக்குமரன் மலருக்கான ஆக்கங்கள்- 2012 எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு சைவசமய விவகாரக் குழுவினர் அறிவித்துள்ளனர். இம் மலருக்காக அனுப்பப்படும் ஆக்கங்கள் முன்னர் ஒருபோதும் பிரசுரிக்கப்படாதவையாகவும் தெளிவான எழுத்திலும் அல்லது கணனியில் பொறிப்பதற்கு உகந்த மென்பிரதியாகவும் அமைந்திருப்பது அவசியமாகும்.

(அ-9)

# குமாரபுரம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குங்கள்

## மக்கள் கோரிக்கை

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குமாரபுரம் கிராமத்திற்கு முழுமையாக மின்சாரம் வழங்கப்படாமையால் அக்கிராமம் இருளில் மூழ்கியுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த கிராமத்தில் உள்ள 340 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளபோதும் முழுமையாக அக்கிராமத்தில் உள்ள எல்லா பகுதிக்கும் வழங்கப்படவில்லை.

பிரதான வீதிக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. நாளாந்த செயற்பாடுகளுக்கு மின்சாரம் மிகவும் அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றபோதும் இங்கு மின்சாரம் வழங்கப்படாமையால் நாளாந்த செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றது.

மின்சார வசதியற்ற நிலையில் மக்கள் மீள்குடியேறி மின்சாரத்தை பெறுவதற்கான வேலைகள் அனைத்தையும் பூர்த்தியாக்கியுள்ளனர். அத்துடன் மின்சாரத்திற்கான விண்ணப்பங்களை அனுப்பி விட்டு மின்சாரத்தை எதிர்பார்த்திருக்கும் மக்கள் ஏமாற்றத்தையே எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

உரியவர்களிடம் மின்சார வசதி தொடர்பாக கேட்கின்றபோது இன்று, நாளை என்ற ஏமாற்றமான பதிலையே கூறிவருகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு இக்கிராமத்திலுள்ள முழுப்பகுதிக்கும் மின்சாரத்தை வழங்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 130 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 35-40 | 40 | 30 | 50 |
| தக்காளி | 100 | 120 | 70 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 20 | 20 | 40 |
| கரட் | 40 | 40 | 40 | 60 |
| பூசணி | 25-30 | 20 | 20 | 30 |
| புடோல் | 35 | 40 | 30 | 50 |
| வாழைக்காய் | 15 | 15 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-70 | 80 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 85 | 85 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 40 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 90 | 50 |
| லீக்ஸ் | 100 | 90 | 80 | 180 |
| பீற்றூட் | -- | 60 | 30 | 60 |
| கறிமிளகாய் | 40 | 30 | 40 | 60 |
| முருங்கைக்காய் | 160-200 | 180 | 350 | 320 |
| போஞ்சி | -- | 100 | -- | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-15 | 30 | 20 | 30. |
| தேசிக்காய் | 60 | 80 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 30 | 20-25 |

# இராசி பலன்

*03.05.2012*
*(சித்திரை 21, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு*
*துவாதசி பிற்பகல் 4.45 மணிவரை*
*உத்தரம் முற்பகல் 11.01 மணிவரை*
*இராகுகாலம் 1.26-2.56 மணிவரை*
*சுபநேரம் 7.26-8.56 மணிவரை*
*பிரதோச விரதம்.*

**மேடம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், தொழில் வியாபாரத்தில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல் நலம் சீராகும்.

**இடபம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், தனவரவு திருப்திகரமாக அமையும்.

**மிதுனம்** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள்,நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்,பெற்றோர் வழியில் எதிர் பார்த்த தகவல்கள் வந்து சேரும்,வாகன சுகமுண்டு.

**கடகம்** பெரியோர்களின் ஆசி கிடைக்கும் நாள், தொழில் வளம் பெருக தொல்லை. தந்தவர்களே உதவ முன்வருவர், சகோதர ஒற்றுமை பலப்படும், இல்லத்தில் இனிமை தரும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**சிங்கம்** சுற்றத்தார் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், சிறப்பான நாள், புதிய முயற்சிகள் கைகூடும், பொருளாதார வளர்ச்சி கருதி அதிகம் பாடுபடுவீர்கள்.

**கன்னி** பெரிய மனிதர்களின் உதவியால் விரும்பிய காரியம் நடைபெறலாம், திடீர் பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், குரு வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**துலாம்** தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** உறவினர் பகை அகலும்,விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், நாணயத்தோடு நடந்து கொள்வதால் அனைவரும் உங்களைப் பாராட்டுவார்கள்,காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, அந்நியர்களின் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள்.

**மகரம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள்,தேக நலனில் தெளிவு பிறக்கும் நாள்,பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு,புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கும்பம்** பெரியவர்கள் உங்கள் மீது குறை கூறலாம், வரவு வருதற்கு முன்னே செலவுகள் வந்து சேரும், கௌரவக் குறைவான நாள், உடல் நலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**மீனம்** வரவு திருப்தி தரும் நாள், ஆலய வழிபாடு ஆனந்தமளிக்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

வளவன்

# செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் தரம் 6-9 இற்கு சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் முறையியல் செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை வரணி ஆசிரியர் மத்தியவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பங்குபற்றவுள்ள ஆசிரியர்கள் 077 9789160 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது zeothen@yahoo.com மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொண்டு தமது வருகையை உறுதிப்படுத்துவதுடன் தரம் 6-9 இற்குரிய அறிவுரைப்பு வழிகாட்டி பாடப்புத்தகத்தையும் எடுத்து வருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (அ-3-29)

# மந்திகை ஆதார வைத்தியசாலையில் சில நோய்களுக்கு மருந்து தட்டுப்பாடு

(கரவெட்டி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நீரிழிவு, இரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற நோயாளர்கள் மாதாந்த கிளினிக்கிற்கு செல்லும்வேளை அங்கு 15 நாட்களுக்கு உரிய மருந்தே வழங்கப்படுவதாகவும் மிகுதி 15 நாட்களுக்கு உரிய மருந்தை தனியார் மருந்தகங்களில் வாங்குமாறு நோயாளர்களுக்கு கூறப்படுவதாக நோயாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மருந்தின் தட்டுப்பாடு காரணமாக நீண்ட நேரம் காத்து நின்று பெற வேண்டிய நிலை உள்ளது. நீண்ட நேரக் காத்திருப்பு காரணமாக பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை உள்ளது.

வடமராட்சி பிரதேசத்தில் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையையே நம்பியுள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்தின் பெரிய வைத்தியசாலையான பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை, மருந்து தட்டுப்பாடு, பணியாளர் பற்றாக்குறை போன்றவற்றால் வடமராட்சி மக்களுக்கு உரிய முறையில் வைத்திய தேவை கிடைக்கப் பெறவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பிரதேச மக்களின் வைத்திய நலன் கருதி இவ் வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் நோயாளிகளும் கோரிக்கை விடுத்துள்ள்னர். (அ-3-24)

# இலவச தேவார பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய ஆதரவுடன் சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் வாராந்தம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 4.30 மணி முதல் இலவச தேவாரப்பண்ணிசை வகுப்புகள் நடத்தி வருகின்றது.

வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாட விதானத்திற்கமைவாக தேவார இசைமணி கலாபூசணம் துறைசை, ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ்.ஆர். திருஞான சம்பந்த ஓதுவார் மூர்த்தி நடத்தி வருகின்றார்.

புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். அத்தோடு கொழும்புத்துறை சிவதொண்டன் நிலையம் மகளிர் ஆச்சிரமத்திலும் இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்புகள் நடைபெற்று வருகின்றது. விரும்பும் மாணவர்கள் ஆச்சிரமத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.

இதற்கான ஏற்பாடுகளை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்டு வருகின்றார். (அ)

# கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மே மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாந்நாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

# அம்பன் வீதியை புனரமைக்க கோரிக்கை

(கரவெட்டி)

குடத்தனையில் இருந்து அம்பன் செல்லும் வீதி மிகவும் மிக மோசமான நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமர்ராட்சி கிழக்குப் பிரதேசம் யுத்தத்தால் முற்றாக சேதமடைந்துள்ளது.

அதன்பின் அங்கிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வாழ்ந்தனர்.

மீளக் குடியேற்றம் செய்யப்பட்டு நீண்ட வருடங்கள் ஆகியும் அப்பகுதி மக்களின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இவ் வீதி பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாத நிலையே உள்ளது.

இதனால் அவ் வீதியால் செல்லும் பேருந்துகளும் பொதுமக்களும் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதியை புனரமைக்க நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)




# முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டு மக்கள் நலமாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டுமென பிரார்த்தித்து நாயன்மார் நால்வரை ஆலயங்களில் எழுந்தருளச் செய்து மாதம் ஒரு கோயில் மாதம் ஒரு திருமுறை முற்றோதலென பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நல்லூர் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் முதலாந் திருமுறை முற்றோதல் இடம்பெற்று வருகின்றது என மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கின்றார். (அ-9)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் I பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலைக்கு முன்பாகவும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை அண்ணாசிலைச் சந்தியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)



யாழ். எயிட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யா/ஆனைக்கோட்டை குணபால வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் கனடா வாழ் புலம்பெயர் தமிழரும் சமூக சேவையாளருமாகிய திருமதி சி.கௌரி மாணவர் ஒருவருக்கு உதவிப் பொருட்களை வழங்குவதையும் உதவிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் :- அலுவலகச் செய்தியாளர்)*

# வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்கள், சூழ்ச்சிகளுக்கு ஒருபோதும் இடமளியோம்

## மேதின உரையில் ஜனாதிபதி

(கொழும்பு)

**எமது நாட்டின் மனித உரிமைகள் குறித்த அக்கறையில் சில வெளிநாடுகள் பேசவில்லை. மாறாக இலங்கை இன்னும் அவர்களின் காலனித்துவ நாடு என்ற எண்ணத்திலேயே செயற்படுகின்றன என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**

கொழும்பு மாநகர சபைத்திடலில் நடைபெற்ற ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமைகள் என்ற பெயரில் எமது உரிமைகள், தேசத்தின் உரிமையை உழைக்கும் மக்களின் உரிமைகளை பறித்து விடப் பார்க்கின்றனர். இந்த நாட்டின் மனித உரிமைகளைப் பாதுகாக்க இவர்கள் செயற்படவில்லை. இவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். இன்னும் நாம் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருப்பதாக நினைத்துக் கொண்டு ஏகாதிபத்தியத்தின் மூலம் எம்மை அடிபணியச் செய்யப் பார்க்கிறார்கள். அதுதான் அழுத்தங்களை வழங்குகின்றனர்.

நான் 2005 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததில் இருந்து இந்த அரசாங்கம் ஏப்ரல் மாதத்தில் கவிழ்ந்து விடுமென்று ஒவ்வொரு ஏப்ரல் மாதமும் கூறுகின்றனர். எனினும் அவர்கள் கூறும் ஒவ்வொரு ஏப்ரல் மாதத்திலும் நாம் பலம்பெற்று முன்னோக்கி வந்திருக்கின்றோம்.

இதனால்தான் வெளிநாட்டுச் சக்திகள் இன்று நாட்டில் ஸ்திரமற்ற நிலைமையை ஏற்படுத்தவும் மக்களை பலவீனப்படுத்தவும் முயற்சிக்கின்றன. எனினும் மக்கள் புத்திசாலிகள். அதுதான் மக்கள் நாட்டை பாதுகாத்து முன்னேற்றியுள்ளனர்.

கடந்த காலங்களில் சிலர் இந்த நாட்டை குழப்பவும் அதேபோல் குழப்ப முயற்சிப்பவர்களுக்கு உதவியும் செய்தார்கள். இலங்கை என்பது ஆசியாவின் பழைமையான நாடு. வாக்குகள் மூலம் அரசை தோற்கடிக்க மக்களுக்கு உரிமை இருக்கிறது. அதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதுதான் சர்வஜன வாக்கெடுப்பில் எமக்கு நம்பிக்கை இருக் கிறது.

அதுதான் ஜனநாயகம். எனினும் சூழ்ச்சிகள், வெளிநாட்டு சக்திகள் மூலம் நாட்டை கவிழ்க்க இடமளிக்கமாட்டோம்.

சிலர் யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டம் நடத்துகின்றனர். அவர்கள் அங்கு மேதினம் கொண்டாடும் அதேநேரம் யாழ்.நூலகம் எரிப்பு, வாக்குகள் கொள்ளை போன்ற தவறுகளுக்கு மன்னிப்பு கோருவார்கள் என்று நம்புகிறோம்.

அவர்கள் யாழ்ப்பாணம் செல்வதையிட்டு நாம் சந்தோசப்படுகிறோம். ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டின் பிரதமராக இருந்தபோது போர் நிறுத்த உடன்படிக்கையை ஏற்படுத்தி யாழ்ப்பாணம், கிளிநொச்சி செல்லக்கிடைக்கவில்லை.

அவர் அநுராதபுரம் கூட அப்போது போகவில்லை. எமது மக்களும் படையினரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றியமையினால் தான் அவர்களால் யாழ்ப்பாணம் சென்று மேதினம் கொண்டாட முடிந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் சிலருக்கு தெரிவதில்லை. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மூடி மறைக்க நினைக்கும் உண்மைகளை உழைக்கும் மக்கள் கண்ணால் காண்கின்றனர் என்றார். (அ-2)

# வலுவான கட்சி மூலமே உரிமைகளை பெறமுடியும்

## சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

வலுவான கட்சி இல்லை என்று சொன்னால் நாங்கள் கூறுகின்ற மக்கள் போராட்டம் எல்லாம் தோல்வியடைந்துவிடும். ஒரு வலுவான அமைப்பினால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தின் ஊடாக தமிழ் மக்களும் சிங்கள மக்களுக்கு நிகரான உரிமைகளைப் பெற்று இந்த மண்ணில் சீரோடும் சிறப்போடும் வாழும் நிலையைத் தோற்றுவிக்க முடியும் என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் நினைவுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

தென்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியும் அதிலிருந்து பிரிந்து சென்ற இலங்கை சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் தென்பகுதி யின் அரசியல் கட்சிகளாகத் திகழ்ந்தன. அதே போன்று வடக்கு- கிழக்கில் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் அதிலிருந்து பிரிந்து சென்ற தந்தை செல்வாவின் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அன்று தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் பலம் பொருந்திய கட்சிகளாக விளங்கின.

அன்றைய காலகட்டத்தில் அவர்களுடைய போராட்டங்களில் தமிழ் மக்கள் ஒரு தனி தேசிய இனம் என்பதை நிலைநாட்டுவதில் தந்தை செல்வாவிற்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஒரு தனித்துவம் இருக்கின்றது.

அந்த வகையில்தான் பல இடங்களில் நாங்கள் குறிப்பிட்டிருக்கின்றோம். தந்தை செல்வா என்ன சொன்னாரென்றால் இலங்கையில் தமிழ்மக்களும் சிங்கள மக்களும் ஒன்றாக வாழ்வதற்கு நான் பல முயற்சிகள் செய்தேன். ஆனால், அந்த முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்து விட்டன.

1956 இல் ஒப்பந்தம் செய்தேன். அதனைக் கிழித்தெறிந்தார்கள். 65 இலும் அப்படித்தான் நடந்தது. 72 இல் அரசியல் சாசனத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்தோம். அதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மொத்தத்தில் தமிழ்மக்களுடன் இணைந்து வாழ்வதற்குச் சிங்கள மக்கள் ஒருபொழுதும் வரவில்லை என்பதை தந்தை செல்வா மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவையெல்லாம் இலங்கையில்தான் நடந்தது. இது எமது கடந்த கால வரலாறு. நாங்கள் மனிதர்களாக இருக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் தமிழர்களாக இருக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்று கூறினார்.

ஆனால், வடக்கில் ஏ9 வீதியின் நெடுகிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு,மன்னார், வவுனியா மற்றும் கிழக்கில் அனைத்து இடங்களிலும் இராணுவம் மற்றும் பொலிஸ் துணையுடன் புத்த கோயில்கள் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு அரச மரத்தின் கீழும் புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றன. இராணுவம் கையில் ஆயுதத்துடன் திரிகின்றது. யாராவது அதற்கு எதிராகப் போராட முற்பட்டால் அடிக்கப்படுவார்கள், நொருக்கப்படுவார்கள் அல்லது சுட்டுத்தள்ளப்படுவார்கள். யார் பயங்கரவாதத்தைத் ஊக்குவிக்கின்றார்கள்? இந்நாட்டில் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழலை அரசாங்கம் எவ்வாறு திட்டமிட்டு குலைக்கின்றது?

அண்மையில் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பன்னிரண்டுபேர் இலங்கை வந்திருந்தனர். அவர்களும் ஜனாதிபதியைச் சந்தித்தனர். அவர்களிடமும் ஜனாதிபதி நான் பதின்மூன்றாவது திருத்தத்திற்கு மேலதிகமாகச் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று கூறியிருந்தார். அவர்களும் பத்திரிகைகளுக்குக் கூறினார்கள். ஆனால், அவர்கள் கூறியதற்குப் பின்னர் நான் அப்படிக் கூறவில்லை என்று கூறினார். யாரை யார் ஏமாற்றுகிறார்கள்? இந்த ஏமாற்றத்தின் ஊடாக எதை அவர்கள் நிறைவேற்றப்பார்க்கின்றார்கள்? ஏன் அரசாங்கம் இப்படிச் செயற்படுகின்றது?

அரசாங்கம் ஏன் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க மறுக்கின்றது? ஏனெனில் அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒட்டுமொத்த இலங்கையும் ஒரு சிங்கள பௌத்த நாடாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். அதனால்தான் இந்துக் கோயில்கள் இடிக்கப்படுகின்றன. இஸ்லாமிய பள்ளிவாசல்கள் இடிக்கப்படுகின்றன. இராணுவம், பொலிஸ் துணையுடன் பௌத்த சிங்கள மக்கள் இல்லாத இடங்களில் புத்தர் கோயில்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

வன்னி மக்கள் பலர் பலமுறை இடம் பெயர்ந்திருக்கிறார்கள். பலர் சொந்தங்களை இழந்திருக்கிறார்கள். ஏராளமானோர் சொத்துக்களை இழந்திருக்கிறார்கள், ஏராளமான இளைஞர்களும் யுவதிகளும் சிறார்களும் அநாதரவாக்கப்பட்டுள்ளனர். இப்பொழுது அவர்களை இந்த இராணுவத்தினர் நிம்மதியாக வாழ விட வேண்டும். யாரும் பயமின்றி எழுத வேண்டும். யாவருக்கும் கூட்டம் போடுவதற்கான உரிமை வேண்டும். அவைகள் இங்கு சர்வசாதாரணமாகக் கிடைக்கின்றதா? இல்லை. அதுதான் இன்றைய நிலைமை.

இங்கு நடப்பவைகளைக் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு சர்வதேச சமூகம் ஒன்றும் முட்டாளல்ல. அரசாங்கம் தானாக முன்வந்து பிரச்சினைகளை தீர்க்க முற்படுமாக இருந்தால் இந்த நாடு நன்றாக இருக்கும். அனைத்து இன மக்களும் ஒன்றாக வாழலாம்.

ஒரு வலுவான அமைப்பினால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தின் ஊடாக தமிழ் மக்களும் சிங்கள மக்களுக்கு நிகரான உரிமைகளைப் பெற்று இந்த மண்ணில் சீரோடும் சிறப்போடும் வாழும் நிலையைத் தோற்றுவிக்க முடியும் என்றார். (அ-2-266)

# முல்லை. மாவட்ட செயலக கட்டட தொகுதி வேலைகள் துரிதகதியில்

(கொழும்பு)

முல்லைத்தீவுமாவட்ட செயலகத்தி னதுபுதிய நிர்வாகக் கட்டடத் தொகு திக்கான நிர்மாண வேலைகள் ஆரம் பிக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் தற்போது நடை பெற்று வருகின்றன.

இப்புதிய கட்டடத்தொகுதி அமைய வுள்ள நிலப்பகுதியில் அமைந் திரு க்கும் பழைய கட்டடங்கள் இடிக்கப்ப டவுள்ள நிலையில் அக்கட்டடங்களில் இயங்கி வந்த மாவட்ட செயலகத்தின் பல முக்கிய கிளைகள் முல்லைத்தீவு நகரப்பகுதியில் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

எனவே, புதிய இடங்களில் அமைந்துள்ள குறிப்பிட்ட கிளைகளி னூடாக பொதுமக்கள் தமது வழமை யான சேவைகளை தடையின்றி பெற் றுக் கொள்ளமுடிமென மாவட்ட செய லக வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

அந்த வகையில் மாவட்டப்பதிவகம் சம்பேதுறுவார் ஆலயம் அமைந்து ள்ள பி. டபிள்யூ. டி. சந்திக்கு அரு காமையிலுள்ள ஒரு கட்டடத்திலும் தேர் தல்கள் திணைக்களம், மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம், மாவட்ட தொழிற் துறை அலுவலகம், மாவட்ட கலாசார அலுவலகம், தேசிய மொழிகள் , சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் மாவட்ட அலுவலகம், காணிப்பயன்பாட்டு , திட்டமிடல் தொடர்பான மாவட்ட அலுவலகம், மாவட்ட நன்னீர் மீன்பிடி மற்றும் விரிவாக்கல் அலு வலகம் என் பன மாவட்ட பொது வைத்திய சாலை க்கு எதிர்ப் பக்கமுள்ள அரசாங்க அதி பரின் விடுதிக்கு அருகாமையிலுள்ள ஒரு கட்டடத்திலும் மாவட்ட கிராமிய அபிவிருத்திக் கிளை மற்றும் தேசிய சிறுவர் மேம்பாட்டு அதிகார சபையின் மாவட்ட அலுவலகம் என்பன முல் லைத்தீவு பிரதேசசபை நூலகத்திற்கு அருகாமையிலும் இயங்குகின்றன. (அ-2)

# கூட்டமைப்பை தெரிவுக்குழுவிற்குள் கொண்டு வருவதே எமது நோக்கம்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இன நெருக்கடித் தீர்வு தொடர்பான விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்குள் கொண்டு வரும் நோக்கில் அக்கட்சியினருடன் பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபைத் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்துக்குப் பின்னரான நிலைமையில் சர்வதேச மட்டத்தில் பாரிய சவால்கள் இருக்கும் நிலையில் முஸ்லிம் கட்சி என்ற வகையில் மிகவும் முக்கிய பாத்திரம் எமக்கு இருக்கின்றது. இந்த நாட்டின் இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு உதவ நாம் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

நான் யாருக்கும் ஒழித்து செயற்படவில்லை. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளேன். பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தீர்வை நிறைவேற்றிக் கொள்ளவும் அதற்கு அரசுடன் இணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுப்பதே இதன் நோக்கம். அதைத் தவிர இதில் வேறு நோக்கம் எதுவுமில்லை.

சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு கொண்டு வருவதன் மூலம் இந்தப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமென்று நம்புகின்றோம்.

எனினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவில்லை என்பதற்காக தெரிவுக் குழுவுக்கு வரமாட்டோம் என்று சொல்லும் சிலரும் இருக்கின்றனர். எனினும் எமக்கு இதில் பாரியபொறுப்பு இருக்கின்றது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முதலாவது அடியை எம்மால் எடுத்து வைக்க முடியுமென்று நம்புகிறேன்.

யுத்தத்துக்கு பின்னரான நிலைமையில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற இந்த அரசுக்கு பூரண ஆதரவு வழங்குவோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டில் அடிப்படைவாதம் தலைதூக்க இடமளிக்கமாட்டோம் என்றார். (அ-2)

# உதவி கோருகின்றார்



(யாழ்ப்பாணம்)

போயிட்டி அச்செழுவை சேர்ந்த றொபோட் கிறீன்டன் (வயது 14) என்பவருடைய இரண்டு சிறுநீர கங்களும் பழுதடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவருக்கு சிறுநீரக மாற்று சிகிச்சை செய்வதற்கு 15 இலட்சம் ரூபாய் தேவை என வைத்தியர்கள் தெரிவித்தள்ளனர்.

மேற்படி சிறுவனின் குடும்பம் மிக வறுமை நிலையில் உள்ளதால் கருணை உள்ளம் கொண்ட வர்களிடமிருந்து உதவி கோரி நிற்கின்றார்.

எனவே உதவி புரிய விரும்பும் கருணை வள்ளல்கள் கொமர்ஷல் வங்கியின் 8560 043163 என்ற கணக்கு இலக்கத் திற்கு வைப்புச் செய்து உதவுமாறு வேண்டி நிற்கின்றார்.

மேலதிக விபரம் தேவைப்படின் 07716 25531 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (அ)

# போதைப்பொருள் கடத்திய பிலிப்பைன்ஸ் பிரஜை கைது

(கொழும்பு)

போதைப்பொருளை கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படும் பிலிப்பைன்ஸ் பிரஜையொருவர் பண்டாரநாயக்க விமான நிலையத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேகநபர் போதைப்பொருள் கொண்டு வருவதாக 'கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொக்ஹெய்ன் மாத்திரைகளை விழுங்கியமை தொடர்பாக விசாரணையின் போது தெரியவந்ததைத் தொடர்ந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவரது உடம்பினுள் மறைத்து வைக்கப்பட்ட 30 கொக்ஹெய்ன் மாத்திரைகளை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் பிரிவினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9)

# பொதுக்கூட்டம்

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை ஆராதனை மண்டபத்தில் பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜா, தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டத்தில் செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல், பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பித்தல், தலைமையுரை, பெற்றோர் உரை, புதிய நிர்வாகத் தெரிவு என்பன இடம்பெறவுள்ளன.

இதில் பெற்றோர்கள், பாதுகாவலர்கள், பழைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (அ-3-24)

# மே 7 இல் விடுமுறை

(கொழும்பு)

வெசாக் தின்த்தை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி அரசினால் வழங்கப்பட்டிருக்கும் விடுமுறையை ஆசிரியர்களுக்கும் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசினால் அறிவிக்கப்பட்ட விசேட விடுமுறை தினம் ஆசிரியர்களுக்கும் உரியதாகும் என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். இது தொடர்பில பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ-2)

# பால் உற்பத்தியாளர்கள் போராட்டம்; பால் குளியலில் ஹற்றன் நகரம்!





(கொழும்பு)

ஹற்றன் நகரை அண்மித்து வாழும் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இணைந்து நேற்றுக் காலை ஹற்றன் நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

ஹற்றன் - மல்லியப்பு சந்தியில் ஒன்று கூடிய பால் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மாடுக்ளை அழைத்துவந்து லொறியில் பாலையும் கொண்டுவந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடம் இருந்து மில்கோ அரச நிறுவனம் உள்ளிட்ட ஏனைய சில தனியார் நிறுவனங்களும் பாலைக் கொள்வனவு செய்து வந்தனர்.

எனினும் கடந்த சில வாரங்களாக குறித்த நிறுவனங்கள் பால் கொள்வனவு செய்ய மறுத்து வருவதாகவும் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட பால் போதியளவு இருப்பில் இருப்பதாகக்கூறி வருவதாகவும் பால் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக கொள்வனவு செய்யப்படாதிருந்த பாலை உற்பத்தியாளர்கள் ஆற்றில் வீசியெறிந்தனர்.

பின்னர் கடந்த வாரம் அரச மில்கோ நிறுவனத்திற்குச் சென்று தங்களுடைய பாலை கொள்வனவு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், அதற்கு மில்கோ நிறுவனமும் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதனால் கொதிப்படைந்த பால் உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் இன்று ஹற்றன் நகரத்தில் ஒன்று கூடி விற்பனை செய்யப்படாதிருந்த் பாலை வீதியில் வீசியதுடன் அதில் சிலர் நீராடி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினையால் ஹற்றன் பகுதியில் பால் உற்பத்தியை நம்பி சீவனம் நடத்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிர்க்கதி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# அன்பை கொண்டாடுதல்



## ஆன்மீகம் 44

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

**பயம்**

இயற்கையானது, எல்லா உயிரினங்களுக்குள்ளும் சிறிது பயத்தைப் புகுத்தியுள்ளது. விரோதிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளவும், தடுத்துக் கொள்ளவும் இந்த பயம்தான் உதவுகிறது. சாப்பாட்டில் ருசி ஏற்படுத்த உப்பு சிறிதளவு சேர்க்கப்படுவது போல், மக்களுக்கு சரியானபடி வாழ்வதற்கு இந்த பயம் அவசியம்தான்!

பிறரைத் துன்புறுத்துவதற்கு பயம் கொள்கிறோம். இந்த பயம் நம்மை விழிப்புணர்வோடு இருக்க வைக்கிறது.

தோல்வி ப்ற்றி ஏற்படும் பயம் உங்களை இன்னும் கூர்மையுடையவராக சாதுர்யம் உள்ளவராக ஆக்குகிறது.

பயம் உங்களை அலட்சியப் போக்கிலிருந்து, கவனம் உள்ளவராக மாற்றுகிறது.

பயம் உங்களை உயர்வுகளை மதிக்காத பாவத்திலிருந்து புரிந்துணர்வு மிக்கவராக மாற்றுகிறது.



பயம் உங்களை சோர்வு அல்லது மந்தநிலையிலிருந்து ஜாக்கிரதை உணர்வுக்கு மாற்றுகிறது.

சுத்தமாக கொஞ்சம்கூட பயம் இல்லாத தன்மை, எதையும் அழிக்கும் மனப்பான்மையை ஏற்படுத்திவிடும். ஒரு தாறுமாறான அகங்காரம் பயத்தை அறிவதில்லை. அதேபோல் பரந்த உள்ளமும், விரிந்த உணர்வு நிலையிலும் பயத்தை அறிவதில்லை. அகங்காரம் உள்ளவன் தனது பயத்தை வெளியேற்ற, அழிக்கும் செயல்களில் ஈடுபடுவான். ஆனால், புத்திசாலி அந்த பயத்தை அங்கீகரித்து, அல்லது உணர்ந்து இறைவனிடம் தஞ்சம் புகுகிறான்.

நீங்கள் அன்புக்குக் கட்டுப்பட்டும், சரணாகதியுடனும் இருக்கும் பொழுது அங்கு பயம் என்பதே இல்லை! மமதையும் பயத்தை அறிவதில்லை. ஆனால், இருவித பயமற்ற தன்மைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதுவும் எப்படிப்பட்ட வித்தியாசம்- சொர்க்கத்திற்கும் பூமிக்கும் உள்ள வித்தியாசம்!

பயம் உங்களை நேர்மையானவராக்குகிறது. பயம் உங்களை இறைவனுக்கு மிக அருகில் சரணாகதி அடைய வைக்கிறது. பயம் உங்களை நேரான பாதையில் செல்ல வைக்கிறது. அழிக்கும் நாச வேலையிலிருந்து பயம் உங்களைக் காக்கிறது. இவ்வுலகில் சட்டம், ஒழுங்கு, அமைதி இவை காக்கப்படுவதே பயம் என்ற ஒன்றால்தான்!

பிறந்த குழந்தைக்கு பயம் என்பதே தெரியாது. ஏனெனில், அது முற்றிலும் தன் தாயைச் சார்ந்தே இருக்கிறது. தாயின் அரவணைப்பில் அதற்கு பயம் தெரிவதில்லை. சற்று வளர்ந்த பின் அக்குழந்தை அல்லது ஒரு பூனைக் குட்டி, அல்லது ஒருசிறிய பறவை- இவை யாவும் சுதந்திரமாக, தன்னிச்சையாக வெளியே திரிய ஆரம்பிக்கும் பொழுதுதான் பயம் என்ற உணர்வை அனுபவிக்கின்றன; அப்பொழுது மீண்டும் தாயிடமே வந்து அடைக்கலம் புகுகின்றன! இவ்வாறு வாழ்க்கையை இனிமையாக நிலைநிறுத்துவதற்காக, இயற்கை நமக்குள் பயம் என்ற ஒன்றைப் பதித்து வைத்துள்ளது.

எனவே, பயம் என்பது நம்முள் பதிய வைக்கப்பட்டுள்ள காரணம், மீண்டும் நாம் தோன்றிய இடத்திற்கு, அல்லது மூலஸ்தானத்தை மீண்டும் அடைவதற்கே என்று அறிவோமாக!!!

இப்பொழுது எல்லாம் தங்களது மனோவியாகூலம் (கவலை) என்ற நிலையை(ஆங்கிலத்தில் ஆங்சிக்ஸைட்டி) எப்படிக் கையாள்வதென்று கவலை கொள்கின்றனர். உங்களது கவலை மனச்சங்கடத்தை எப்படித் திறமையாக சமாளிக்கக் கையாள்வது என்பதைப்பற்றிப் பார்ப்போம்.

♦ பாடுங்கள், நடனம் ஆடுங்கள், கொண்டாடுங்கள்! கொண்டாடும் அந்த எண்ணமே உங்களை இசைவான ஒரு நிலைக்கு இட்டுச்செல்லும்.

♦ உங்களுக்காக கவலைப்படு வதை விடுத்து, மற்றவர்களுக்கு என்ன செய்யலாம் என்று பாருங்கள். அவ்வாறு பிறருக்கு சேவைசெய்து சக்தி பெறுங்கள்!

♦ தியாக மனப்பான்மையை ஃகைக் கொள்ளுங்கள்!

♦ மிகப்பெரிய ஒன்றை சாதிக்கும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொண்டு இருப்பதை நினைவு கூர்ந்துகொள்ளுங்கள்!

♦ யோகா, சுவாச நுணுக்கங்கள், தியானம்- இவற்றைப் பயிற்சி செய்யுங்கள்!

♦ இவ்வுலகில் எதுவுமே நிரந்தரமில்லை என்பதை அறியுங்கள்!

♦ நம்பிக்கையோடு இறைமையிடம் சரணடையுங்கள்! ஓர் அதி அற்புத சக்தி உங்களிடம் அன்பு கொண்டு, உங்களுக்கு பாதுகாப்பாக இருந்து, உங்களை பரிபூரணமாக ஏற்றுக் கொள்கிறது என்பதை அறியுங்கள்! இந்த ஆத்மார்த்த ஒன்றிய உணர்வோடு பாதுகாப்பாக உணருங்கள்!

♦ உங்களுக்குள்ளே இருக்கும் சிங்கத்தைத் தூண்டி தைரியமாக இருங்கள்!

♦ சிறிது நரம் எதையும் யூகிக்காமல் சும்மாவே இருங்கள்! கவலை என்பது ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கும் செயலாகும்! எனவே, அதோடு முற்றிலும் சம்பந்தப்படாத, யூகிக்கத் தேவையில்லாத மற்ற செயல்களில் ஈடுபடுங்கள்.

♦ மிக மோசமான விடயங்களையும் எதிர்கொள்வதற்குத் தயாராக இருங்கள்! இது மனதை சீராக வைத்துக்கொள்ள உதவும்!

♦ இதுபோல முன்பு ஒரு சூழ்நிலை ஏற்பட்டபொழுது, அந்த சமயத்தில் பரபரப்பை விடுத்து சாமர்த்தியமாக செயற்பட்டதை நினைத்துக் கொள்ளுங்கள்!


(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 44

## ரேகைகளும் கிரகங்களும்

### புத்தி இரேகை அமைப்பும் பலாபலன்களும்

சப்த இரேகைகளின் இரண்டாவது புத்தி இரேகை. இதுவும் குரு மேட்டின் அடிவாரத்திலிருந்து உற்பத்தியாகிறது. இரேகைகளின் மகத்துவம் பொருந்தியது. புத்தி இரேகையே இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது. உயிர்ப்புள்ள சக்தி குரு விரல் வழியே மூளைக்குச் சென்று வேலை செய்கிறது. மூளையின் வேலை புத்தி இரேகையில் கணிக்கப்படுகிறது. இந்தப்பகுதி இரேகைக்கும் மூளைக்கும் நேரிடையான சம்பந்தமிருந்து வருவதால் ஆங்கில ஆசிரியர்கள் (Head Line)மூளை இரேகை என வழங்குகின்றனர். இந்தப் புத்தி இரேகை, மனோ தர்மம், புத்தியின் போக்கு, நடையுடை முதலிய அநேக மர்மங்களை வெளிப்படுத்துகிறது. சிரசில் ஓங்கார மூளையென்றும், ஆங்கார மூளையென்றும் இருபகுப்புக்களிருக்கின்றன. இலௌகீகத்தில் ஆங்கார மூளையே பெரிதும் வேலை செய்கிறது. மற்றது தத்துவ விசாரம் செய்யும் விஞ்ஞானிகளுக்கு வேலை செய்கிறது. மூளையின் அமைப்பு ஒரு இயந்திரம் போன்றது. மனோ தர்மம் சரியாயிருந்தால்தான் மூளை வேலை செய்யும். மனோ வேகந்தான் வாழ்வில் அடிக்கடி மாறுதலை உண்டு பண்ணி வருகிறது. மனத்தின் செல்வாக்குக்குத் தக்கபடி தேகமும் அமைகிறது. வாழ்வின் எதிர்கால நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மனமே ஒரு திறவுகோலாயிருந்து வருகிறது. உயர்வுக்கும் தாழ்வுக்கும் மனமே காரணம். எத்தகைய மன தர்மமுடையவர், எத்தகைய குணமுள்ளவரென்பதைப்புத்தி இரேகை புலப்படுத்தும். எந்த அளவில் மூளை வேலை செய்கிறதென்பதையும் புத்தி இரேகை அளந்து காட்டுகிறது. மூளையோ மிக்க மேன்மையுடையது. நுட்பமான உணர்வுடையது. கெட்டியான மண்டையோட்டுக்குள் மூளை பாதுகாக்கப்பட்டு வருகிறது. சாஸ்திர சிரேஷ்டராயினும் மூளையை ஆராயுங்கால், புத்திமானுடையது, அல்லது மூடனுடையதென்றாவது கண்டுகொள்ள முடியாது. மூளையின் அமைப்பு கடவுள் சிருஷ்டியில் மனிதர் புத்திக் கெட்டாதவாறு, மகாமர்மம் வாய்ந்த சக்தி நிலையமாயிருந்து வருகிறது. வைத்திய நிபுணர்கள் இன்னும் மூளையைச்சோதித்து வருகின்றனர். ஆயினும், அதிலிருந்து தீமை, நன்மை அறிவதற்கில்லை. ஆனால், கையிலிருந்து உள்ளீடாய் மனம் செய்யும் வேலையை அறியலாம். மூளையின் சிக்கலையோ, விசித்திரத்தையோ புத்தி இரேகை காட்டி விடுகிறது.




சில கைகளில் புத்தி இரேகை தோன்றாது. எல்லைக்குள் புலப்படவில்லையானால், மனோபாவம் எல்லா இரேகைகளிலும் கலந்திருக்கும்.

1. புத்தி இரேகை குருமேட்டின் அடிவாரத்தில் உற்பத்தியாகி ஒழுங்காய் அமைந்திருப்பதைப் படத்தில் பார்க்கவும். இது அபாரமான மனோ தர்மத்தையும், புத்தியின் கூர்மையையும். காட்டுகிறது.

2. புத்தி இரேகை படத்திலுள்ளது போலச் சிறியதாயிருந்தால் மந்தப் புத்தியைக் காட்டும். மூளை விருத்திக்கான அமைப்பில் இல்லை. மேலும் அடிக்கடி நோய் உண்டாவதையும் புத்திஇரேகையிலிருந்து அறியலாம்.

3. புத்தி இரேகையும் ஆயுள் இரேகையும் ஒரே அளவில் சிறியதாய் அமைந்திருக்குமானால், அந்தக் கால அளவில் ஆயுளும் குறைவெனக் கருதவாய்ப்புண்டு.





**சக்தி**

(தொடரும்)

# அதிசய உலகம்...


## நாயின் உதவியுடன் wi-fi உருவாக்கிய அதிசய மனிதன்




வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் wi-fiஎன்பது மிகவும் முன்னேற்றகரமான தொழில் நுட்பமாகும். இதன் மூலம் கேபிள் இல்லாமலே குறிப்பிட்ட தூரத்திற்கு கணனிகளுக்கிடையிலான வலையமைப்பை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இத் தொழில்நுட்பத்தை நாய்கள் வளர்க்கும் ஒருவர் அவற்றின் மலத்தினைக் கொண்டு உருவாக்கியுள்ளார். அது மட்டுமல்லாது அவரது வீட்டிற்கு அண்மையிலுள்ளவர்களுக்கு இலவசமாக அதனைப் பயன்படுத்தவும் வாய்ப்பு வழங்கியுள்ளார்.

## ஆச்சரியத்தில் ஆழ்த்தும் விநோத மரங்கள்





சிறிய பரப்பளவை கொண்டுள்ள போதிலும் சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் கவரும் நாடாக கருதப்படுவது சிங்கப்பூர் ஆகும். இங்கு செயற்கையாக உருவாக்கப்பட்ட பல கண்கவர் சிலைகள், பொருட்கள் என்பன காணப்படுகின்றன.

அதேபோல வித்தியாசமான முறையில் செயற்கையான மரங்களையும் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு மரமும் சுமார் 22 மீற்றர்கள் வரையான உயரத்தைக் கொண்டு காணப்படுவதுடன் 20 தொடக்கம் 85 தொன் நிறைகளை கொண்ட மரங்கள் காணப்படுகின்றன.

## தலையில் அடிபட்ட மனிதர் கணித மேதையாகிய அதிசயம்



ஒரு விபத்து ஒரு மனிதனை முடக்கிப் போட்டு விடும் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், சில நபர்களால் மிகக் கொடூரமாக தாக்கப்பட்ட நபர் ஒருவர் கணித மேதையாக திகழ்வது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்தவர் ஜசோன் பட்கெட்ஸ். 41 ஆண்டுகளுக்கு முன்பு சில ரவுடிகள் தெருவில் சென்று கொண்டிருந்த அவரைக் கடுமையாகத் தாக்கி தூக்கிப் போட்டுவிட்டனர்.

தலையில் பலத்த காயமடைந்த ஜசோனின் மூளை சேதமடைந்து விட்டது என்று மருத்துவர்கள் கூறியதால் கல்லூரிப்படிப்பை தொடர முடியாமல் போனது. ஆனால், தற்போது கணித சூத்திரங்களை மிக தெளிவாக சொல்கிறார். புதிய சூத்திரங்களை உருவாக்குகிறார். புதிய கணித வரைபடங்களை வரைகிறார். தலையில் பலத்த அடிபட்ட ஒரு மனிதனால் இது சாத்தியம் என்றால் இதை ஒரு அரிய அற்புதம் என்று வர்ணிக்கிறது மருத்துவ உலகம்.

## கடற்படைத் தளபதியுடன் அமெ.அதிகாரிகள் சந்திப்பு

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் மற்றும் பிரபுக்கள் தொடர்பான பணியகத்தின் திட்டப் பணிகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து பிரதிச் செயலாளர் வோல்ட்ர் கிவான் உள்ளிட்ட அதிகாரிகள் அண்மையில் கடற்படைத் தலைமையகத்தில் இலங்கை கடற்படைத்தளபதி சோமதிலக்க திசாநாயக்கவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது ஒத்துழைப்புகளை அதிகரிக்கும் நோக்கில் இருதரப்பு உறவுகள் உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அமெரிக்க அதிகாரிகளுக்கு நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன.

(அ-9)

## இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த மேலும் 10 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணித்த இரண்டு படகுகளும் இந்திய கடலோர பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு குறிப்பிடுகின்றது.

கமல் புத்தா மற்றும் வருணீ துவ ஆகிய இரண்டு படகுகளே இவ்வாறு கைப்பற்றப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுடன் இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை 26 ஆக அமைந்துள்ளதுடன் ஆறு படகுகள் இந்திய கடலோர பாதுகாப்பு பிரிவினரிடம் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவினரை நாட்டிற்கு அழைத்து வருவது தொடர்பான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

(அ-9)

## மேதினத்தில் கலந்து கொண்ட ஒருவர் உயிரிழப்பு

மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்ற ஒருவர் தெமட்டகொடை பகுதியில் பஸ் மோதி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

மேதின ஊர்வலத்திற்காக மக்களை ஏற்றிச் சென்ற பஸ் மோதியதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். பத்தேகம பகுதியைச் சேர்ந்த 55 வயதான ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

(அ-9)


## நினைவஞ்சலி

17 ஆம் ஆண்டு

02 ஆம் ஆண்டு



திருமதி
அன்னம்மா அருளம்பலம்



சின்னத்தம்பி அருளம்பலம்
திதி:-பூர்வபுட்ச துவாதசி
03.05.2012

நிஜமாக எங்களோடு வாழ்ந்து எங்களை வாழவைத்து
இன்று நினைவிலும் கனவிலும் எங்களுடன் வாழும்
எங்கள் அன்புத் தெய்வங்களே!
நீங்கா நினைவுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கிறோம்.

மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அல்லைப்பிட்டி

(இ)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 119




யுத்தத்தின்போது கைதான ஜேர்மன் துருப்புகள்-1944

ஹங்கேரியப் பரப்பில் எதிரியை முறியடித்து ஹங்கேரிய மக்களை விடுவிக்கும் நடவடிக்கைகளைத் திட்டமிடுகையில் நாட்டில் இராணுவ அரசியல் நிலவரம் கூர்மையடைந்த தானது, சோவியத் படைத்தலைமையால் பரிபூரணமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கணக்கில் கொள்ளப்பட்டது.

1944 அக்டோபர் தொடக்கத்தில் ஹங்கேரிய மற்றும் யுகோஸ்லாவியாவுடனான எல்லையில் பிரிஸ்லோப் கணவாயிலிருந்து துனாயின் பெரும் வளைவு வரையிருந்த 800 கி.மீ. நீளமுடைய இடத்தை 2-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் அடைந்தன. வலப்புறத்தில், அதாவது, தூக்லின் கணவாய்க்குக் கிழக்கே ருமேனிய எல்லைவரை 4-வது உக்ரேனிய சேனை இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. இடப்புறம், யுகோஸ்லாவியாவில் 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் இயங்கின. 2-வது உக்ரேனிய சேனை ஹங்கேரிய எல்லைகளை அடைந்ததானது, கர்ப்பாத்து மலைகளில் இருந்த ஜேர்மனிய- ஹங்கேரிய படைத் திரட்டு முழுவதையும் பலத்த பக்கவாட்டு தாக்குதலின் அபாயத்திற்கு உள்ளாக்கி 4-வது உக்ரேனிய சேனையின் இயக்கத்திற்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது.

ஹங்கேரிய நாட்டின் பரப்பில் எதிரியின் துருப்புகளை முறியடிப்பதில் முக்கியப்பங்கு 2-வது உக்ரேனிய சேனைக்கு ஒதுக்கப்பட்டிருந்து. க்ளூஜ், ஓர்தியா, தெப்ரேத்சன் பிரதேசங்களில் எதிரியின் படைத் திரட்டை முறியடித்து, நியிரெத்ஹாஸா- சோப் நோக்கி வடக்கு திசையில் முன்னேறி ஊஷ்கரத், மூக்கச்சேவா பிரதேசங்களை பாசிஸ்டுகளிடமிருந்து விடுவிக்க 4-வது உக்ரேனிய சேனையின் துருப்பு களுக்கு உதவுமாறு இதற்குக் கட்டளையிடப்பட்டது.

1944 அக்டோபர் தொடக்கத்தில் 2-வது உக்ரேனிய சேனையில் 40 டிவிசன்கள், 2 பலப்படுத்தப்பட்ட வட்டாரங்கள், 3 டாங்கி, 2 இயந்திரப்படை, 3 குதிரைப்படை கோர்பஸ்கள் இன்ன பிற யூனிட்டுக்கள், படைப்பிரிவுகள், 10,200 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 750 டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகள், 1100 விமானங்கள் முதலானவை இருந்தன. இது தவிர 1-வது மற்றும் 4-வது ருமேனியப் படைகள் (நடவடிக்கையின் ஆரம்பத்தில் இவற்றில் 22 டிவிசன்களும் பின்னர் 17 டிவிசன்களும் இருந்தன) 2-வது உக்ரேனிய சேனையின் படைத் தலைமையின் கட்டுப்பாட்டின் கீழிருந்தன. ஆனால், இந்த ருமேனியப்படை



ஜேர்மனியர்களால் வார்சோவில் தூக்கிலிடப்பட்ட போலந்து நாட்டைச்சேர்ந்த பிரஜைகள்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

யூனிட்டுக்களின் முழுப்பலம் குறைவானதாகத்தான் இருந்தது. உதாரணமாக, 1944 அக்டோபர் 10 ஆம் திகதி 1-வது ருமேனியப்படையில் 30,151 பேர் இருந்தனர். இவர்களிடம் 25,571 சாதாரண துப்பாக்கிகள், 198 இயந்திரத்துப்பாக்கிகள், 276 மார்டர் பீரங்கிகள், 82 போர்க்கள பீரங்கிகள், 87 டாங்கி எதிர்ப்புப் பீரங்கிகள், 30 விமான எதிர்ப்புப் பீரங்கிகள் முதலானவை இருந்தன.

ஜெனரல் பிரீஸ்னெர் தலைமையிலிருந்த தெற்கு படைத் தொகுதியின் துருப்புகள்2-வது உக்ரேனிய சேனையை எதிர்த்து நின்றன. இதில் 8-வது மற்றும் 6-வது ஜேர்மனியப் படைகளும் 2-வது மற்றும் 3-வது ஹங்கேரியப்படைகளும் மொத்தமாக 29 டிவிசன்கள், 5 பிரிகேடுகள், எஃவ் படைத் தொகுதியின் 3-வது டிவிசன்கள் ஆகியவை அடங்கியிருந்தன. இதில் 3500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 300 டாங்கிகளும் 4-வது வான் படையைச் சேர்ந்த சுமார் 550 விமானங்களும் இருந்தன.

அக்டோபர் 6 ஆம்திகதி காலை குறுகிய பீரங்கிப்படை மற்றும் விமானப்படையின் பூர்வாங்கத்தாக்குதலுக்குப்பின் 2-வது உக்ரேனிய சேனையின் முக்கிய தாக்குதல் படைத் திரட்டு பிரதான திசையில் தாக்குதலில் இறங்கியது. கடுமையான சண்டைகள் மூண்டன. இவற்றில் சோவியத்-ருமேனியத் துருப்புகள் எதிரியின் பலத்த பதிலடிகளையும் எதிர்த் தாக்குதல்களையும் முறியடித்து போர்க்களத்தில் பரந்த அளவு தந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டன. பிரதான திசையில் எதிரி பெரும் சக்திகளை சமரில் ஈடுபடுத்தியதைப் பொருட்படுத்தாமல் அக்டோபர் 20 ஆம்திகதி 6-வது கார்டு டாங்கிப்படை ஜெனரல் பிளீயெவ் மற்றும் கர்ஷ்க்கோவின் இயந்திர- குதிரைப்படைப் பிரிவுகளுடன் கூட்டாகச் சேர்ந்து ஒன்றிணையும் திசைகளில் தாக்குதல் தொடுத்து எதிரி தற்காப்பின் முக்கிய மையமாயிருந்த தெப்ரேத்சனை கைப்பற்றியது.

தீஸ்ஸா ஆற்றைக் கடந்ததுடன் தெப்ரேத்சன் நடவடிக்கை முடிந்தது. ஹங்கேரியப் பரப்பில் நடைபெற்ற இந்த முதல் பெரும் நடவடிக்கையில் செஞ்சேனை ருமேனியத் துருப்புகளுடன் சேர்ந்து டிரான்சில்வானியாவின் வடக்குப்பகுதியையும் ஹங்கேரியின் கணிசமான பகுதியையும் (அங்கே நாட்டின் மக்கட் தொகையில் மூன்றில் ஒருபங்கினர் வசித்தனர்) விடுவித்தது. 23 நாட்களில் 2-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் 130-275 கி.மீ. தூரம் முன்னேறி ஹங்கேரியத் தலைநகரமாகிய புடாபெஸ்டின் மீது அடுத்த தாக்குதலைத் தொடுப்பதற்கான முன்தேவைகளை ஏற்படுத்தின. இத்துருப்புகள் நாளொன்றிற்கு 5முதல் 12 கி.மீ. தூரம் வரை முன்னேறின. கடுமையான சண்டைகளில் எதிரிக்கு பெரும் ஆட்சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டன. சோவியத் துருப்புகள் எதிரியின் 10 டிவிசன்களை முறியடித்தன. 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சிறைப்பிடித்தன. 915 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், 793 மார்டர் பீரங்கிகள், 428 கவச வண்டிகள் மற்றும் கவச வாகனங்கள், 416 விமானங்கள், 8 கவச புகைவண்டிகள், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் ஆகியவற்றை அழித்தன. 138 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், 856 பீரங்கிகள், 681 மார்டர் பீரங்கிகள், 386 விமானங்கள், 16 ஆயிரம் சாதாரண மற்றும் தானியங்கித் துப்பாக்கிகள் முதலியவற்றைக் கைப்பற்றின.

2-வது உக்ரேனிய சேனையின் யூனிட்டுக்கள் தெப்ரோத்சன் பிரதேசத்தை அடைந்ததானது, எதிரியின் கர்ப்பாத்துப்படைத் திரட்டின் பின்னணிகளுக்கும் தீவிர அபாயத்தை ஏற்படுத்தியது. இது மத்தியப் பகுதியின் முன்னாலும் 4-வது உக்ரேனிய சேனையின் இடது பிரிவின் முன்னாலும் இருந்த தனது துருப்புகளை வெளியேற்றுமாறு ஹிட்லரின் படைத் தலைமையைக் கட்டாயப் படுத்தியது. 1-வது ஹங்கேரியப் படையின் தளபதி ஜெனரல் மீக்லஸ் மேற்கொண்டு எதிர்ப்பைக் காட்டுவதில் பயனில்லை என்று கண்டு, பாசிச அரசாங்கத்தின் கொள்கை மீதும் ஹங்கேரியில் ஹட்லரின் நடவடிக்கைகள் மீதும் அதிருப்தி கொண்டு தனது படைத் தலைமையில் ஒரு பிரிவினரோடு சேர்ந்து சோவியத் துருப்புகளின் தரப்பிற்கு மாறினான். ஹோர்டி இராணுவத்தை ஆட்கொண்ட நெருக்கடி மேற்கொண்டு தீவிரமடைந்தது, இதில் பிரதிபலித்தது.

போரின்போது கைவிடப்பட்ட பிரிட்டிஷ் படையின் கவசவாகனம்




(தொடரும்)

# அழகிரியே போனாலும் கவலையில்லை

அக்னி நட்சத்திரம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக அழகிரி நட்சத்திரத்தின் சூடு அதிகமாக இருக்கின்றதே என்று சூடு தணியாமல் செல்லத் தொடங்கிவிட்டனர்.

கடந்த இதழில் உமது நிருபருக்கு பேட்டி கொடுத்த மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் இசக்கிமுத்துவை கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கி விட்டார்கள். எங்களை கேள்வி கேட்பதாக இருந்தால் பொது செயலாளர் அன்பழகன் கேட்கலாம். அல்லது தென் மண்டலச் செயலாளர் என்ற அடிப்படையில் அழகிரி கேட்கலாம்.

அதை விடுத்து டி.கே.எஸ். இளங்கோவனுக்கு என்ன அதிகாரம் உள்ளது?என்று கேட்டார் இசக்தி முத்து. இப்படிப் பதில் எழுதும் தைரியத்தை இவருக்கு யார் கொடுத்தது? என்று ஆவேசமானாராம் ஸ்டாலின்!

பொதுவாகவே கட்சியில் இருந்து நோட்டீஸ் அனுப்பினால் வார்த்தைகளில் பவ்யம் காட்டி மன்னிச்சுக் கோங்க... இனிமே இப்படிச் செய்ய மாட்டேங்க என்று தான் பதில் வரும். ஆனால் முதல்முறையாக தலைமையை விமர்சித்து கேள்வி கேட்க உனக்கு என்ன அதிகாரம் என்று மதுரையில்தான் கேள்வி எழுந்துள்ளது.

எனக்கு மரியாதை இல்லாத இடம் சேலமும் மதுரையும்தான். இது தொடரக்கூடாதுன்னா... இவரைக் கட்சியைவிட்டு உடனடியா நீக்குங்க என்று கறாராகச் சொன்னாராம் ஸ்டாலின். கொஞ்சம் பொறுமையா



மு.க.ஸ்டாலின்

இருப்பா என்று கருணாநிதி அமைதிப் படுத்தி இருக்கிறார். இனியும் அமைதியா இருந்தா... எதுவும் சரியா இருக்காது. இதே மாதிரி எல்லா மாவட்டத்துலேயும் பண்ண ஆரம்பிச்சாங்கன்னா... கட்சி என்ன ஆகும்? கட்டுப்பாடு மொத்தமாகக் குலைஞ்சு போறது உங்களுக்கு சம்மதமா? என்று ஸ்டாலின் திரும்பக் கேட்டுள்ளார்.

**சூடான விவாதம் தான்!**

உடனடியாக இசக்கிமுத்துவை நீக்குவதற்கான அறிக்கை தயாராகி உள்ளது. உடனடியா அனுப்ப வேண்டாம். இரண்டுநாள் பொறுமையா இரு என்று கருணாநிதி முதலில் சொல்லி இருக்கிறார். இந்த நேரத்தில் தான் அழகிரியின் அனல் பேட்டி ரி.வி.களில் ஃப்ளாஷ் நியூஸாக ஓடத் தொடங்கியது. கட்சித் தலைவர்கள் ஊருக்கு வரும்போது வரவேற்புத் தர வேண்டும் என்று தி.மு.க. சட்டத்தில் இல்லை என்று அதிரடியாகச் சொல்லி இருந்தார் அழகிரி.

இது ஸ்டாலின் தரப்பை இன்னும் கொந்தளிக்க வைத்தது. மதுரையில் 52 பேரை வெச்சுக்கிட்டு கட்சியில் குழப்பம் பண்றாங்க. இதை இனியும் அனுமதிக்க முடியாது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய 17 பேரையும் நீக்குங்க. அதை பிடிக்காம அழகிரியே போனாலும் போகட்டும் என்று ஸ்டாலின் சொல்லியதாக மதுரைக்கு றெக்கை கட்ட ஆரம்பித்தன செய்திகள்.

**அப்புறம்?**

அழகிரி தனது வழக்கமான வேலையை ஆரம்பித்தார். அது தான்... தயாளு அம்மாளுக்கு போன் செய்தார். கருணாநிதியிடம் சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் அவரிடம் கொட்டித் தீர்த்தார்.

நான் இல்லாத நாளாகப் பார்த்து மதுரைக்கு வந்துட்டுப் போனா... எனக்கு என்ன மரியாதை? என்னுடைய ஆட்களாகப் பார்த்து நோட்டீஸ் அனுப்பினால் இந்தக் கட்சியில் எனக்கு என்னதான் மரியாதை? ஒரு நாள் வந்துட்டுப் போனபோது மதிக்கலைங்கிறதுக்காக இவ்வளவு பண்றாரே... என்னை இவங்க ஒவ்வொருத்தரும் எவ்வளவு தடவை அவமானப் படுத்தினாங்கன்னு சொல்லட்டா? அவங்க மேல எல்லாம் நடவடிக்கை எடுப்பீங்களா? எனக்கு என்ன ஸ்டாலின் மேல பொறாமையா? அவரை ஏதாவது செய்ய வேண்டான்னு தடுத்தேனா? எல்லா ஊர்லேயும் என்னோட ஆட்கள் அவரை வரவேற்கத்தானே செய்யுறாங்க? என்று அழகிரி கேட்டுக்கொண்டே இருந்த எந்த கேள்விக்கும் தயாளுவால் பதில் சொல்ல முடியவில்லை. எனக்கு இதெல்லாம் தெரியாதுப்பா... நீங்க இரண்டு பேரும் ஒத்துமையா இருந்தாப்போதும் என்று திரும்பத் திரும்பச் சொன்னாராம் தயாளு!

**பாவம் அவர் என்ன செய்வார்.**

அடுத்த சமாதானப் புறாவாகச் செல்வி பேசியிருக்கிறார். அழகிரி அவரிடமும் பிடிகொடுக்காமல்தான் பேசினாராம். அமைதியா இருக்கிற என்னை எதுக்கு சீண்டுறீங்க? என்று கேட்டாராம் அழகிரி. பத்திரிகையில எதுவும் பேசாம இருந்தாப்போதும் என்று கூறி இருக்கின்றார். பேச வெச்சிடாதீங்க என்றாராம் அழகிரி.

அழகிரிக்கு தோளோடு தோள் நின்றவர் மதுரை மாவட்டச் செயலாளர். தளபதி வருகையின் போது அளவுக்கு அதிகமாக ஆர்வம் காட்டியதால் அழகிரியால் கண்டிக்கப்பட்டவர்.

அந்தக் கோபத்தில் மா.செ. பதவியை இராஜினாமா செய்து அதற்கான கடிதத்தை அனுப்பி விட்டார். அந்தக் கடிதம் தலைமைக்கு கிடைத்தாலும் அது ஏற்கப்படவில்லை. இதுவும் அழகிரியை கோபம் கொள்ள வைத்ததாம்.

மாவட்ட்ச் செயலாளர் பதவியில் இனி ஒரு நிமிடம் கூட தளபதி இருக்கக்கூடாது. அவரே இராஜினாமா கடிதம் கொடுத்த பின்னர் எதற்காக அதை ஏற்காமல் வெச்சிருக்கணும். என்னை மதிக்காதவரை மதுரை மாவட்ட செயலாளராக வெச்சிருப்பீங்களா? முன்னாள் துணை மேயர் மன்னனை மாவட்டச் செயலாளராக நியமிக்கணும். இதுதான் என்னுடைய ஒரே நிபந்தனை என்று மதுரையில் இருந்து கருணாநிதி தரப்புக்கு கண்டிஷன் போட்டுவிட்டு சென்னைக்கு விமானம் ஏறினார் அழகிரி. அங்கே இருந்து டில்லிக்குப் பறந்தார்.

மன்னனை மாவட்டச் செயலாளராகப் போட்டாச் சுங்கிற தகவலை மட்டும் எனக்குச் சொல்லுங்க என்றபடி டில்லி சென்றவர் அங்கே இருந்து முன்னாள் எம்.எல்.ஏ. மூர்த்திக்கு திடீர் அழைப்பு விட... அவரும் டில்லி சென்றுள்ளார்.

**எப்படி வருவார்?**

இதைச் சொல்லித்தான் அழகிரி ஆட்கள் கொதிக்கிறார்கள். எப்போதுமே மதுரைக்கூட்டம் என்றால் தங்கம் தென்னரசுவைத்தான் தலைமைக் கழகம் அறிவிக்கும்.

2,3 ஆண்டுகளாக மொழிப்போர்த் தியாகிகள் கூட்டத்தில் தங்கம்தான் பேசி இருக்கிறார். இந்தத் தடவை வம்பு இழுப்பதற்காகவே ஸ்டாலின் ஆதரவாளரை அனுப்புகி றார்கள் என்று கோபமாகிறார்கள்.

போகிற போக்கைப் பார்த்தால் வேறு ஏதோ ஒரு முடிவில் தான் இது கொண்டுபோய் விடும் போல? என்று நாம் சொன்னதை ஆமோதித்துவிட்டு அடுத்த மேட்டரை ஆரம்பித்தார்.

# உள்வீட்டு விவகாரம் சூடு பிடிக்கின்றது

பொலிஸ் உயர் அதிகாரிகள் லெவலில் கொத்தாகப் போடப்பட்ட பதவி உயர்வு கம் மாறுதல்கள் லிஸ்ட் கடந்த 3, 4 மாதங்களாகவே எதிர்பார்க்கப்பட்டதுதான். தமிழகச் சட்டசபையில் பொலிஸ் மானியக் கோரிக்கை வரப்போகிற நேரத்தில் எதிர்க்கட்சித் தரப்பில் தமிழக பொலிஸ் உயர் அதிகாரிகள் பதவி உயர்வு, தஞ்சை சரகம் போன்ற முக்கிய பதவிகளில் அதிகாரிகள் நியமனம் இல்லாமல் காலியாக கிடப்பது பற்றி கேள்வி எழுப்பத் தயாராகின்றார்கள் என்பது ஆட்சி மேலிடத்துக்கு எட்டியது. அதன் பின்னர்தான் பைல்கள் தூசி தட்டப்பட்டு கொத்தாக ஒரே நேரத்தில் மாறுதல் உத்தரவுகள் போடப்பட்டனவாம்.

**மதுரைக் கமிஷனரின் மாற்றம்**

மதுரை பொலிஸ் கமிஷனராக இருந்த கண்ணப்பன் அதிரடிக்கு பெயர் பெற்றவர்.

சென்னையில் இருக்கும் குடும்பத்துடன் சேர்ந்து இருக்கலாம் என்று அவராகவே விரும்பிக் கேட்டுக் கொண்டதன் பேரில் பரங்கிமலையை தலைமை இடமாகக் கொண்ட வடக்கு மண்டல ஐ.ஜி.யாக நியமிக்கப் பட்டுள்ளார்.

மதுரைக்கு புதிதாக வந்திருப்பவர் கண்ணப்பன் மாதிரி துடிப்பாகச் செயற்பட்டால்தான் மதுரையை கன்ட்ரோல் பண்ண முடியும் என்கிறார்கள்.

**பாசி வழக்கில் பிரமோத் குமார் சிக்குவது உறுதிதானா?**

திருப்பூர் பாசி நிறுவன மோசடி



மு.க.அழகிரி

வழக்கில் பொலிஸ் ஐ.ஜியான பிரமோத்குமாரின் ஜாமீன் தள்ளுபடி ஆகிவிட்டது. டில்லிக்குப் பக்கத்தில் புதிய வீடு கட்டி இருக்கிறாராம் பிரமோத்குமார். அவரது உறவினர் வழியில் வந்த பணத்தில் கட்டப் பட்டதாகச் சொல்கிறாராம்.

ஆனால் திருப்பூர் விவகாரத்தில் கிடைத்த பணத்தில்தான் வீடு கட்டப்பட்டது என்கிறது சி.பி.ஐ. இதற்கான கேள்வித் தாள்களையும் தயாரித்துக் கொண்டு பிரமோத் குமாரிடம் கேட்க முயன்றனர். அதற்குள் டில்லிப்பக்கம் போனவர் எஸ்கேப். எப்படியும் அவரைக் கைது செய்து அழைத்து வருவோம் என்று சொல்கிறார்கள் சி.பி.ஐ.யின் டி.ஐ.ஜியான செங்கதிர் தலைமையிலான டீம்.

இந்த வழக்கிலாவது சி.பி.ஐ. உண்மைக் குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துகிறதா என்று பார்ப்போம் என்று நாம் சொன்னதை புரிந்து சிரித்தபடியே இறக்கைகளை சிலுப்பி எழுந்து கழுகார்... நின்றார்!

பெரிய கோடீஸ்வரர். கடந்த ஆட்சியில் கொடிகட்டிப் பறந்தார். அதனாலேயே இந்த ஆட்சியில் சிக்கினார்.

இது எல்லாம் பாலிடி க்ஸ். இருக்கட்டும் ஆனால் அவரது மக ளுக்கு ஒரு சோகம் என்று சொல்லி சிலர் சொல்லிவரும் கதையை கேட்கவே பரிதாபமாக இருக்கின்றது.

**ஜூனியர் விகடன்**

தனது வீட்டில் வேலை பார்த்த ட்ரைவருடன் கோடீஸ்வரரின் மகளுக்கு காதல் ஏற்பட்டதாம். இது பெற்றோருக்கு பிடிக்கவில்லை. ஒருநாள் ட்ரைவரை அலேக்காகத் தூக்கி சென்று இல்லாமலேயே ஆக்கிவிட்டார்களாம்.

அப்போது தி.மு.க. ஆளும் கட்சியாக இருந்ததால் அந்த அப்பாவி ட்ரைவரின் குடும்பத்தால் எதுவும் செய்ய முடியவில்லையாம்.

இப்போதாவது மகனின் சாவுக்கு நீதி கிடைக்குமா? என்று கேட்க ஆரம்பித்து இருகிறார்கள்.

சம்பவம் நடந்த இடமான மலைச்சாரல் ஊரில் என்றபடி கிளம்பிச் சென்றார்.

# பொதுமக்களின் காணிகளிலுள்ள படையினர் வெளியேற வேண்டும்

## நல்லை ஆதீன குரு முதல்வர் ரணிலிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்) —

**யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் காணிகளிலுள்ள இலங்கை படைத்தரப்பினர் வெளியேற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவிடம் நல்லை ஆதீன குரு முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சிகளின் மேதினத்தில் கலந்து கொள்வதற்காக அங்கு விஜயம் செய்த ரணில் விக்ரமசிங்க நல்லை ஆதீன குரு முதல்வரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின் போதே நல்லை ஆதீன குரு முதல்வர் ரணில் விக்ரமசிங்கவிடம் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இச்சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் பொதுமக்களின் காணிகளில் தொடர்ந்து தங்கியுள்ள இலங்கை படைத்தரப்பினரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிவதுடன் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முன்வர வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் வேலையில்லாப் பிரச்சினை பாரிய பிரச்சினையாக உள்ளது. வேலையில்லாப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக இங்கு மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என நல்லை ஆதீன குரு முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்ரமசிங்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இருந்த போதிலும் இனப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. நான் கடந்த தடவை யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போது அன்று மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளையே இன்றும் எதிர்நோக்குவதைக் காண்கின்றேன்.

ஜெனீவாவரை எமது நாட்டுப் பிரச்சினை இன்று சென்றுள்ளது. தமிழ்க் கட்சிகளைப் போன்று நவ சிஹல உறுமய உள்ளிட்ட ஏனைய கட்சிகளும் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். இதற்காக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சியும் கவனம் செலுத்தியுள்ளது. ஆனால் அரசாங்கமே இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். உங்களின் வேண்டுகோளை ஏற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தூதுக்குழுவினர் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொள்வார்கள் எனக் கூறியுள்ளார்.

இச்சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தேசிய அமைப்பாளர் தயாகமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான காமினி ஜயவிக்ரம பெரேரா, விஜயகலா மகேஸ்வரன், கயந்த கருணாதிலக்க, அனோமா கமகே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ-2)

# தி.மு.கவின் டெசோ கூட்டத்திற்கு திருமாவளவனுக்கு அழைப்பில்லை

(சென்னை)

தி.மு.க கூட்டணியில் இடம்பெற்றிருந்தும் டெசோ கூட்டத்திற்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக தமிழ் ஈழ ஆதரவாளர்களின் சார்பில் தி.மு.க தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் அண்மையில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன், சுப்புலட்சுமி ஜெகதீசன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான டெசோ அமைப்பு மீண்டும் உருவாக்கப்பட்டது. டெசோ தலைவராக கருணாநிதி செயற்படுவார் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இக் கூட்டத்திற்கு தீவிர தமிழ் ஈழ ஆதரவாளரும், தி.மு.க கூட்டணியில் இடம்பெற்றுள்ளவருமான விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் அழைக்கப்படாதது பலரது புருவத்தை உயர்த்த வைத்தது.

கடந்த 2009 இல் இலங்கைப் போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது அதனைத் தடுத்து நிறுத்த அப்போது தமிழக முதல்வராக இருந்த கருணாநிதி ஓங்கி குரல் கொடுக்கவில்லை என்று கடுமையான விமர்சனம் எழுந்தது.

கூட்டம் முடிவடைந்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார் கருணாநிதி. அப்போது தீவிர தமிழ் ஈழ ஆதரவாளரான திருமாவளவன் டெசோ கூட்டத்தில் பங்கேற்காததை மனதில் கொண்டு டெசோ அமைப்பில் வேறு கட்சிகள் இடம்பெறுமா? என்று கேட்ட போது அதற்கு கருணாநிதி தெளிவான பதிலை அளிக்கவில்லை.

இது தொடர்பாக திருமாவளவன் செய்தியாளரிடம் கருத்துரைக்கையில், டெசோ கூட்டத்திற்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று கூறினார்.

அதேசமயம் வரும் நாட்களில் தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் கட்சியின் முன்னணியினரோடு கலந்தாலோசித்து அது பற்றி பரிசீலிக்கப்படும் என்று திருமாவளவன் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தி.மு.க.வின் தமிழீழம் குறித்த வாக்கெடுப்பு விவகாரம்

## ஜி.கே.வாசன் மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் தமிழீழம் அமைத்தல் தொடர்பான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என தி.மு.க. கூறுவதை ஆதரிக்க தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள காங்கிரஸ் கட்சியின் மத்திய அமைச்சரான ஜி.கே.வாசன் மறுத்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வாதார செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதும் புனர்வாழ்வுக்கு உதவுவதுமே காங்கிரஸின் முன்னுரிமை நடவடிக்கைகளாகும் என அவர் கூறினார்.

தமிழீழ ஆதரவு நிறுவனத்துக்கு புத்துயிரளிக்கும் தி.மு.கவின் செயல் அதன் காங்கிரசுடனான உறவைப் பாதிக்குமா எனக் கேட்டபோது வாசன் நேரடியாகப் பதில் கூறாது காங்கிரஸ் இலங்கைத் தமிழர்களுக்கு ஆகக் கூடியளவில் உதவியது எனவும் மத்திய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழுவில் தீர்மானத்தை ஆதரித்தது எனவும் கூறினார். (அ-2)




யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டியில் சம்பியனாகிய சுழிபுரம் விக்டோறியா கல்லூரி அணியையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற வடமராட்சி வட. இந்து மகளிர் கல்லூரி அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.செல்வதீபன்)

# தமிழ்க்கட்சிகள் ஒன்றுபடுவதை இந்தியா விரும்பவில்லை

## விநோ எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**ஆயுத போராட்ட காலத்தில் இயக்கங்களை முட்டி மோதவிட்டவர்கள் இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும்தான். எனவே, நாம் இனியாவது இதயசுத்தியோடு உண்மையாக, நேர்மையாக, ஒற்றுமையாக வந்து எமக்குள் ஒற்றுமையை வளர்த்தால்தான் அரசாங்கத்திடம் பலமாக எதையும் பெறமுடியும். அதுவரைக்கும் நாம் அரசியல் தீர்வை எட்டவும் முடியாது. எமது மக்களுக்கு நிம்மதியான வாழ்வை ஏற்படுத்தவும் முடியாது என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வவுனியா கிளையின் ஏற்பாட்டில் தொழிலாளர் தினமான நேற்று முன்தினம் வவுனியா நக்ரசபை கலாசார மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்ற போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

தொழிலாளர் தினம் இலங்கையில் இன்று அரசியலாக்கப்பட்டுள்ளது. வவுனியாவிலும் கூட தொழிலாளர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கு தொழிற்சங்கங்கள் அல்லது பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர்களுக்கான குரல் கொடுக்கும் பொது அமைப்பு இல்லாத காரணத்தால் தொழிலாளர் பிரச்சினைகளை தொழிலாளர்களே முன்வைத்து கதைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

அதற்குக் காரணம் எங்களுக்கு பிரச்சினையுள்ளது. தமிழ் மக்களை பொறுத்தவரை தொழிலாளர்களாக இருக்கலாம். அரசியல்வாதிகளாக இருக்கலாம். அல்லது சாதாரண மக்களாக இருக்கலாம். எல்லோருக்கும் மிகப் பெரிய பிரச்சினையுள்ளது. நாம் பெரும் இடப்பெயர்வுகளாலும் யுத்தத்தாலும் துன்பங்களையும் வேதனைகளையும் சந்தித்து பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்பட்டதன் விளைவாக தேவைகள் நிறையவே இருப்பதனாலும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் நாம் மேடைகளாக பயன்படுத்த வேண்டியுள்ளது.

நாம் அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். அது தந்தை செல்வா காலத்தில் இருந்து ஏமாற்றப்படுகின்றோம். ஆனால், நாம் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஐக்கியப்பட்டுள்ளோம்.

ஆனால், அங்கு நாம் எவ்வளவு உண்மையாகவும் நேர்மையாகவும் இணைந்துள்ளோம் என்றால் இது சந்தேக மானது தான். தந்தை செல்வநாயகம் காலத்திலும் நாம் ஒன்றுபட்டிருக்கவில்லை. அமிர்தலிங்கம் காலத்திலும் ஒன்றுபட்டிருக்கவில்லை.

இந்திய அரசாக இருந்தாலும் இலங்கை அரசாக இருந்தாலும் சரி நாங்கள் ஒற்றுமைப்படக்கூடாது என்பதில் குறியாக இருக்கின்றனர்.

எனவே, நாம் இனியாவது இதய சுத்தியோடு உண்மையாக, நேர்மையாக, ஒற்றுமையாக வந்து எமக்குள் ஒற்றுமையை வளர்த்தால் தான் அரசாங்கத்திடம் பலமாக எதையும் பெறமுடியும். அதுவரைக்கும் நாம் அரசியல் தீர்வை எட்டவும் முடியாது. எமது மக்களுக்கு நிம்மதியான வாழ்வை ஏற்படுத்தவும் முடியாது என்றார். (அ-2)

# ஜயந்த விஜேசேகர கட்சி தாவினார்

ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகர நேற்று முன்தினம் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டார்.

கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பேரணியாக சென்ற அமைச்சர் விமல் வீரவன்சவை தனது ஆதரவாளர்களுடன் சந்தித்த விஜேசேகர தான் தேசிய சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டு அதற்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்தார்.

ஜயந்த விஜேசேகர ஜே.வி.பியில் இருந்து மக்கள் போராட்ட அமைப்பில் இணைந்து செயற்பட்ட அந்த அமைப்பு அரசியல் கட்சியை ஆரம்பிக்கும் முன்னர் அதில் இருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நவீன நகரமயப்படுத்தல் திட்ட கலந்துரையாடல்

(முல்லாவி)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள முல்லைத்தீவு நகரம் மற்றும் ஒட்டுசுட்டான் நகரப் பகுதிகளினை நவீன நகரமயமாக்கல் திட்டத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கில் முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ,முல்லைத்தீவு இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஆகியோரின் தலைமையில் நேற்று காலை 10 மணிக்கு அரச, அரசசார்பற்ற உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடனான சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் நகரத்திட்டமிடல் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களுடைய அணியினர் மேற்படி ஆய்வுகளின் தகவல்களை திரட்டியுள்ளனர்.

இதன் போது எதிர்காலத்தில் 20 வருடங்களை நோக்கிய நகர வளர்ச்சி திட்டங்களின் நகர்வுகள் எப்படி அமைய வேண்டுமென பொதுமக்கள் அரச அதிகாரிகளால் கருத்து பகிரப்பட்டதுடன் இந்நிகழ்வில் பல்வேறு வகைப்பட்ட தரவுகளும் பகிரப்பட்டன.

இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட அரச அதிபர், முல்லை. இராணுவத்தளபதி, மேலதிக அரசாங்க அதிபர், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஜனாதிபதியின் இணைப்பாளர் க.கனகரத்தினம் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (அ-3-15)



சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொதுநூலகத்தினரால் நடத்தப்பட்டுவரும் விழிப்புணர்வுச் செயற்பாட்டினையொட்டி நடைபெற்ற சிறுவர்களை மையப்படுத்தி சிறுவர் அரங்கம் எனும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வளவாளர் திருமதி ஜெ.சந்திரகாந்தன் நெறிப்படுத்தலின்கீழ் நடைபெறுவதைப் படத்தில் காணலாம்.

(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

# விவசாய டிப்ளோமாவுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் விவசாய டிப்ளோமா கற்கைநெறி 2013/2015 அனுமதிக்கான போட்டிப்பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளதாக பேராதனை விவசாயத் திணைக்கள விவசாயப் பணிப்பாளர் நாயகம் கே.என். மான் கோட்டே அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை எதிர்வரும் ஜுலை மாதம் 28 ஆம் திகதி தமிழ் அல்லது சிங்களம் ஆகிய மொழிகளில் அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், மாத்தறை, திருகோணமலை, வவுனியா, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

இவ்வனுமதிக்கான தகைமைகளாக க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய 3 பாடங்களிலும் கட்டாயமாக திறமைச்சித்தியும் சமூகக்கல்வி, விவசாயம் ஆகிய பாடங்களுள் ஏதாவது ஒன்றில் திறமைச்சித்தியுடன் 2 இற்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஏதாவது மூன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது மேற்கூறிய க.பொ.த (சா/த) தகைமையுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் சித்தி, க.பொ.த (உ/த) கணிதப்பிரிவில் இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் தகுதியாக கருதப்படமாட்டாது.

ஆங்கில மொழியில் கற்கை நெறியை பயில விரும்பின் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 31 ஆம் திகதி அன்று 17 வயதிற்கு குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரியினால் ரூபா 400 பெறுமதியான காசுக்கட்டளையொன்றை விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு பேராதனை தபால் நிலையத்தில் மாற்றக்கூடியவாறு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31 அம் திகதி அல்லது அதற்கு முன்பாக பணிப்பாளர், விரிவாக்க பயிற்சிப் பிரிவு, விவசாயத்திணைக்களம், பேராதனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாய கற்கைநெறி தொடர்பான மேலதிக விபரங்களை கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானி பத்திரிகையிலோ வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (அ-9)

# தட்டுவன்கொட்டி கிராமத்தில் அரை நிரந்தர வீடுகள் அமைப்பு

(ஆனையிறவு)

சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான அமைப்பினால் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தட்டுவன் கொட்டி கிராமத்தில் உள்ள குடும்பங்களுக்கு நிரந்தரவீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் பகுதி சேத வீடுகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இக்கிராமத்திற்கு குடிநீர்ப் பிரச்சினை தொடர்கதையாக உள்ளது. பவுசர் மூலமே நீரைப் பெறவேண்டிய நிலை உள்ளது.

இக்கிராமத்திற்கு நிரந்தரமாக நீர்வசதி இல்லாத காரணத்தால் மக்கள் அவதியுறுகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் நீர்ப்பற்றாக் குறையையும் நிவர்த்தி செய்யுமாறு அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

# எதிர்க்கட்சிகளின் மேதினக்கூட்டத்தில் ஐந்து பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சிகள் இணைந்து நடத்திய மேதினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஐந்து பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் யாழ்.சென்றோக் விளையாட்டு மைதானத்தில் நடத்திய மேதினக் கூட்டத்திலேயே இந்தப் பிரேரணைகளை ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கூட்டத்தில் முன்வைத்தார்.

பிரேரணைகள் பின்வருமாறு,

இலங்கை வரலாற்றில் ஒருபோதுமே நடைபெற்றிராதவாறு இன்று வாழ்க்கைச் செலவு உயர்ந்து பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகி முழுப் பொருளாதாரமும் வீழ்ச்சியடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் ஆகிய தொழில் புரியும் அனைத்து மக்களும் மென் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தோட்டத்துறை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்குமாறும் விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்குநிவாரணங்களைவழங்குமாறும்தொழில் புரியும் மக்களின் சுமையை குறைக்கும் பொருட்டு அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவுக்கும் அன்றாட தேவைகளுக்கு ஏற்பவும் 7 ஆயிரத்து 500 ரூபாவால் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இனங்களுக்கு மத்தியில் மீண்டும் சந்தேகமும் நம்பிக்கையின்மையும் அமைதியின்மையும் உருவாவதற்குள்ள வாய்ப்புகளை ஒழித்த அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதியளித்துள்ளவாறு அனைத்து இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை முன் வைக்க வேண்டும்.

தொழிற்சங்க போராட்டங்களை அடக்கி அப்பாவி தொழிலாளர்களை கொலை செய்து எதுவித வழக்கு விசாரணையுமின்றி நீண்ட காலமாக தடுத்து வைத்தும் சமூகத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய சகல விதமான ஜனநாயக உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் மீறுகின்றமையினாலும் பழிவாங்கல்களின்றி சுதந்திரமாகவும் வாழக்கூடிய ஜனநாயகமும் அடிப்படை உரிமைகளும் ஆட்சி புரிகின்ற சமூகமொன்றை கட்டியெழுப்புமாறு அரசாங்கத்தை வற்புறுத்துகின்றோம்.

வெளிநாட்டுத்தொழில்புரிவோருக்கு கிடைக்க வேண்டிய தொழிலாளர் உரிமைகள் மற்றும் நலனோம்புகை சிறப்புரிமைகள் கூட சட்டரீதியாக கிடைப்பதில்லையென்பதாலும் உழைப்பை ஏற்றுமதி செய்கின்ற நாடுகளுக்கிடையே பொதுச் சேவை நிபந்தனைகளை உருவாக்குமாறும் வெளிநாடுகளில் தொழிலில் ஈடுபடுகின்ற ஊழியர்களது உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளை உறுதிசெய்கின்றதான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 189 ஆம் இலக்க சமவாயத்திற்கு ஒப்புதலளிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மூன்று தசாப்தங்களுக்கும் அதிக காலம் நிலவிய யுத்தத்தின் துர்ப்பாக்கியமானதொரு பெறுபேறு இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு வாழ்விடங்களை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

உடனடியாக அமுலாகும் வகையில் இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி காணிகளை இழந்த உரிமையாளர்களுக்கு அவர்களுக்கான காணி உரிமையை மீண்டும் பெற்றுக் கொடுத்து சிவில் நிர்வாகத்தை உறுதி செய்து அவர்களது வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் நிவாரணங்களையும் வழங்குமாறும் அரசாங்கத்தை வற்புறுத்துகின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சியினால் ஐந்து பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன.

(அ-6)

## இலங்கையர்கள் இருவரை நாடுகடத்த கனடா உத்தரவு

(கொழும்பு)

எம்.வீ.சன்ஸி கப்பலில் கடந்த 2010 ஆம் ஆண்டு கனடா போய் சேர்ந்த 492 பேரில் மேலும் இருவர் திருப்பி அனுப்பப்படவுள்ளனர். இவர்களில் ஒருவர் ஆட்களை கடத்தியதாகவும் மற்றவர் தமிழ் போராட்ட குழுவின் உறுப்பினர் எனவும் குற்றம் காணப்பட்டுள்ளனர்.

இந்த இருவர் உட்பட திருப்பி அனுப்பப்பட வேண்டுமென கட்டளை பிறப்பிக்கப்பட்டவர்கள் தொகை 19 ஆகும். நாடுகடத்தப்பட உத்தரவிடப்பட்ட இந்த இருவரினதும் பெயர்கள் வெளியிடப்படவில்லை.

இவர்களில் ஒருவர் 2005 தொடக்கம் 2006 காலப்பகுதியில் புலிகளுடன் சேர்ந்து இயங்கியவர் எனவும் இவர் பலவந்தமாக புலி இயக்கத்தில் இணைக்கப்படவில்லை எனவும் அறியப்பட்டுள்ளது.

இரண்டாவது நபர் கொழும்பிலிருந்த போது கனடாவுக்கு ஆட்களை கடத்தும் கப்பலில் பயணிப்பதற்காக பணம் கொடுத்து இணைந்து கொண்டார். இவர் பாங்கொக் போய்ச் சேர்ந்தபின் சன்ஸி கப்பலின் பணியாளர் குழுவில் குறைந்த சம்பளத்தில் சேர்க்கப்பட்டார்.

சன்ஸி பயண அமைப்பாளரான தயாகரன் மார்க்கண்டு கடந்த மாதம் பிரான்ஸில் கைது செய்யப்பட்டார். 2009 இல் 76 இலங்கையர்களை கனடாவுக்கு கொண்டு சென்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த வருடம் நால்வர் ரொறன்ரோவில் கைது செய்யப்பட்டனர்.

மனித கடத்தலில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வகை செய்யும் சட்டங்களை பழைமைவாதிகள் கொண்டு வரவுள்ளனர். ஆனால் இவ் வகையான சட்டம் தேவையில்லை என எதிர்க்கட்சிகள் விவாதிக்கின்றன.

(அ-2)

## எனக்கெதிராக மிகப்பெரிய சதித்திட்டம் தீட்டப்படுகிறது

### அமைச்சர் மேர்வின் தெரிவிப்பு

(கொழும்பு)

தனக்கு எதிராக புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ள அமைச்சர் மேர்வின் சில்வா தனக்கு எதிராக மிகப் பெரிய சதித்திட்டங்கள் சிலரினால் முன்னெடுக்கப்படுவதாகவும் நேற்றைய தினம் தெரிவித்துள்ளார்.

நடுநிலையாகச் செயற்படுமாறு ஊடகங்களிடம் அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளதுடன் அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் பக்கச்சார்பின்றி செய்திகளை வெளியிடுமாறும் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியதாக அவரது ஊடகச் செயலாளர் ரொஹான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவருக்கு எதிரான சதித்திட்டங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்கு ஊடகங்கள் முன்னுரிமையளிக்கின்றன. மக்களுக்கு நடுநிலையான தகவலையே வழங்க வேண்டும் என அமைச்சர் கூறியுள்ளார்.

மேதினக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மக்களுக்கு அறிவிப்பதற்கு பிரதேச சபையின் கடிதத்தலைப்புகளை அமைச்சர் மேர்வின் சில்வா பயன்படுத்தியதாக களனிப் பிரதேசசபைத் தலைவரினால் தெரிவிக்கப்பட்ட குறறச்சாட்டை தொடர்ந்து அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

எனக்கு போதுமானளவு மக்கள் உள்ளனர். போதுமானளவு புகழ் உண்டு. மக்களை திரட்டுவதற்கு இந்த உத்திகளை கையாள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. இந்தக் கடிதங்களுக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. என் மீது அர்த்தமற்ற வகையில் அவர்கள் குற்றஞ்சாட்டாமல் அவர்கள் பொலிஸ் முறையிட வேண்டும். நாட்டில் சட்டம் ஒன்று உள்ளது. சட்ட அதிகாரிகள் உள்ளனர். அவர்களால் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியும் என அமைச்சர் கூறினார். (அ-2)

## தேறிவருகிறார் பொன்சேகா

(கொழும்பு)

தனது கணவரின் நுரையீரல் நோய் தொடர்பான நிலைமையில் தற்போது முன்னேற்றம் காணப்படுவதாகவும் வைத்தியர்களின் ஆலோசனையைத் தொடர்ந்து தனது கணவர் இன்னும் சில நாட்களில் வைத்தியசாலையிலிருந்து வெளியேற அனுமதிக்கப் படலாமெனவும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

ஆயினும் தன் கணவரின் உடல் நிலை மோசமடையுமாயின் அவர் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் மகஸின் சிறைச்சாலையில் சிகிச்சையளிக்க போதிய வசதியில்லை. அவசர நிலைமையேற்படின் அங்குள்ள ஆவி மருந்து வழங்கும் இயந்திரம் உதவப் போவதில்லையெனவும் அவர் கூறினார்.

ஆஸ்துமா நோயினால் சரத் பொன்சேகா வருந்திக்கொண்டிருப்பதாக வைத்திய அறிக்கைகளையும் சிபாரிசுகளையும் நீதிமன்றத்தில் சரத் பொன்சேகா சார்பான சட்டத்தரணிகள் சமர்ப்பித்திருந்ததை தொடர்ந்து அவரை வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து சரத்பொன்சேகா கடந்த சனிக்கிழமை நவலோகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.


(அ-2)



தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியின் ஏற்பாட்டில் வன்னிப்போரினால் பாதிப்புக்குள்ளாகி அங்கவீனர்களாகிய நூற்றுக்கு மேற்பட்டோரை இலங்கைக்கான பிரான்சின் தூதுவர் சிஸ்ரின் றொகிசான் அண்மையில் கிளி.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் சிஸ்ரின் றொகிசான் உள்ளிட்டோர் கலந்துரையாடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)

# ஆப்கானின் நிலைமையை சீராக்க இந்தியாவின் கரம் உறுதியளிக்கும்

## மன்மோகன் தெரிவிப்பு



ஆப்கானிஸ்தானில் தற்போது தலிபான்களால் அமைதியற்ற சூழல் நிலவி வருகிறது. இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் அமைதி. குடியாட்சி மற்றும் வளம் போன்றவைகளை மேம்படுத்துவதிலும் இந்தியா உதவியாக இருக்கும் எனவும் தற்போதைய நெருக்கடியான சூழலில் இரு நாடு உறவும் மேலும் வலுப்படுத் தப்படும் எனவும் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

இரு நாட்டு உறவு குறித்தான முதலாவது இந்திய –ஆப்கானிஸ்தான் கவுன்சிலின் கூட்டத்தை வரவேற்ற பிரதமர், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் மற்றும் பிற தலைவர்களுக்கும் தன் வாழ்த்துக்களை தனது வீட்டில் வைத்து சந்தித்த ஆப்கானிஸ்தான் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ரசோ லிடம் தெரிவித்துக்கொண்டதாக இந்திய வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

மேலும் ஆப்கானிஸ்தான் நாட்டின் ஸ்திரத்தன்மை, மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாடுகளில் தாராளமாக இந்தியா உதவி செய்து முக்கிய பங்காற்றி வருவதாகவும் அதற்காக தாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் ரசோல் தெரிவித்ததாக செய்தி தொடர்பாளர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 2011 ஆம் ஆண்டு இந்திய பிரதமர் மற்றும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து விவாதிக்கும் இரு நாட்டின் அமைப்புகளின் கூட்டத்தை வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மற்றும் ஆப்கானிஸ்தான் வெளியுறுவுத்துறை அமைச்சர் ரசோல் தொடங்கிவைத்தனர். (அ-2)

# ஈழத்தமிழர்கள் நலனில் மௌனித்துவிட்டு தனி ஈழம் கோருவது ஏமாற்று வேலை

## கருணாநிதி மீது வைகோ பாய்ச்சல்



(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி தனி ஈழம் கோருவது ஏமாற்று வேலை என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

மே தினத்தையொட்டி ம.தி.மு.க தலைமையகத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ நேற்று முன்தினம் கொடியேற்றி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, இந்திய அரசின் துணையுட தான் இலங்கை அரசு ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்தது.

அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி தன் கடமை யைச் செய்யத் தவறினார். ஈழத் தமிழர்களுக்காக முத்துக்குமார் உயிரை மாய்த்துக் கொண்டபோது கருணாநிதி இரங்கல் கூட தெரி விக்கவில்லை. பிரபாகரனின் தாயார் பார்வதி அம்பாள் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில் அவரை இறங்கவிடாமல் சென்னை விமானநிலையத்திலேயே திருப்பி அனுப்பியதற்கு கருணாநிதிதான் காரணம்.

இப்படியெல்லாம் நடந்துவிட்டு இப்போது தமிழ் ஈழம் வேண்டும் என்று குரல் கொடுக்கிறார். முப்படைகளைக் கொண்டதமிழ் ஈழம் பிரபா கரனால் அப்போதே உருவாகியிருந்தது. உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டியதுதான் மீதமிருந்தது. அதை மத்திய அரசின் துணையுடன் அழித்துவிட்டு தனி ஈழம் அமைக்கப் போவதாக குருணாநிதி கூறுவது ஏமாற்றுவேலை என்றார். (அ-2)

# இலஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு சிறுவர், சிறுமியர் முக்கிய பங்காற்ற வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தெரிவிப்பு

லோக்பால் மசோதா நிறைவேறினால் சிறைகள்தான் நிரம்பும். இலஞ்ச ஊழலை ஒழிப்பதில் சிறுவர், சிறுமியர் முக்கியபங்காற்ற வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம்கூறியுள்ளார். ராஞ்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அப்துல்கலாம் சிறுவர்களிடையே உரையாற்றியபோது இலஞ்ச ஊழலில் சிக்கும் ஒருவர் குற்றவாளி என நிரூபணமாகும் பட்சத்தில் அவரை சிறையில் அடைக்கத் தான் லோக்பால் சட்டம் உதவும். இதன்மூலம் பலரும் சிறையில் அடைக்கப்படுவர்.

இதற்குத் தான் லோக்பால் உதவும். ஆனால் நாம் வேண்டுவது அதுவல்ல. நல்ல மனிதர்களைத் தான். இலஞ்ச ஊழலை தங்களது வீடுகளிலிருந்தே சிறுவர்கள் களைய முற்பட வேண்டும்.

எங்கள் குடும்பத்தில் எந்த வகையிலும் ஊழலுக்கு இடமே இல்லை என்ற உறுதிமொழியை சிறுவர் கள் ஏற்க வேண்டும். இலஞ்ச லாவண்யம் ஒழிய இது ஒன்றுதான் வழி. இளைஞர்கள் தான் இந்த நாட்டின் மிகப் பெரிய நம்பிக்கை என்று தெரிவித்தார்.

எனவே தங்கள் வீடுகளை இலஞ்சத்தின் பிடியிலிருந்து விடுவிக்க குழந்தைகள் போராட வேண்டும். அதற்காக குழந்தைகள் உறுதி மொழி எடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நாட்டிலிருந்து இலஞ்சம் அறவே ஒழிந்துவிடும்.

இளைஞர்கள் அனைவரும் தாங்கள் ஊர்ந்து செல்வதற்காக பிறக்கவில்லை. மாறாக நம்பிக்கை, கனவு, அளவிட முடியாத ஆற்றல் ஆகியன தங்களிடம் இருப்பதை



உணர்ந்தால் அவர்களால் தத்தமது துறைகளில் வெல்ல முடியும்.

நாட்டில் இலஞ்சத்தை ஒழிப்பதற்காகவும் வலுவான லோக்பாலை ஆதரித்தும் அன்னா ஹசாரே போராட்டம் நடத்துகிறார்.

இந்த லோக்பால் நிறைவேறாத பட்சத்தில் சிறை நிரப்பும் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் அன்னா ஹசாரே அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அப்துல்கலாம் பேசியுள்ளது அன்னாவுக்கு எதிராக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)





# ஆலயத்தேர் சாய்ந்ததில் 6 பேர் பலி; 5 பேர் காயம்

ஆரணி கயிலாயநாதர் கோயில் தேரோட்டத்தின் போது திடீரென அச்சு முறித்து பயங்கரசத்தத்துடன் தேர் கீழே சாய்ந்தது. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில் 5 பேர் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். அர்ச்சகர் உட்பட 5 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தச் சம்பவத்தால் பக்தர்கள் அதிரச்சியடைந்துள்ளனர்.


திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி கோட்டையில் உள்ளது. கயிலாயநாதர் கோயில் இருநூறு ஆண்டுகளுக்கு முந்தைய புராதன கோயில். இங்கு ஆண்டுதோறும் சித்திரை பிரம்மோற்சவம் 9 நாட்கள் நடைபெறும். இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவம் கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று முன் தினம் காலை 6 மணியளவில் தொடங்கியது. 75 அடி உயர தேரில் உற்சவமூர்த்திகள் அறம்வளர் நாயகி சமேத கயிலாயநாதர் மேளதாளம் முழங்க வீதி உலா புறப் பட்டனர்.

இந்நிலையில் எதிர்பாராமல் தேர் சடசடவென பயங்கர சத்தத்துடன் அச்சு முறிந்து கீழே சாய்ந்தது. இதில் தேரில் இருந்த அர்ச்சகர்கள் மற்றும் தேரோட்டம் காண வந்த பக்தர்கள் உட்பட 9 பேர் தேரின் அடியில் சிக்கினர். இவர்களில் 6 பேர் உடல் நசுங்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். (அ-2)

# பாகிஸ்தான் படைகளை வாபஸ்பெற இந்தியாவும் முயற்சி செய்ய வேண்டும்

## ரபானி தெரிவிப்பு



(இஸ்லாமாபாத்)

சியாசின் மலைப் பகுதியிலிருந்து பாகிஸ்தான் படைகளை வாபஸ் பெற வேண்டுமானால் இந் தியா மீதான நம்பிக்கை அதிகரிக்க வேண்டும் என வெளியுறவு அமைச்சர் ஹினாரபானி தெரிவித்துள்ளார்.

இந்தியா– பாகிஸ்தான் எல்லையில் உள்ள சியாசின் பனிமலையில் சமீபத்தில் பனிப்பாறை சரிவு ஏற்பட்டதில் முகாமிட்டிருந்த பாகிஸ்தானிய வீரர்கள் 35 பேர் பலியாயினர். பனிப்பாறையில் புதையுண்ட வீரர்களின் சடலத்தை இது வரை மீட்க முடியவில்லை.

கடும் குளிர் காணப்படும் இந்த பகுதியிலிருந்து படைகளை வாபஸ் பெற இந்தியாவும் பாகிஸ்தானும் முயற்சி செய்ய வேண்டும் என அந் நாட்டு அரசு தெரிவித்திருந்தது.

இதற்கிடையே பாகிஸ்தான் வெளியுவு அமைச்சர் ஹினா ரபானி குறிப் பிடுகையில்,

சியாசின் மலைப்பகுதியிலிருந்து ஒரு தலைப் பட்சமாக நாம் மட்டும் படைகளை வாபஸ் பெற முடியாது. இதற்கு இந்தியா மீது அதிக நம்பிக்கை வைக்க வேண்டும்.

இந்தியா –பாகிஸ்தான் உறவு மேம்படுவதற்கு காஷ்மீர் பிரச் சினை தடைக் கல்லாக உள்ளது. இந்த பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும். அண்டை நாடுகளில் காணப் படும்ஸ்திரமற்ற தன்மை அப்பகுதியை வெகுவாகப் பாதிக் கும்.

எவ்வளவு பெரிய வல்லரசு நாடாக இருந் தாலும் அந்தநாடு பரஸ்பர மரியாதையை காப்பாற்றும் பட்சத்தில் தான் அந்நாட்டுடனான உறவு நீடிக்கும் என அவர் கூறினார். (அ-2)

### 2.5 கோடி பெறுமதியான போதைப்பொருள் கடத்தல்

தமிழ்நாடு சென்னை விமான நிலையத்திலிருந்து மலேசியாவிற்கு கடத்தப்படவிருந்த 2.5 கோடி ரூபா போதைப் பொருட்களை சுங்கத்துறையினர் கைப்பறியுள்ளனர். சுங்கத்துறையினருக்கு ஏர் ஏசியா விமானத்தின் மூலம் மலேசியாவிற்கு போதைப் பொருட்கள் கடத்தவிருப்பதாக இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து சுங்கத்துறையினர் அதிரடி சோதனையில் இறங்கினர்.

இச்சோதனையின் போது சர்வதேச மதிப்பில் 2.5 கோடி ரூபா மதிப்புள்ள போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இப் பொருட்களை கடத்த முயற்சித்தவரையும் பொலிசார் கைது செய்தனர். (அ-2)

# மின்னணு வாக்குப்பதிவு முறையை பின்பற்ற சார்க்நாடுகள் ஆர்வம்

இந்தியாவில் மின்னணு வாக்குப் பதிவு எந்திரம் உள்ளிட்ட தொழில்நுட்பங்களின் உதவியுடன் தேர்தல்கள் வெற்றிகரமாக நடத்தப்படும் விதம் பாகிஸ்தான் உள்ளிட்ட சார்க் நாடுகளைக் கவர்ந்துள்ளன. எனவே, இந்திய முறைப்படி தங்கள் நாட்டிலும் தேர்தல்களை நடத்த அந்நாட்டுகள் ஆர்வமாக உள்ளன.

சார்க் நாடுகளின் தேர்தல் ஆணைய தலைவர்களின் 3 ஆவது மாநாடு டில்லியில் நடைபெற்றுவருகிறது. பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இம் மாநாடு நடத்தப்படுகிறது. இந்தியாவில் ஜனநாயகம் மற்றும் தேர்தல் ஆணையத்தை வலுப்படுத்த நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் விதம் பற்றி மாநாட்டில் இந்தியா சார்பில் திரையிட்டு காண்பிக்கப்பட்டது.

அதன்பின்னர் உரையாற்றிய ஏனைய நாடுகளின் தேர்தல் ஆணை பிரதி நிதிகள் இந்தியாவில் தேர்தல்கள் நடத்தப்படும் விதம் தங்களைக் கவர்ந்துள்ளதாகவும் அதனால் நாடுகளில் இனிவரும் தேர்தல்களை இந்தியா முறைப்படி நடத்த ஆர்வமாக உள்ளதாகவும் கூறினர். (அ-2)

# நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை விற்பது அரசாங்கத்தின் கொள்கையல்ல

## ஜனாதிபதி தெரிவிப்பு

நட்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்களை விற்கின்றமை அரசாங்கத்தின் கொள்கையல்ல என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தகைய நிறுவனங்களை விற்பதற்கு பதிலாக, பொதுமக்களின் நலன்கருதி முறையாக இயங்கச் செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இலங்கை போக்குவரத்து சபையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கான மிகையூதிய கொடுப்பனவு வழங்கும் வைபத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வீழச்சியுற்று காணப்பட்ட அரச சேவையை வலுவானதான மாற்றியமைத்து பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் முறையானதாக முன்னெடுத்து வருவதாகவும் 30 வருடங்கள் துன்பங்களை எதிர்கொண்ட மக்கள் தற்போது சுதந்திரத்தை அனுபவித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன மற்றும் மத பேதங்களை தூண்டும் வகையில் மீண்டும் நாட்டை பாதாளத்தில் தள்ளி விடுவதற்கு பல்வேறு பிரிவினர் செயற்பட்டு வருவதாகவும் கூறினார். (அ-9)

# ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய குழுவை நியமித்தது முஸ்லீம் காங்கிரஸ்

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடம் 6 பேர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், தவிசாள்ர் பசீர் சேகுதாவூத், செயலாளர் ஹசன் அலி, பிரதிச் செயலாளர் நிஸாம் காரியப்பர் ஆகியோருடன் இரண்டு சட்டத்தரணிகள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்த குழுவினர் ஒரு வாரத்தில் தமது அறிக்கையை கட்சியின், தலைமையிடம் கையளிக்கவுள்ளனர். இதன் பின்னர் கட்சியின் தலைவர் ஹக்கீம் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான தமது நிலைப்பாட்டை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான தமது நிலைப்பாடுகளை அறியத்தருமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது கூட்டணி கட்சிகளுக்கு அறிவித்திருந்தது.

(அ-2)

# இராணுவ நினைவு நாளை கொண்டாடாதீர்கள்

## கோரிக்கையை நிராகரித்தது அரசு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை இலங்கை இராணுவத்தினர் தோற்கடித்த இராணுவ நடவடிக்கையின் நினைவு நாள் கொண்டாட்டங்களை நிறுத்துமாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்துள்ள அரசாங்கம் இந்த மாதம் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு காலிமுகத்திடலில் இராணுவ வெற்றியை நினைவுகூரும் அணி வகுப்பு பேரணியை நடத்தவுள்ளது. இதில் போரில் பங்கு பற்றிய இராணுவ பிரிவுகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இராணுவ வெற்றியை கொண்டாடுவது நாட்டு மக்களின் சகவாழ்வு வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவாது என கூறியுள்ள சில அரசசார்பற்ற நிறுவனங்கள் அந்த கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளன. (அ-2)

# லண்டன் மேதின நிகழ்வுகள்

(கொழும்பு)

பிரித்தானியாவின் மத்திய லண்டன் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேதின நிகழ்வுகளில் இலங்கையில் நடைபெற்ற தமிழினப்படுகொலையை வெளிக்காட்டும் பரப்புரை பதாகைகள் முக்கிய இடத்தை பெற்றுள்ளன.

இலங்கைத் தீவில் 60 ஆண்களாக நடைபெற்றுவரும் தமிழனப் படுகொலையின் உச்சமாக 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களின் அவலங்களை சர்வதேசத்திற்கு வெளிக்காட்டும் நோக்கத்தோடு இப்பரப்புரை பதாகைகள் அமைந்தன.

குறிப்பாக சனல் 4 தொலைக்காட்சியினால் சர்வதேசத்திற்கு ஆதாரங்களோடு அம்பலப்படுத்தப்பட்ட **Sri lanka's Killing Fields** எனும் காணொளியை மீண்டும் மீண்டும் சர்வதேசத்தின் கண்களின் முன் கொண்டு வந்து இலங்கைத் தீவில் நடைபெற்ற தமிழன அழிப்பிற்கும் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியுமே இந்த போராட்டத்தை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான நிமலன் முன்னெடுத்துள்ளார். இப்பரப்புரை பதாகைகளை வேற்றின மக்களும் தாங்கி நின்றனர்..

(அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.05 03

★ *1494*-ஜமெய்க்கா எனப் பின்னர் பெயரிடப்பட்ட நாட்டை முதன் முதல் கிறிஸ்தோபர் கொலம்பஸ் கண்டார்.

★ *1802*- வோஷிங்டன் டிசி நகரமாக்கப்பட்டது.

★ *1814*- பிரெஞ்சு மன்னன் நெப்போலியன் பொனபார்ட் எல்பா தீவுக்கு நாடு கடத்தப்பட்டு போர்ட்டோஃ பெராய்யோ நகரை அடைந்தான்.

★ *1815*-டொலெண்டீனோ என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் நேப்பில்ஸ் மன்னன் முராட் ஆஸ்திரியர்களால் தோற்கடிக்கப்பட்டான்.

★ *1879*-யாழ்ப்பாணம் கரவெட்டியில் வெல்லனிற் பிள்ளையார் கோயில் திருவிழா ஒன்றின் போது இடம் பெற்ற தீ விபத்தில் 50 பேர் வரையில் தீயில் கருகி உயிரிழந்தனர். நூற்றுக் கணக்கானோர் உடல் ஊனமுற்றனர். கோயில் முழுவதும் எரிந்து சாம்பலானது.

★ *1901*-புளோரிடாவின் ஜாக்கன்ஸ்வில் என்ற இடத்தில் இடம்பெற்ற பெரும் தீயினால் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் அழிந்தன. 10 ஆயிரம் பேர் வரையில் வீடுகளை இழந்தனர்.

★ *1916*- உயிர்த்த ஞாயிரன்று இடம்பெற்ற கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்ட ஐரிஷ் தலைவர்கள் டப்ளின் நகரில் தூக்கிலிடப்பட்டார்கள்.

★ *1939*- சுபாஸ் சந்திரபோஸ் அனைத்திந்திய பார்வார்டு ப்ளாக் கட்சியை ஆரம்பித்தார்.

★ *1941*- பி.பி.சி. தமிழோசை வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

★ *1942*-இரண்டாம் உலகப் போர். ஜப்பானிய கடற்படையினர் சொலமன் தீவுகளின் துளகி தீவைக் கைப்பற்றினர்.

★ *1959*-முதலாவது கிராமி விருதுகள் அறிவிக்கப்பட்டன.

★ *1962*-டோக்கியோவில் பயணிகள் தொடரூந்து சரக்கு தொடரூந்துடன் மோதியதில் 160 பேர் உயிரிழந்தனர்.

★ *1973*-சிக்காகோவின் சியேர்ஸ் கோபுரம் உலகின் அதியுயர் கோபுரமான்து.

★ *1979*- மார்கரெட் தாட்சர் ஐக்கிய இராச்சியத்தின் முதலாவது பெண் பிரதமர் ஆனார்.

★ *1986*- கொழும்பு விமான நிலையத்தில் பயணிகள் விமானம் ஒன்றில் குண்டு வெடித்ததில் 21 பேர் உயிரிழந்தனர். 41 பேர் காயமடைந்தனர்.

★ *1999*-ஐக்கிய அமெரிக்காவின் ஒக்லகோமா நகரை சூறாவளி தாக்கியதில் 42 பேர் உயிரிழந்தனர். 665 பேர் காயமடைந்தனர்.

★ *2002*-இந்தியாவின் இராஜஸ்தானில் இராணுவ விமானம் ஒன்று வீழ்ந்ததில் 8 பேர் உயிரிழந்தனர்.

★ *2006*-ஆர்மீனியாவின் பயணிகள் விமானம் ஒன்று கருங்கடலில் வீழ்ந்ததில் 113 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ *1933*-ஜேம்ஸ் ப்ரௌன், சோல் இசையின் தந்தை என அழைக்கப்பட்ட அமெரிக்க இசை வல்லுநர் (இ.2006)

★ *1935*- சுஜாதா, தமிழ் எழுத்தாளர் (இ.2008)

### இறப்பு

★ *1969*- சாகிர் ஹுசைன், மூன்றாவது இந்திய ஜனாதிபதி (பி. 1897)

### சிறப்பு நாட்கள்

★ உலக பத்திரிகை சுதந்திர தினம்

★ போலந்து- அரசியலமைப்பு தினம்

★ ஜப்பான்- அரசியலமைப்பு தினம்

# ஈழத்தமிழரின் தியாகங்கள் ஒரு நாளும் வீண்போகாது!

**கருணாநிதியின் ஈழக்கனவு சரியா, தவறா என்ற விவாதங்களுக்கப்பால் அதற்கான காரணத்தை உருவாக்கிக் கொடுத்து மறைந்திருந்து சொல்ல வைப்பது யார்.........? தி.மு.க.வின் இந்த நிலைப்பாட்டிற்கு தனியே அரசியல் ஆதாயமே காரணம் என்று கூறமுடியாது. அதற்கும் அப்பால் இனிமேலும் நம்பிப் பயனில்லை, அதுவே ஒரேவழி என்ற முடிவை எடுக்க வைத்த, இலங்கை அரசு மீதான நம்பகமற்ற நிலையும்தான் காரணம்.**

கருணாநிதியின் ஈழக்கனவுக்குக் காரணமாக இருப்பது யார்?

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு இலங்கையில் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது, தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்த ஒரு கருத்து இப்போது பெரும் பரபரப்புக்குரிய விவகாரமாக மாறியுள்ளது. தென் சூடான், கொசோவோ, கிழக்கு திமோர் போன்று இலங்கையிலும் தனி ஈழம் அமைப்பதற்கு ஐ.நா.வின் துணையுடன் வாக்கெடுப்பு நடத்தப்படுவதை வரவேற்பதாகவும், அதற்கு மத்திய அரசு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

சமீபகாலமாக, புலம்பெயர் ஊடகங்களில்தான், தமிழீழத்திற்கான வாக்கெடுப்பு பற்றிய செய்திகள் வந்தன. அப்படியான வாக்கெடுப்புக்கான எந்தவொரு புறச்சூழலும் சர்வதேச அளவில் உருவாகவில்லை. அத்தகைய சூழல் ஒன்று உருவாகும் உடனடி வாய்ப்பு இருப்பதாகவும் தெரியவில்லை.

கருணாநிதி, மேற்சொல்லப்பட்ட கருத்தைக் கூறியது சதாரணமாகத் தான். அது இந்த அளவுக்கு விவகாரமாகும் என்று அவர் நினைத்திருக்க மாட்டார்.

உடனடியாகவே அவரது கருத்துக்கு இலங்கையில் இருந்து எதிர்ப்புக்கிளம்பியது. வழக்கம்போலவே முதலில் சம்பிக்க ரணவக்க சீறிப் பாய்ந்தார். அவருக்குப் போட்டியாக கிளம்பும் விமல் வீரவன்ச இந்த முறை என்னவோ, அமைதியாக இருக்கிறார். சம்பிக்க ரணவக்வை அடுத்து பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் பதிலடி கொடுத்தார். கருணாநிதி விரும்பினால், இந்தியாவில் ஈழத்தை அமைத்துக் கொள்ளட்டும், இங்கு அதற்கு இடமில்லை என்றார் அவர். அது மட்டுமன்றி ஈழம்பற்றிப் பேசுவதால் கருணாநிதியும் பயங்கரவாதிதான் என்றார் கோத்தபாய ராஜபக்ச. அதற்கு கருணாநிதி, தான் பயங்கரவாத வழிபற்றிச் சிந்திக்கவில்லை என்றும், ஆனால், ஈழத்தமிழர்கள் சிந்திய குருதியும், செய்த தியாகங்களும் ஒரு நாளும் வீண்போகாது, தமிழீழம் ஒரு நாள் உருவாகியே தீரும் என்று பதிலடி கொடுத்தார். அதுமட்டுமன்றி, தமிழீழத்தை வலி

இன்போத் தமிழ்

யுறுத்தி கருணாநிதி அடுத்தடுத்து அறிக்கை வெளியிடத் தொடங்கியுள்ளார். தமிழர்கள் தமிழீழத்துக்குக் குறைவான எதையும் ஏற்க மாட்டார்கள் என்றார். தமிழீழத்தை உருவாக்கும்வரை ஓயப்போதில்லை, தனது எஞ்சிய வாழ்வின் இலட்சியம் அதுவே, தமிழீழத்தை உருவாக்கிவிட்டே உயிர்துறப்பேன் என்றெல்லாம் அவர் கூறியுள்ளார்.

கருணாநிதி தமிழீழத்தை கையில் எடுத்துக்கொண்டு அறிக்கைப் போர் நடத்தி வருகின்ற நிலையில். இந்தியாவின் ஆங்கில ஊடகங்கள் அவரைப் பொரிந்து தள்ளத் தொடங்கியுள்ளன. கருணாநிதி தமிழீழம் என்று, எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பதாகவும், தமிழர்கள் அங்கு சமஉரிமைகளுடன் வாழும் நிலையை ஏற்படுத்தவே அவர் முயற்சிக்கவேண்டும் என்றும் இந்திய ஆங்கில ஊடகங்கள் எழுதத் தொடங்கியுள்ளன. இன்னொரு பக்கத்தில் தமிழக ஊடகங்களும்சரி, வைகோ, சீமான் போன்றவர்களும்சரி கருணாநிதி அரசியல் இலாபத்துக்காகவே தமிழீழத்தைக் கையில் எடுத்துள்ளதாக சாடுகின்றனர். கருணாநிதி இப்போது அரசியல் ரீதியாகப் பலமிழந்து போயுள்ளார்.

மத்திய அரசில் தி.மு.க. இடம் பெற்றிருந்தாலும் தமிழகத்தில் அவரது செல்வாக்கு குறைந்து போயுள்ளது. தேர்தல் தோல்விகளால் துவண்டு போயுள்ள அவர், தனது அரசியல் செல்வாக்கை நிலைப்படுத்திக் கொள்ளவே, தமிழீழத்தைக் கையில் எடுத்துள்ளார் என்ற சப்பை நியாயம் ஏற்கத் தக்கதல்ல. முன்னர், தமிழீழம் அமைந்தால் வரவேற்பேன் என்று மட்டும் கூறியவர் இன்று தமிழீழம் நிச்சயம் மலரும் என்று அடித்துச் சொல்கிறார். தீர்க்கதரிசி போன்று கருணாநிதி இவ்வாறு கூறுவதன் பின்னணி-

## தமிழீழம் அமைய உழைப்பதே எஞ்சிய வாழ்வின் இலட்சியம்...!

காரணம் என்ன என்று ஆராய வேண்டும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வன்னியில் போர் உச்சகட்டத்தில் இருந்தபோது, மத்திய அரசில் செல்வாக்குச் செலுத்தக் கூடியளவுக்குப் பலமுடன் இருந்தவர் கருணாநிதி. அவர் நினைத்திருந்தால், போரை நிறுத்தியிருக்கலாம். ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்ப்பலிகளைத் தடுத்திருக்கலாம் என்ற கருத்து இன்றும் பலரிடம் உள்ளது. அவர் மத்திய அரசின் மீது அழுத்தம் கொடுத்து போரை நிறுத்த முனையவில்லை என்ற கோபம் தமிழர்கள் பலரிடம் இப்போதும் இருக்கிறது. தமிழ் தேசிய ஊடகங்கள் இதை வைத்தே கருணாநிதி மீது சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவரைச் சாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றன.

அரசியல் அதிகாரத்தில் இல்லாத சூழலில் அவர், தமிழீழம் அமைப்பேன், அதற்காக உழைப்பேன் என்று அடித்துச் சொல்கிறார். தனியே இந்த விவகாரத்தை தமிழ்நாட்டின் அரசியல் சூழலுடன் வைத்துப்பார்க்கக் கூடாது. கருணாநிதியின் அரசியல் பலவீனத்தை மட்டும் வைத்து மதிப்பிட முடியாது. இலங்கையின் அரசியல் சூழலையும், வைத்துப் பார்க்கவேண்டும் அவ்வாறு பார்த்தால்தான், அவரது கருத்தில் உள்ள நியாயத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கை அரசு சரியானதொரு தீர்வை தமிழர்களுக்கு வழங்கியிருந்தால், இன்று கருணாநிதியால் தமிழீழம் பற்றிக் கதைத்திருக்க முடியுமா?

கருணாநிதி தமிழீழத்தை மீண்டும் தூக்கியிருப்பது சரியா, தவறா என்ற விவதாங்களுக்கு அப்பால், அதற்கான காரணத்தை உருவாக்கிக் கொடுத்தது யார் என்று பார்க்க வேண்டும். தமிழர்களுக்கு குறைந்த பட்ச அரசியல் அதிகாரங்களைக்கூட வழங்க முன்வராத அரசாங்கமே இந்த நிலைக்குப் பொறுப்பு.

இனியாவது தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து இனப்பிரச்சினையில் நியாயமாக அரசு நடந்து கொள்ளும் என சர்வதேச சமூகம் நம்பிக்கை வைத்திருந்தது. அதனை பல சந்தர்ப்பங்களில் அது வெளிப்படுத்தியுமுள்ளது. ஆனால், இந்த மூன்று ஆண்டுகளில் அரசாங்கம் எல்லாவற்றையுமே தொலைத்துவிட்டு நிற்கின்றது. அப்போது ஆதரித்து நின்றவர்கள் பலரை ஒவ்வொன்றாக அரசாங்கம் இப்போது இழந்து வருகிறது.

ஐ.நா.வை இழந்தது- அதன் விளைவாக ஐ.நா. பொதுச் செயலர், நிபுணர் குழுவை நியமித்தார்.



அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகை இழந்தது-அதன் விளைவாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றும் நிலை உருவானது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நம்பிக்கையை இழந்தது- விளைவாக, மூன்றாண்டுகளுக்கு முன்னர் மேற்குலகின் தீர்மானத்தை தோற்கடிக்க முடிந்த இலங்கையால், இம்முறை தோல்விகாண நேர்ந்தது. கடைசியாக இந்தியாவின் நம்பிக்கையையும்கூட இழந்தது- அதன் விளைவாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை ஆதரிக்க இந்தியா நிர்ப்பந்திக்கப்பட்டது. இப்படியாக, ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழருக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் என்று நம்பியவர்களை - அதனை அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் என்று நம்பியவர்களை ஏமாற்றி விட்டுள்ளது அரசாங்கம். இது போலத்தான் இதுவரை தமிழீழத்தைப் பற்றியே சிந்திக்காத தி.மு.க.வையும் இந்த முடிவுக்கு வரச்செய்துள்ளது.

தி.மு.க.வின் இந்த நிலைப்பாட்டிற்கு தனியே அரசியல் ஆதாயமே காரணம் என்று கூறமுடியாது. அதற்கும் அப்பால் இனிமேலும் நம்பிப் பயனில்லை, அதுவே ஒரேவழி என்ற முடிவை எடுக்கவைத்த, இலங்கை அரசு மீதான நம்பகமற்ற நிலையும் தான் காரணம். இன்று தி.மு.க.வுக்கு ஏற்பட்டுள்ள இந்தக் கருத்து நாளை இந்திய மத்திய அரசுக்கோ, சர்வதேச சமூகத்திற்கோகூட ஏற்படவும் கூடும். அந்தநிலையை உருவாக்க நாம் ஒன்றுபட்டு உழைக்கப்போகின்றோமா அல்லது எமக்குள்ளேயே நாம் முரண்பட்டு தாழியை உடைக்கப் போகிறோமா?

# பிரி.பப்டா தொலைக்காட்சி விருதுக்கு இலங்கையின் கொலைக்களம் பரிந்துரை

(லண்டன்)

**2012 ஆம் ஆண்டுக்கான பிரித்தானியாவின் பப்டா தொலைக்காட்சி நடப்பு நிகழ்வுகள் விருதுக்காக (Bafta TV Awards) சனல் 4 தொலைக் காட்சியின் இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.**

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை படைத்தரப்பின ரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களை மையப் படுத்தி தயாரிக்கப்பட்ட இந்த ஆவணப்படம் சர்வதேச ரீதியில் பெரும் கவனக் குவிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவு ரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமானதும் நம்பகரமானதுமான விசாரணைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் எனவும் இந்த ஆவ ணப்படம் வலியுறுத்தியிருந்தது.

2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 03 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 17 ஆவது கூட்டத் தொட ரில் இந்த ஆவணப்படம் முதற்தடவையாக காட்சிப்படுத்தப்பட்ட போது இலங்கை அரசா ங்கத்துக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத் தியிருந்தது.

ஒரு மணித்தியாலத்தைக் கொண்ட இந்த ஆவணப்படத்தில் வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை படைத்தரப்பால் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த போராளி கள் படுகொலை செய்யப்பட்டமை, விடுத லைப்புலிகளின் பெண்போராளிகள் பாலி யல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டமை, மக்கள் செறிவாக குவிந்திருந்த இடங்களிலும் வைத்தியசாலைகளிலும் இலங்கை படைத் தரப்பால் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டமை போன்ற பல ஆதாரங்கள் உள்ளடக் கப்பட்டிருந்தன.

வன்னிப் போரின் போது பாதிப்படைந் தவர்களின் நேரடியான வாக்குமூலங்கள் மற்றும் ஆதாரங்களை அடிப்படையாக வைத்து இந்த ஆவணப்படம் தயாரிக்கப்ப ட்டுள்ளதாக சனல் 4 தொலைக்காட்சி தெரி வித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தொழில் திணைக்களம் சொந்தக் கட்டடத்தில்

கரைச்சி பிரதேச செயலகத்தில் தற்கா லிகமாக இயங்கி வந்த கிளிநொச்சி மாவட்ட தொழில் திணைக்களம் 155 ஆம் கட்டை யில் உள்ள தனது சொந்த அலுவலகத்தில் நேற்றுத் தொடக்கம் இயங்க ஆரம்பித் துள்ளது.

இக்கட்டடம் மேற்குறித்த பிரதேச செய லகத்தில் இடவசதி இன்மை காரணமாக தனது சொந்தக் கட்டடத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது எனவும் சம்பிரதாய பூர்வமான திற ப்புவிழா பின்னர் நடைபெறும் எனவும் தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் க.கன கேஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ-3-254)

# கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்தார்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜாவுக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந் தாவுக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடை பெற்ற இச் சந்திப்பில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்திகள் தொடர்பில் விரி வாக ஆராயப்பட்டது.

இச் சந்திப்பின்போது கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபி விருத்திகள் இந்திய அரசாங்கத்தினால் செய் யக்கூடிய உதவிகள் குறித்து விரிவாக கல ந்துரையாடியதாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்துள்ளார்.

முக்கியமாக கல்லடியிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் அபிவிருத்திகள் சார்ந்து இந்தியப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்றிட்டங்களை மேற்கொள்ளல், அதன் ஆசிரியர்களின் மேற்படிப்புகள், புலமைப் பரிசில்களை ஏற்படுத்தல், கிழக்குப் பல்க லைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப வசதி களை மேம்படுத்தல் , மாணவர்கள், பல்கலை க்கழகத்தின் கற்றல் மற்றும் ஏனைய தேவை கள் கருதி வாகன வசதிகளை ஏற்படுத்தித் தரல் ஆகிய விடயங்களை ஏற்படுத்தித்தரு தல் தொடர்பில் கேட்டுக் கொண்டதாகத் தெரி வித்தார்.

இதற்குப் பதிலளித்த இந்திய உயர்ஸ்தா னிகர் அசோக் கே.காந்த், விபுலானந்த இசை நடனக் கல்லூரியினை இந்தியப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைத்தான் மேற் கொண்டு தருவதாக உறுதியளித்தார். (அ-2)

# கிளி.மாவட்டத்தின் அனைத்து திணைக்களங்களுக்குமான சந்திப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து திணைக்களங்களுக்குமான சந்திப்பு நேற்று முன்தினம் கிளி.மாவட்ட செயலகத்தில் நடை பெற்றது.

மாவட்ட மட்ட அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் கலந் துரையாடப்பட்டதாக மாவட்ட அரசாங்க அதி பர் ரூபவதி கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான தரவு களை உரிய நேரத்தில் சமர்ப்பித்தல், தாமத ங்களை நிவர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கை களை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப் பட்டதாக அவர் கூறினார்.

திணைக்களங்கள் ஊடாக நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான அறிக் கையை உரிய நேரத்தில் மாவட்ட செயல கத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

திணைக்களங்களின் செயற்பாடுகள் குறி த்து இந்த சந்திப்பில் மீளாய்வு செய்யப்பட்ட தாக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீ ஸ்வரன் மேலும் தெரிவித்தார். (அ-9)

# 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியா தலையிட வேண்டும்

## பிரதமர் மன்மோகனுக்கு மகஜர்

(சென்னை)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தை அமு ல்படுத்த இந்திய மத்திய அரசாங்கம் தலை யீடுகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரி தமிழகத்தை சேர்ந்த 4 இந்திய மக்க ளவை உறுப்பினர்கள் இந்திய பிரதமர் மன் மோகன்சிங்கிடம் மகஜர் ஒன்றை கையளித் துள்ளனர்.

சுதர்சனன் நாச்சியப்பன், எம்.கிருஷ்ண சாமி உள்ளிட்ட 4 மக்களவை உறுப்பினர்கள் இந்த மகஜரை கையளித்துள்ளனர். அத் துடன் குறிப்பிட்டகால அவகாசத்திற்குள் இல ங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந் துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அதியுயர் பாதுகாப்பு வலையங்களை வடபகுதி மீனவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். இதனை தவிர தமிழகத்தை சேர்ந்த ஆசிரியர்களை வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் மக்களவை உறுப்பினர் கள் கோரியுள்ளனர். (அ-2)

# ஜப்பானின் பிரதிப் பிரதமர் வடபகுதிக்கு வருவார்

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் பிரதிப் பிரதமர் தலைமையிலான குழுவினர் வடக்கிற்கு உத்தியோக பூர்வ விஜய மொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்விஜயமானது நாளை மறுதினம் சனி க்கிழமை இடம்பெறவுள்ளது. வடக்கில் நடை பெற்று வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங் களை கண்காணிக்கவே இவர்களின் விஜய த்தின் முக்கிய நோக்கமாகவுள்ளது.

பிரதிப் பிரதமர் நயோட்டோ தலைமை யிலான குழுவினர் வடக்கில் யாழ்.மாவட்டம், கிளி.மாவட்டம், சுன்னாகத்தில் அமைக்கப் பட்டு வரும் மின் பிறப்பாக்கி, அக்கராயன் குளம், இரணைமடு, பரந்தன் நெற்களஞ்சிய ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றினையும் பார்வையிடவுள்ளனர்.

மேலும் வேலணை, பருத்தித்துறைப் பிர தேசங்களுக்கு செல்லும் இவர்கள் அங்கு கருவாட்டு உற்பத்தி வேலைத்திட்டங்களையும் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்குழுவினருடன் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பதில் ராஜபக்ஷ, கைத்தொழில் வாணிப அலுவல்கள் அமைச்சர் றிசாத் பதியு தீன் ஆகியோர் விஜயம் செய்யவுள்ளனர். (அ-2-9)



வடமராட்சி கிழக்கு தாழையடியில் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைப்பீடக் காரியாலய திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து கட்டடத்தை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)



# சிறுவர் அரங்கம்

89

## அம்புலி மாமா கதைகள்

# மஞ்சரி தேவி




உதயகிரியை ஆண்டு வந்த பிரதாப சிம்மர் தனது ஆட்சியில் குற்றங்களே நடைபெறக் கூடாதென்று கருதினார். இதனால் சிறிய குற்றமானாலும் குற்றவாளிக்குக் கடுமையான தண்டனை விதித்தார். பெரிய குற்றங்களுக்கு தயை தாட்சண்யம் இன்றி மரண தண்டனை விதித்து வந்தார். அதனால் இராஜ்யத்தில் குற்றங்கள் மிகவும் குறைந்து விட்டன. ஆனால் மக்களின் மனத்தில் நிம்மதி இல்லை.

மன்னரின் ஒரே மகளான மஞ்சரி தேவி அதிரூப சுந்தரியாக இருந்தது மட்டுமன்றி அறிவிலும் சிறந்த விளங்கினாள். மன்னரின் செல்லப் பெண்ணாக இருந்த அவள் அவரிடம் இருந்து அரசாட்சியின் பல நுணுக்கங்களையும் தெரிந்து கொண்டாள். ஒரு நாள் மன்னர் உடல் நலம் குன்றி படுக்கையில் வீழ்ந்தார். அவரைப் பிடித்த நோய் தீராத நோயாகத் தொடர ஆட்சிப் பொறுப்பை மஞ்சரியிடமே ஒப்படைத்து விட்டார். வயதான முதன் மந்திரி பைரவரின் துணையுடன் மஞ்சரி இராஜ்யத்தை மிகத் திறமையாகக் ஆட்சி புரிய ஆரம்பித்தாள். ஒரு நாள் மன்னர் திடீரென இறந்து போக மஞ்சரி சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டாள்.

தந்தையை இழந்த சோகத்தில் கண்ணீரும் கம்பலையுமாக இருந்த மஞ்சரி பல நாட்கள் ஆட்சியில் கவனமே செலுத்தவில்லை. அப்போது பைரவர் அவளுக்கு என்று பலவாறும் அறிவுரை கூறி அவளை சமாதானப்படுத்தினார். இதனால் மஞ்சரி பழையபடி நிர்வாகத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தாள். ஒருநாள் மஞ்சரி தன் வீரர்களுடன் காட்டில் வேட்டையாடச் சென்றாள்.


நண்பகலில் ஒரு மானைத் துரத்திக் கொண்டு சென்ற மஞ்சரி வழி தவறி மற்றவர்களிடமிருந்து பிரிந்து விட்டாள். களைப்



பாக இருந்ததால் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தாள். அப்போது ஒரு வாலிபன் அவள் அருகே இருந்த மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு அவளைக் கண் கொட்டாமல் பார்த்தான். ஆனால் திடீரென குதிரை வீரர்கள் வரும் ஒலி கேட்டு அவன் அந்த இடத்தை விட்டு ஓடி விட்டான்.

அந்த வாலிபன் ஒரு ஓவியன்! அவன் பெயர் முகுந்தன்! மஞ்சரியின் உடையிலிருந்தும் ஆபரணங்களில் இருந்தும் கம்பீரத்திலிருந்தும் அவள் ஒரு ராணி என்பது தெரிந்தது. நாடோடியான அந்த ஓவியன் ஒவ்வொரு ஊர் கோயிலிலும் தன் மனத்திற்குப் பிடித்த தேவியர்களின் உருவங்களை வரைவதுண்டு.

உதயகிரி ராஜ்யத்திற்குச் செல்ல காட்டின் வழியே நடந்து கொண்டு இருந்த போதுதான் அவன் தற்செயலாக மஞ்சரியைப் பார்த்தான். அத்தகைய அழகிய பெண்ணை நேரில் அதுவரை அவன் பார்த்ததில்லை. அதனால் அவளைக் கண்டது முதல் ஓவியனான அவனது மனம் அவளை ஓவியமாகத் தீட்டி அழகு பார்க்கத் துடித்தது. ஆனால் சில நிமிடங்களே அவளைப் பார்த்ததில் அவள் உருவம் முழுமையாக அவன் மனதில் பதியவில்லை. அவளை சித்திரமாக வரைய ஒரு மணி நேரமாவது அவள் எதிரில் நின்று உற்றுப் பார்ப்பது தேவையாக இருந்தது. ஆனால் ராணியான அவளை அவன் எப்படி வெகு நேரம் உற்றுப் பார்க்க முடியும்?



உதயகிரியைச் சென்றடைந்த முகுந்தன் பைத்தியம் பிடித்தவன் போல் நிலை கொள்ளாமல் தவித்தான். மஞ்சரியை அருகில் நின்று ரசிக்காமல் உதயகிரியை விட்டுச் செல்வதில்லை என்று உறுதி கொண்ட முகுந்தன் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தான். அந்த அரிய வாய்ப்பு விரைவிலேயே கிட்டயது. ராணி மஞ்சரி மீண்டும் வேட்டைக்குப் போகிறாள் என்றும் இந்த முறை இரவில் காட்டிலேயே கூடாரம் அடித்துத் தங்குவாள் என்றும் கேள்விப்பட்டதும் முகுந்தன் மிகுந்த ஆவலுடன் காட்டிற்குச் சென்றான்.

ராணியின் வீரர்கள் கூடாரமடிக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அந்த இடத்திலேயே மரங்களுக்குப் பின் ஒளிந்து கொண்டான். வேட்டையாடிய பின்னர் மஞ்சரி மாலையில் தன் வீரர்களுடனும் தோழிகளுடனும் கூடாரத்திற்கு வந்தாள்.



அவளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தனியான கூடாரத்திற்குள் சென்று உறங்கத் தொடங்கினாள். நடு இரவு வரை காத்திருந்த முகுந்தன் மஞ்சரியின் கூடாரத்தைக் காவல் காக்கும் வீரர்கள் சற்றே கண் அயர்ந்ததும் சத்தமின்றி அவளுடைய கூடாரத்திற்குள் நுழைந்தான். மிக ஒயிலுடன் சயனித்திருந்த மஞ்சரியின் அழகை நன்கு கண்டு மனத்திரையில் பதித்துக் கொண்டான். பின்னர் மெதுவாக கூடாரத்தை விட்டு வெளியேறும் போது ஒரு காவலன் முகுந்தனை கையும் களவுமாயப் பிடித்தான். ராணியின் கூடாரத்தினுள் அத்துமீறி நுழைந்ததற்காக முகுந்தன் கைது செய்யப்பட்டான்.

மறுநாள் சபையில் முகுந்தன் மஞ்சரி முன் நிறுத்தப்பட்டான். அந்த சமயம் மந்திரி பைரவர் இல்லை. முகுந்தன் அயல்நாட்டு ஒற்றன் என்றும் தீய எண்ணத்தோடு ராணியின் படுக்கையறையில் நுழைந்தான் என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

மகாராணி! தயவு செய்து நான் சொல்வதை நம்புங்கள்! நான் ஒற்றன் அல்ல! நான் ஒரு ஓவியன்! உங்களை முதன்முதலாகப் பார்த்த நாள் முதல் உங்களை சித்திரம் வரைய துடித்துக் கொண்டிருக்கிறேன். கவனமாக உங்களை உற்றுப் பார்ப்பதற்காகவே நான் உங்கள் கூடாரத்தில் நுழைந்தேன் என்று முகுந்தன் மன்றாடினான்.

ஆனால் ராணியின் படுக்கை அறையில் நுழைவது மிகப் பெரிய குற்றம் என்றும் அதற்குத் தூக்குத் தண்டனையே சரியாகும் என்றும் பலரும் சபையில் கருத்து தெரிவித்தனர். ஆகையால் மஞ்சரியும் அனுமதியின்றி என் படுக்கை அறையில் நுழைந்த மாபெரும் குற்றத்திற்காக முகுந்தனுக்கு மரண தண்டனை அளிக்கிறேன் நாளை காலை அவனைத் தூக்கில் இட வேண்டும் ! என்று நீதி வழங்கினாள்.

மகாராணி! நான் செய்தது தவறு தான்! ஆனால் மரண தண்டனை பெறுபவர்களின் இறுதி விருப்பத்தை நிறைவேற்றுவது உங்கள் கடமை! அதன்படி எனக்கு இன்னும் ஒரு வாரம் அவகாசம் கொடுங்கள். அதற்குள் உங்கள் ஓவியத்தை வரைந்து விடுவேன் என்றான் முகுந்தன்.

அதற்கு மஞ்சரி, சரி! அடுத்த வெள்ளிக்கிழமை வரை உனக்கு அவகாசம் தருகிறேன். அதற்குள் உன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள். சனிக்கிழமை காலை உன் தண்டனை நிறைவேற்றப்படும்! என்றாள்.


முகுந்தன் ஓவியம் வரைவதற்கான ஏற்பாடுகள் அரண்மனையிலேயே செய்து தரப்பட்டன. இரவும் பகலுமாய் பாடுபட்டு முகுந்தன் வெள்ளிக்கிழமை இரவு ஓவியத்தை வரைந்து முடித்தான். அதை மஞ்சரிக்கு வெகுமதியாக அளித்து விட்டு தன் மரணத்தை எதிர்நோக்கி காத்திருந்தான்.

மறுநாள் காலை தனது ஓவியத்தைப் பார்த்தமஞ்சரி அப்படியேபிரமித்துப்போனாள். இத்தகைய அற்புதமான கலைஞனுக்கா மரண தண்டனை அளித்தோம் என்று பதைபதைத்துப் போய் உடனே தண்டனையை ரத்து செய்தாள். முகுந்தனும் உயிர் தப்பினான். பிறகு முகுந்தன் சபைக்கு அழைத்து வரப்பட்டான். அதற்குள் அயலூர் சென்றிருந்த மந்திரி பைரவரும் ஊர் திரும்பி விட்டார். நடந்த விடயத்தைக் கேள்விப்பட்ட அவர் உடனே மஞ்சரியை சந்தித்து நல்ல வேளை மரண தண்டனையை ரத்து செய்தாய்! உன் தந்தை காலத்திலிருந்தே எனக்கு மரண தண்டனையில் உடன்பாடு இல்லை. எந்தப் பெரிய குற்றம் இழைத்த மனிதனுக்கும் திருந்த ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். உயிர் கொடுக்கும் இறைவனுக்கு மட்டுமே அதைப் பறிக்கும் உரிமை உண்டு. நமக்கு இல்லை! என்றார்.

ஆம்! மந்திரியாரே! நீங்கள் சொல்வதும் சரிதான். இனி நம் ராஜ்யத்தில் மரண தண்டனையை நிரந்தரமாக ரத்து செய்யப் போகிறேன் என்றாள் மஞ்சரி. சபையோர் கை தட்டி அவளுடைய தீர்மானத்தை வரவேற்றனர். தொடர்ந்து, அத்துடன் முகுந்தனை நமது ஆஸ்தான ஓவியனாக நியமிக்கிறேன்! என்று மஞ்சரி பிரகடனம் செய்ய கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

# ஆப்கானுடன் புதிய உறவை ஏற்படுத்துவோம்; அனைத்து உதவிகளையும் வழங்குவோம்

## ஒபாமா உறுதியளிப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தான் மற்றும் அமெரிக்காவிற்கு இடையேயான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஒபாமா இரு நாடுகளுக்குமிடையே ஒரு புதிய உறவு மலர வேண்டும் என்று தான் முயற்சித்து வருவதாக கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலிற்கு நேற்று அதிகாலை வந்த ஒபாமா அங்கு பக்ராம் விமானப் படை மையத்தில் வீரர்களை சந்தித்தார். பின்னர் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயுடன் ஆலோசனை நடத்தியதைத் தொடர்ந்து இரு நாடுகளும் பாதுகாப்பு ஒப்பந்ததில் கையெழுத்திட்டுக் கொண்டன.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய ஒபாமா, தீவிரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்காவுக்கு எதிரான நிலை திசை திருப்பப்பட்டுள்ளதாகவும் கடந்த 8 ஆண்டுகளாக அல்கொய்தாவையும் தலிபான்களையும் எதிர்த்து போரிட்டு வந்ததையடுத்து 3 ஆண்டுகளில் அவர்களை தோற்கடித்துக் காட்டியுள்ளதாகவும் கூறினார்.

மேலும் தீவிரவாதத்தை ஒழிப்பதிலும் நாட்டின் முழுப் பாதுகாப்பையும் ஆப்கானிஸ்தான் படைகளே மேற்கொள்ள இருப்பதாகவும் கூறிய அவர் ஆப்கானிஸ் தானுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் செய்யும் என்றும் உறுதியளித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், போர் நடத்துவது மூலம் மட்டுமல்லாமல் பேச்சுவார்த்தைகள் மூலமும் தீவிரவாதத்தை ஒழிக்க தான் முயற்சிகள் பல மேற்கொண்டு வருவதாகவும் கூறினார். இதற்கு ஒப்புக் கொண்டுள்ள தீவிரவாத அமைப்பினர் அமைதியை நிலை நாட்டாமல் மீண்டும் பிரச்சினைகளை கிளறுவார்களேயானால் அவர்கள் அமெரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படைகளின் தாக்குதலுக்கு உள்ளாவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை என்று கூறினார். (அ-2)

# பின்லேடனின் நினைவு தினத்தன்று குண்டுவெடிப்பு; அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் ஒபாமா

அல்கொய்தா இயக்க தலைவர் பின்லேடனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தில் ஆப்கானில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உயிர் தப்பினார். இச்சம்பவத்திற்கு தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

அல்கொய்தா இயக்கத்தினர் ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில் அதன் முன்னாள் தலைவர் பின்லேடனின் முதலாம் ஆண்டு நினைவு தினம் அவ்வியக்கத்தினரால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இரகசிய பயணமாக ஆப்கான் சென்றிருந்தார். அங்கு தலைநகர் காபூலில் ஜனாதிபதி ஹர்சாயை சந்தித்தார்.

ஜனாதிபதி ஒபாமா தன் ஒரு நாள் பயணத்தை முடித்துவிட்டு சிறிது நேரத்தில் ஆப்கானின் கிழக்கு மாகாண தலைநகரில் அமெரிக்க தூதரகம் அமைந்துள்ள கிரீன்வில்லேஜ் வணிக வளாகத்தில் தாக்குதல் நடத்தினார்.

அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கும் கடும் சண்டை ஏற்பட்டது. இத் தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. (அ-2)

# சொனி நிறுவனத்தில் பத்தாயிரம் பணியாளர்கள் பணிநீக்கம்

பெரும் நட்டத்தை சமாளிக்க தடுமாறி வருகின்ற ஜப்பானிய சொனி மின்னணு நிறுவனம் தனது ஊழியர்களில் சுமார் பத்தாயிரம் பேரை பணி நீக்கம் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது.

அடுத்த 12மாதங்களில் உலகில் பல பாகங்களில் உள்ள தமது பணியிடங்களில் இந்த பணி நீக்கம் மேற்கொள்ளப்படும் என நிறுவனம் அறிவித்துள்ளது. தனது இவ்வருடத்துக்கான நட்டத்தின் மதிப்பீட்டை கடந்த செவ்வாயன்று இரண்டு மடங்காக அதாவது 640 கோடி டொடலர்களாக அதிகரித்து அறிவித்திருக்கிறது சொனி நிறுவனம். (அ-2)

# ஆபாசப்படத்தினுள் அல்கொய்தா அனுப்பிய சதித்திட்ட புதிய யுக்தி அம்பலமாகியது

அல்கொய்தா இயக்கத்தினர் தங்களது தாக்குதல் திட்டத்தை ஆபாச படம் ஒன்றிற்குள் மறைத்து வைத்து அனுப்பியது தற்போது தெரியவந்துள்ளது.

இந்தியாவின் மும்பை மாநகரில் கடந்த 2008 ஆம் ஆண்டு நடத்திய தீவிரவாதத் தாக்குதலைப் போன்று ஐரோப்பிய நாடுகளில் தாக்குதல் சம்பவங்களை அரங்கேற்ற அல்கொய்தா அமைப்பு திட்டமிட்டுள்ளது.

இதற்கான திட்ட விபரங்களை ஒரு ஆபாசப்படத்தில் சேர்த்து அதை மெமரி டிஸ்க்கில் வைத்து அனுப்பியுள்ளனர். இது ஜேர்மன் ஆங்கிலம், அரபி ஆகிய மொழிகளில் பிடி எப் போர்மட்டில் அனுப்பப்பட்டுள்ளது.

இதை அமெரிக்க உளவுப் பிரிவினர் கண்டறிந்து அந்த சதித் திட்டத்தை முறியடித்துள்ளனர். பேர்லினில் கடந்த ஆண்டு கைதான அல்கொய்தா நபர் மூலம்தான் இந்தத் தகவல் தற்போது தெரியவந்துள்ளது.

இந்த மெமரி டிஸ்க்கைப் போட்டுப் பார்த்தபோது அது ஒரு ஆபாசப் படம்என்று தெரிய வந்தது. அதே போல மற்றொரு பெயரிலும் ஒரு ஆபாசப் படம் இருந்தது. ஆனால், அந்த மெமரி டிஸ்க்கை ஆராய்ந்த போதுதான் அதில் ஐரோப்பிய நாடுகளில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த விவகாரங்கள் ஒளிந்திருந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்து அதிர்ந்தனர்.

அந்த மெமரிடிஸ்க்கில் மொத்தம் 100 அல்கொய்தா ஆவணங்கள் பொதிருந்திருந்தது. இது குறித்து மேலும் விரிவான விசாரணை நடந்து வருகின்றது. (அ-2)

## உலக தரிசனம்

# அல்கொய்தாவின் பெயரை மாற்ற நினைத்த பின்லேடன்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் பதுங்கி இருந்த அல்கொய்தா தலைவர் பின்லேடனை கடந்த ஆண்டு மே 2 ஆம் திகதி அமெரிக்க படையினர் சுட்டுக் கொன்றனர். அவர் கொல்லப்பட்டு ஓராண்டு ஆகிவிட்டது.

இந்நிலையில் பின்லேடன் வீட்டில் கிடைத்த ஆவணங்களில் பதிவான தகவல்கள் ஒவ்வொன்றாக தற்போது வெளிவருகிறது.

இந்நிலையில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் ஜான் பெர்ன் நேற்று முன்தினம் ஒரு தகவலை கூறியுள்ளார். அதில் அமெரிக்க போர் விமானம் குண்டு வீச்சினால் பின்லேடன் பெரிய நெருக்கடியால் தவித்தார். அடுத்தடுத்து ஏற்பட்ட பேரிழப்பு அவரை மனம்குலைய செய்துள்ளது. அல்கொய்தா இயக்கத்தின் தாக்குதலால் ஏராளமான அப்பாவி பெண்கள், குழந்தைகள், பொதுமக்கள் தான் உயிரிழந்தனர். இதனால் அரபு நாடுகளில் எதிர்ப்பு ஏற்படும் என அஞ்சிய அவர் அல்கொய்தாவின் பெயரையே மாற்ற திட்டமிட்டார் என்று தெரிவித்தார். (அ-2)

# பாராளுமன்றில் பதவியேற்ற சூகியை சந்தித்து பான் கீ மூன் பாராட்டு தெரிவிப்பு

(யாங்கூன்)

மியன்மாரில் கடந்த முதலாம் திகதி 45 பாராளுமன்ற தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் போட்டியிட்ட 44 தொகுதிகளிலும் சூகியின் கட்சி அமோக வெற்றி பெற்றது. அவரும் ஒரு தொகுதியில் வென்றார்.

ஆனால், எம்.பியாக பதவி ஏற்காமல் புறக்கணிக்க முடிவு செய்தார். பல்வேறு கட்சி தலைவர்களின் கோரிக்கையை ஏற்று இந்த முடிவை மாற்றி பாராளுமன்ற புறக்கணிப்பை கைவிடுவதாக நேற்று முன்தினம் திடீர் அறிவிப்பை வெளியிட்டார்.

இதனை அடுத்து தலைநகர் நைபிதாவில் பாராளுமன்றக் கூட்டம் நேற்றைய தினம் நடைபெற்றது. இதில் ஆங் சாங் சூகியும் அவரது கட்சி சார்பில் வெற்றி பெற்றவர்களும் எம்.பியாக பதவி ஏற்றுள்ளனர்.



இந்த பதவி ஏற்பு உறுதி மொழியின் போது ஜனநாயக மரியாதை என்ற சொல்லை ஜனநாயக பாதுகாப்பு என திருத்தம் செய்ய வேண்டும் என சூகி கட்சியினர் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் இதனை இராணுவ ஆட்சியாளர்கள் ஏற்கவில்லை.

இதற்கிடையில் மியன்மார் சென்றுள்ள ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பான்கீ மூன், யாங்கூனில் சூகியை சந்தித்து பேசினார். சூகியின் வீட்டில் இந்த சந்திப்பு நடந்தது.



பாராளுமன்ற புறக்கணிப்பை கைவிட்டு எம்.பியாக பதவி ஏற்க சம்மதம் தெரிவித்ததற்காக சூகியை பான் கீ மூன் பாராட்டினார். அத்துடன் பாராளுமன்ற கூட்டத்திலும் அவர் உரை நிகழ்த்தினார். (அ-2)

# மாலிநாட்டு தலைநகரம் மீண்டும் இராணுவத்தினரின் பிடியில் அகப்பட்டது

(பமாகோ)

ஆபிரிக்காவில் உள்ள மாலி நாட்டில் ஜனாதிபதி அமாதோவ் துமானிக்கு எதிராக இராணுவத்தில் ஒரு பிரிவினர் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி திடீர் புரட்சியில் ஈடுபட்டு தலைநகரை கைப்பற்றினர். இதனால் ஜனாதிபதி அமாதோவ் தலைமறைவாகி செனகல் நாட்டில் தஞ்சம் புகுந்தார். இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியின் ஆதரவு இராணுவத்துக்கும் புரட்சி நடத்திய இராணுவ குழுவுக்கும் இடையே சண்டை மூண்டது. தலைநகர் பமாகோ மற்றும் இராணுவத் தளம் அமைந்துள்ள காதி ஆகிய இடங்களில் 2 நாட்களாக கடும் போர் வெடித்தது.

இதற்கிடையில் இராணுவத்தினர் தலைநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள முக்கிய இடங்கள், இராணுவத்தளம், விமான நிலையம் ஆகியவற்றை கைப்பற்றி விட்டதாக நேற்று முன்தினம் தொலைக்காட்சி மூலம் அறிவித்தனர். (அ-2)

இந்து பேரவையின் ஏற்பாட்டில் வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் செட்டிக்குளம் பொது மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்து பேரவையினர் நிவாரணப் பொதியினை பயனாளி ஒருவருக்கு வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-பூந்தோட்டச் செய்தியாளர்)*

# தமிழக ஆர்ப்பாட்டங்களை எம்மால் நிறுத்த முடியாது

## கைவிரிக்கிறார் நீதி அமைச்சர்

(கொழும்பு)

தம்புள்ளைப் பள்ளிவாசல் அகற்றுதலுடன் தொடர்பான மிரட்டல்கள் மற்றும் வன்முறைகள் போன்றவற்றிற்கு நாம் ஒருபோதும் அடிபணியமாட்டோம். பள்ளிவாசலை அகற்றக் கூடாது என்ற விடயத்தில் விட்டுக் கொடுப்புக்கே இடமில்லை. இது தொடர்பாக தமிழகத்தில் வைகோவின் கட்சியும் முஸ்லிம் க்ட்சிகளும் தொடங்கியுள்ள ஆர்ப்பாட்டங்களை எம்மால் நிறுத்த முடியாது.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய போது கூறியுள்ளார்.

இச் சந்திப்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, தம்புள்ளையில் உள்ள பெரும்பான்மை இன மக்கள் கூட பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் அநீதியானது என்றும் அப்பள்ளி 60 வருடங்களாக அங்கேயே உள்ளது என்றும் கூறுகின்றனர்.

அந்தப் பள்ளிவாசலை அந்த இடத்தில் இருந்து அகற்றக்கூடாது. அப் பள்ளிவாசல் அமைப்பதற்காக மாற்றுக்காணிகள் வழங்குவது தீர்வாக அமையாது. எமக்கு அந்தக் காணி தேவையில்லை.

பள்ளிவாசலை அகற்றுவது அடிப்படை உரிமை மீறலாகும். இதை நினைத்து நாம் வெட்கப்படுகின்றோம். பலவீன மக்களை பலமான அரசு காப்பாற்ற வேண்டும். பலமான அரசு என்று நினைத்துதான் நாம் அரசுடன் இணைந்தோம். இந்த விடயம் தொடர்பாக என்னுடன் ஜனாதிபதி தொலைபேசியில் கதைத்தார். அவர் இந்த விடயத்தைப் பரிசீலிப்பேன் எனக் கூறினார். அனைத்து முஸ்லிம் அமைச்சர்களையும் அழைத்து இது தொடர்பில் விரைவில் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் என்னிடம் கூறினார்.

ஜனாதிபதி இந்தப் பிரச்சனையைத் தூர நோக்குடன் பார்த்துத் தீர்த்து வைப்பார் என்று நான் நம்புகிறேன். நீதிமன்றத்தின் தீர்ப்பின் ஊடாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அரசின் தீர்ப்பின் ஊடாக தான் இதைத் தீர்க்க முடியும்.

பள்ளிவாசலை அகற்றுவது தொடர்பிலான மிரட்டல்கள், வன்முறைகள் போன்றவற்றுக்கு நாம் அடிபணியமாட்டோம். இந்தப் பிரச்சினையை நாம் சர்வதேசமயப்படுத்த விரும்பவில்லை. இருப்பினும் தமிழகத்தில் வைகோவின் கட்சியும் முஸ்லிம் கட்சிகளும் தொடங்கியுள்ள ஆர்ப்பாட்டங்களை எம்மால் நிறுத்த முடியாது என அவர் தெரிவித்தார்.

(அ-2)

# சீனப் பிரஜைகள் மூவரை நாடு கடத்த உத்தரவு

(கொழும்பு)

கடவுச்சீட்டு விசா எதுவுமின்றி சட்ட விரோதமாக இலங்கையில் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகள் மூவரை நாடு கடத்துமாறு கொழும்பு நீதிமன்றம் ஒன்று நேற்று உத்தரவிட்டது.

கொள்ளுப்பிட்டியில் வைத்து இம்மூவரும் கைது செய்யப்பட்டு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களின் சார்பில் ஆஜரானசட்டத்தரணி சுதர்சினி குணரட்ன தமது கட்சிக்காரர்கள் மூவரும் நுரைச்சோலை மின்நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர்கள் எனவும் அவர்களின் கடவுச்சீட்டுக்களை அந்நிலையத்தின் தலைமையதிகாரி தன்வசம் வைத்துள்ளதாகவும் கூறினார்.

எனினும் கடவுச்சீட்டு மற்றும் செல்லுபடியான விசா இல்லாமல் எவரும் நாட்டில் தங்கியிருக்கமுடியாது எனக்கூறிய நீதவான் இம்மூவரையும் நதாடு கடத்துமாறு உத்தரவிட்டார். இந்த உத்தரவு அமுல்படுத்தப்படும் வரை இவர்களை மிரிஹான தடுப்பு முகாமில் வைக்குமாறும் அவர் உத்தரவிட்டார். (அ)

# பால் உற்பத்தியாளர்கள் பாதிப்பு

(கொழும்பு)

பால் உற்பத்தியை விற்பனை செய்ய முடியாத காரணத்தினால் நுவரெலியா மாவட்ட சிறியளவிலான பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக நாளாந்தம் 15 ஆயிரம் லீற்றர் பால் விரயமாக்கப்படுவதாக உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலதிக பால் காணப்படுகின்றமையினால் பால் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் தமது பால் உற்பத்தியினை நிராகரிப்பதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக பால் உற்பத்தியாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பில் கால்நடை மற்றும் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தெரிவிக்கையில், சில மாவட்டங்களில் இவ்வாறான பிரச்சினைகள் தற்போது காணப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.

அரச நிறுவனத்தின் ஊடாக பால் உற்பத்தியாளர்களின் பாலை கொள்வனவு செய்யும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பால் உற்பத்தி அதிகரிக்கப்பட்டமையால் சில தனியார் நிறுவனங்கள் பால் கொள்வனவை மட்டுப்படுத்தியுள்ளதாக கால்நடை மற்றும் கிராம சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் குறிப்பிடுகின்றார்.

தேவைக்கேற்ப பால் கிடைப்பதால் மேலதிக பாலை கொள்வனவு செய்ய முடியாதென தனியார் நிறுவனங்கள் கூறுவதாக அவர் தெரிவிக்கின்றார்.

(அ-2)

# மரண அறிவித்தல்

## திரு.வேலுப்பிள்ளை கந்தையா

**(இளைப்பாறிய அதிபர் யா/ மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை)**



தையிட்டிபுலம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் உடையார்வளவு சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.வேலுப்பிள்ளை கந்தையா அவர்கள் 02.05.2012 காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை சாணப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மக னும், (அமரர்) சின்னத்தம்பி சின்னத்தங்கம், மாப்பாணர், சுப்பிரமணியம் (லண்டன்), (அமரர்) சேதுப்பிள்ளை, செல்லமுத்து, (அமரர்) செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், அம்பலவா ணர்-ஆசைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணி அம்மையாரின் அன்புக் கணவரும், (அமரர்) வேலாயுதகுமாரர், அகிலவல்லி (ஆசிரியர் யா/ மகாஜனாக்கல்லூரி தெல்லிப்பழை), கலாவல்லி (ஜேர்மனி),(அமரர்) உமாவல்லி, ஞானவல்லி, யோகவல்லி(ஆசிரியை யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திரு.செ.கிருபாரட்ணம் (ஆயுள்வேத வைத்தியர்), திரு.சிவராஜசிங்கம் (ஜேர்மனி), சிவராஜா (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், துரைரட்ணம் (துவாரகன்). தேவரட்ணம் (தேசிகன்), கோபிரட்ணம் (கோபிகன்), சதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03.05.2012 (வியாழக்கிழமை) அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று மு.ப 9.30 மணியளவில் பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

**உடையார் வளவு,**
**சுன்னாகம்.**
**தொ.பே:-0212240634**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

(8280)

நடைபெற முடியாதது என்று உலகில் எதுவுமே இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

-மார்க்ட்வைன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அவருக்கு ஞானம் பிறந்தது இவருக்கு சித்தம் கலங்கியது

யாழ்ப்பாணத்தில் நடந்த மே தினத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தேசியக் கொடியாகிய சிங்கக் கொடியை தூக்கி அசைத்துக் காட்டினார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு செய்தமையால் தமிழ் மக்கள் அதிர்ந்து போயுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மே தினக் கொண்டாட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை.

எங்கள் அவல நிலைக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு காரணம் என்பதாலேயே அந்த விருப்பமின்மை ஏற்படலாயிற்று.

இருந்தும் எதிர்க் கட்சிகளின் மே தினம் என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த கூட்டமைப்பின் மே தினக் கொண்டாட்டம் பற்றி தமிழ் மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால், யாழ்ப்பாணத்து மண்ணில் நடந்த மே தினக் கூட்டத்தில் இரா.சம்பந்தன், ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து தேசியக் கொடியைத் தூக்கிப் பிடித்த நிகழ்வை தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

போருக்குப் பின் தமிழர் பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகளில் தேசியக் கொடி ஏற்றுதல் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட நிகழ்ச்சி நிரலாகி விட்டபோதிலும்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் எதற்காக இவ்வாறு செய்தார்?

இவ்வாறு தேசியக் கொடியை ரணிலுடன் சேர்ந்து பிடிப்பதன் ஊடாக அவர் எதனை சாதிக்க அல்லது எதனை நிரூபிக்க முற்பட்டார் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து மே தினத்தை நடத்துவதன் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றி ரணில் மூலமாக ஏதோவொரு செய்தியைக் கூறவே கூட்டமைப்பு இந்த ஏற்பாட்டை செய்தது என மக்கள் நம்பினர்.

அதாவது நான் ஜனாதிபதியாக வந்தால்– ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தால், வடக்கையும் கிழக்கையும் இணைத்து பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை தமிழ் மக்களுக்கான சுயநிர்ணயத் தீர்வாக வழங்குவேன் என்று ரணில் தனது மே தின உரையில் கூறுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், நடந்ததோ வேறு. சம்பந்தரைக் கொண்டு ரணில் சிங்கக் கொடியை ஏற்றி வைத்தார்.

ஐயா! சம்பந்தரே! அரசியலில் பழுத்த பழமாகிய நீங்கள், ஏன் இப்படி அவசரப்பட்டு விட்டீர்கள்?

சிங்கக் கொடியை ஒரு கையில் ஏந்தும் அதேவேளை, நந்திக் கொடியை மறுகையால் ரணிலும் பிடித்து உயர்த்தி இருந்தால் இந்த நாட்டின் இன ஒற்றுமைக்கு ரணில் ஆதரவு என்று கூறியிருக்கலாம் அல்லவா?

ஏன் அதைச் செய்யவில்லை? யாருக்கேனும் உறுதிமொழி வழங்கிவிட்டீர்களா என்ன?

அடக்கடவுளே! கலைஞர் கருணாநிதி தமிழீழம் தான் தமிழருக்குத் தீர்வு என்ற ஞானத்தைப் பெற்றிருக்கும் இந்நேரத்தில் ரணிலுடன் கொடி பிடித்த உங்கள் சித்தம் கலங்கி ‘சம்மந்தராகி விட்டீரோ’ என்று எண்ணத் தோன்றுகிறது.

# சிங்கள மக்களுடன் இணைவதே காலத்தின் கட்டாய தேவை!

## பிரபா கணேசன் உரை



(கொழும்பு)

சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுத்து அரசியல் தீர்வை பெறும் முயற்சியில் தமிழ் –சிங்கள தலைமைகள் முயற்சிப்பதே காலத்தின் கட்டாயம் தேவை என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

ஐக்கிய தேசியக் கட்சி இன்று வங்ரோத்து நிலையை அடைந்துள்ளது. தென்னிலங்கையில் மே தினக் கூட்டத்தைக்கூட கூட்ட முடியாத நிலையில் பிரிந்து போயுள்ளது. கொழும்பிலே தமிழ் தேசியம் பேசுபவர்கள் வடக்கிலுள்ள தமிழ்த் தேசிய வாக்குகளை பெரும்பான்மையின ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாங்கிக் கொடுக்கும் புரோக்கர் வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களுக்கு தேவையானது எதிர்காலத்தில் பதவிகளும் பட்டங்களுமே. இன்றைய இந்த மாபெரும் கூட்டத்தைப் பார்க்கும் பொழுது அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருக்கும் அபிமானத்தை தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

யுத்தம் முடிபுற்றிருந்தாலும் யுத்தம் ஆரம்பித்ததற்கான காரணம் இன்னும் தீர்த்து வைக்கப்படவில்லை. இனப்பிரச்சினை தீர்வில் வெளிநாட்டு அழுத்தங்கள் முழுமையான தீர்வை பெற்றுத் தராது. முள்ளிவாய்க்காலில் வேலுப்பிள்ளை பிரபாகரன் தன்னை வெளிநாடுகள் காப்பாற்றும் என்று நம்பி ஏமாந்து போனார்.

இன்றும் வெளிநாடுகளின் மூலம் இனப்பிரச்சினை தீர்வு கிடைக்குமென்று தமிழ் சமூகம் நம்பியிருக்குமேயானால் நாமும் ஏமாந்து போவோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளிநாடுகளோ அல்லது சிங்களத் தலைமைகளோ மக்கள் மீது திணிக்க முடியாது. இந்த நாட்டில் வாழும் 70 வீதத்திற்கும் அதிகமான சிங்கள மக்கள் மனதிலே ஏற்படும் அரசியல் தீர்வே நிரந்தரமானதாகும். சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுத்து அரசியல் தீர்வை பெறும் முயற்சியில் தமிழ் –சிங்கள தலைமைகள் முயற்சிப்பதே காலத்தின் கட்டாயமாகும். இனப்பிரச்சினைத் தீர்வுக்காக பாராளுமன்ற தெரிவுக்குழு அமைத்திருப்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்குள் உள்ள ஏனைய கட்சிகள் அனைத்தும் இதனை வரவேற்பதால் நானும் உடன்பட வேண்டியுள்ளது. ஆகவே பாராளுமன்ற தெரிவுக் குழுவை கூட்டமைப்பினர் பற்றிப்பிடித்து இனப்பிரச்சினைக்கான தீர்வினை அடைய முயற்சிக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வை வேறு உலகத்தில் தேடாமல் எமது அரசாங்கத்தின் மூலமே பெற்றுக் கொள்ள வேண்டும். மே தின விழாவில் தொழிலாளர் வர்க்கத் தினரைப் பற்றி பேசாமல் இனப் பிரச்சினை பற்றி பேசும் அளவுக்கு இப்பிரச்சினை முக்கியமானதாக உள்ளதை சிங்கள மக்களும் புரிந்து கொள்ள வேண் டும் என்றார். (ஏ)

## வவுனியா மாவட்ட தமிழ்த் தினப் போட்டி

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டமட்ட தமிழ் மொழித்தினப் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெற வுள்ளது.

இப்போட்டியில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய இரு வலயங்களினதும் வலய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் வெற்றியீட்டிய போட்டியாளர்கள் போட்டியிட உள்ளனர்.

(ஏ-3-266)

### ஸ்ரீ வடபத்திரகாளி கோவில்

தாவடி – கொக்குவில்

**சப்பறத் திருவிழா (இன்று)**

அரச மரத்தருகில்
ஆட்சி செய்யும் தாயே
பக்தர்கள் குறை தீர்க்கும்
வட பத்திரகாளியே

சப்பை ரதத்தில் ஏறி
சங்கடங்கள் தீர்ப்பதற்கு
சர்வ அலங்காரியாய்
எழுந்தருளும் தாயே


உண்மையின் உறைவிடமே
உலகிற்கு நாயகியே
உயர்ந்த பொருளிலெல்லாம்
உன்னை நாம் காண்போம்

தாவடி பதி உறையும்
தாயே பத்திரகாளி
தரணியில் உனையன்றி
வேறு ஏது கதியம்மா

தாயாகி தந்தையாய்
எல்லாமே நீயாகி
தஞ்சமென்றே அடையும்
எமைக் காக்கும் தாயே

சப்பை ரதத்தில் ஏறி
சகல உயிர்களுக்கும்
சங்கடங்கள் தீருமம்மா
வட பத்திரகாளியே

- உமைவண்ணன்



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## குங்குமத்திற்குப் பதிலாக ஸ்டிக்கர் பொட்டு வைத்துக்கொள்வது சரியா?

நாகரிக மோகத்தில் நிகழும் தவறுகளில் இதுவும் ஒன்று. சுமங்கலிப் பெண்கள் நெற்றியிலும் உச்சியிலும் வைத்துக்கொள்ளும் குங்குமத்தில் தாம் மகிழ்ந்து இருப்பதாக மகாலட்சுமி கூறுகிறாள்.

எனவே, குங்குமம்தான் உயர்ந்தது. பொட்டு வைத்துக்கொள்வதையே நாகரிகக் குறைவாக சில சகோதரிகள் கருதும் சூழலில் ஸ்டிக்கராவது வைத்துக்கொள்கிறார்களே என்று அல்ப சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நெற்றியில் குங்குமம் அணியும் போது தீய சக்திகள் விலகும். அதிலும் இருபுருவங்களுக்கிடையில் குங்குமம் வைத்தால் அவர்களை யாரும் அவ்வளவு எளிதில் வசியம் செய்துவிடமுடியாது.

மேலும் மஞ்சள், படிகாரம், சுண்ணாம்பு போன்ற கிருமிநாசினிப் பொருட்களைக்கொண்டு குங்குமம் தயார் செய்யப்படுகிறது.

அவ்வாறு தயார் செய்யப்பட்ட குங்குமத்தை பெண்கள் தங்களுடைய நெற்றியின் மையப் பகுதியில் அணிவதால் உடலிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகளின் வெப்பத்தை குங்குமம் தடுக்கிறது.

மேலும் குங்குமத்தின் மேல் சூரிய ஒளிபடும்போது குங்குமத்தில் உள்ள மூலிகை தன்மையும சூரிய சக்தியிலிருந்து வெளிப்படும் விற்றமின் டி சக்தியும் உடலுக்குள் சென்று நன்மையை ஏற்படுத்தி தருகிறது. அதேபோல் மன அமைதி, மங்களகரமான தோற்றம், உடல் நலத்தையும் தருவதால் பெண்கள் நெற்றியில் குங்குமம் அணிவது சிறந்தது.

# வடக்குக்கிழக்கில் இராணுவ ஆதிக்கம் முடிபுக்கு கொண்டுவரப்பட வேண்டும்

## மாவை எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆதிக்கம் முடிபுக்கு கொண்டு வரப்பட்டு ஜனநாயக நிர்வாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து யாழ்.குருநகர் சென்றோக் மைதானத்தில் நேற்று முன்தினம் நடத்திய மேதினப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு வரவேற்புரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆதிக்கத்தை முடிவிற்கு கொண்டு வர வேண்டும்.

ஜனநாயக நிர்வாக நடவடிக்கைகளும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சியும் இந்த மண்ணிலே இடம் பெற வேண்டும்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டும், சுதந்திரமாக அங்கு வாழ வேண்டும். வடக்கு,கிழக்கு மாகாண மக்களுடைய தன்னாட்சி உரிமை அவர்களின் சுய உரிமைத் தத்துவம் அவர்களுக்குரிய இறைமை, அவர்கள் தங்களுடைய மண்ணில் ஆழுகின்ற உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதுதான் இன்று முக்கியமானது.

இந்த நாட்டிலே ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு பெரும்பான்மையின் ஆட்சி சர்வாதிகாரமாக இடம் பெற்றுக் கொண்டுள்ளது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் முற்று முழுதாக ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு மொத்தமாக இராணுவ ஆதிக்கம் நிலவுகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். வடக்கு, கிழக்கில் இராணுவ ஆதிக்கம் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்து பல துன்பங்களை அனுபவித்த வண்ணம் வாழ்ந்துவரும் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்பட வேண்டும்.

மேலும் எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக பொதுமக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

பொருட்களின் விலையேற்றத்தினால் மக்கள் மீது பெரும் சுமை வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழக் கூடிய சூழல் இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை,இந்த மேதின நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எனப் பலரும் பங்கு கொண்டிருந்தனர். (அ-6)

## சங்குப்பிட்டி ஊடாக மன்னாருக்கு பஸ் சேவை

(கொழும்பு)

பொது மக்களது கோரிக்கைக் கிணங்க இன்று வியாழக்கிழமை தொடக்கம் சங் குப்பிட்டி- முழங்காவில் ஊடாக மன்னாருக்கான பேருந்து சேவை இ.போ.ச.(வட) யாழ். சாலையினால் ஆரம்பிக்கப்பட வுள்ளது. இச் சேவை காலை 6 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இரு ந்து மன்னார் நோக்கி புறப்படும்.

அதேபோல மன்னார் பேருந்து நிலையத்திலிருந்து மதியம் 12.30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி புறப்படும்.இச் சேவைக்கான ஒரு வழிக்கட்டணம் 177 ரூபா அறவிடப்படும் என வடபிராந்திய போக்குவரத்து சபை பிரதம பிராந்திய முகாமையாளர் செ.அஸ்கர் தெரிவித்துள்ளார். (ந)

## வாழ்வெழுச்சித் திட்ட கண்காட்சிக்கு 1.5 மில்லியன் ரூபாவை டக்ளஸ் வழங்குவார்

(கொழும்பு)

வாழ்வெழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கான கண்காட்சியை திருகோணமலை மாவட்டத்தில் நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றைய தினம் திருகோணமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது எதிர்வரும் ஜூலை மாதம் 7, 8 ஆம் திகதிகளில் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் இரண்டு நாட்களைக் கொண்டதாக இக்கண்காட்சி நடைபெறவுள்ளதாக முடிவெடுக்கப்பட்டது. இக்கண்காட்சி தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி விளக்கவுரையாற்றும் போது, சிறிய மற்றும் நடுத்தர குடிசைக் கைத்தொழில்களை நவீன முறையில் மேலும் விருத்தி செய்து அதனூடாக அதுசார்ந்த குடும்பங்களினதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் அவர்களை உற்சாகப்படுத்தும் வகையிலும் இக் கண்காட்சி முன்னெடுக்கப்பட வுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஏற்கனவே வாழ்வெழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 13 மாவட்டங்களில் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாணத்தில் ஏற்க னவே மட்டக்களப்பு மாவட்டத்தில் இக்கண் காட்சி இடம்பெற்றுள்ள நிலையில் இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் ஜூலை மாதம் திருகோணமலை மாவட்டத்திலும் நடைபெற வுள்ளது.

இக்கண்காட்சிக்காக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு 1.5 மில்லியன் ரூபாவையும் திருகோணமலை மாவட்ட அரச செயலகம் ஒரு மில்லியன் ரூபாவையும் வழங்கவுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்கனவே நடத்தப்பட்ட இவ்வாறான கண்காட்சிகள் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெற்று வருவதாகவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இப்பகுதிக்கு இதுபோன்ற நிகழ்வுகள் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதற்கு இது நல்லதொரு வாய்ப்பாக அமையும் எனவும் தெரிவித்தார். (அ-2)

## தமிழ்-சிங்கள மக்களின் புரிந்துணர்வுக்கு யாழ்ப்பாண மே தினம் சிறந்த சந்தர்ப்பம்

### ஐ.தே.க. எம்.பி. விஜயகலா மகேஸ்வரன்

நாட்டில் நிரந்த சமாதானம் மலர வேண்டுமானால் தமிழ் - சிங்கள மக்களிடையே புரிந்துணர்வு அவசியமாகும். இந்தப் புரிந்துணர்வுக்கு மேதினம் வழிவகுத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொது எதிரணியின் மேதினக் கூட்டத்தில் வரவேற்புரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தொழிலாளர் தினமான மேதினம் பெரும் எழுச்சியுடன் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது எமக்கெல்லாம் பெருமை சேர்க்கும் விடயமாக அமைந்துள்ளது. அதுவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்குபற்றுதலுடன் எதிர் அணிகள் ஒன்றிணைந்து பொது மேதினமாக கொண்டாடப்படுவதென்பது புதுப்பொழிவை ஏற்படுத்தியுள்ளது.

எத்தனையோ சவால்களுக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றிணைந்து இந்தத் தேசிய மேதினத்தை நடத்தினர். யுத்தத்தினால் கடும் துன்பங்களை அனுபவித்து சொல்லொணா துயரங்களுக்குட்பட்டு தமிழ் மக்களுக்கு இனியாவது விடிவு என்பது வேண்டும். அதற் கான திறவுகோலாக இந்த எழுச்சி மிகு மேதினம் அமைந்தது.

நாட்டில் விலைவாசி மலைபோல் ஏறுகின்றது. இந்த நிலையில் அரசாங்க, தனியார் ஊழியர்கள் சம்பள உயர்வின்றி திண்டாடுகின்றனர். வட பகுதியில் யுத்தப் பாதிப்புக்குளான மக்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியாத நிலையில் திண்டாடுகின்றனர். வேலைவாய்ப்பின்மை, பட்டதாரிகள் வேலையின்றி கூலி வேலை செய்யும் நிலையில் உள்ளனர். தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் இன்றி தவிக்கின்றனர்.

தொழில் வாய்ப்புக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படாமையால் வட பகுதி இளைஞர், யுவதிகள் விரக்தியின் விளிம்பில் நிற்கின்றனர்.

குடாநாட்டில் தொடரும் நீதிக்கு புறம்பான செயற்பாடுகளினாலும் மக்கள் தொடர்ந்தும் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். எதிரணிக் கட்சிகளின் ஒன்றிணைந்த மே தினம் இந்த மக்களின் வாழ்வில் வசந்தம் வீசுவதற்கான முதற்படியாக அமைந்தது.

இந்த எழுச்சிமிகு மேதினக் கூட்டமானது நாட்டில் சாந்தி சமாதானம் நிலைத்தோங்க வழிவகுக்க வேண்டும் என்றார். (அ-2)

## ஊடக சுதந்திர தினம்

(யாழ்ப்பாணம்)

நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச ஊடக சுதந்திர தினம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மறைந்த கார்ட்டூனிஸ்ட் பயஸின் 'காலக்கிறுக்கல்கள்' நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது.

இந்நூலின் வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மைய விரிவுரையாளர் ஆ.சபேஸ்வரன் ஆற்றவுள்ளார். (அ-9)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

May 2012 to October 2012

23

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48


விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி


Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2012 (சி/6481)

# காளை மாடு கையளிப்பு - 02.05.2012








வாகனத்தில் ஏற்றப்படும்போது....



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய நுழைவாயிலில்....



காளை மாட்டிற்கு பூசை வழிபாடு....





கையளிப்பையொட்டிய ஆசியுரை, வாழ்த்துரை.....

## பெங்களூரை பஞ்சாப் வென்றது



ஐ.பி.எல் போட்டித் தொடரின் 44ஆவது லீக் ஆட்டம் நேற்றிரவு பெங்களூரில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் டானியல் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் டேவிட் ஹசி தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

காயத்திலிருந்து கில்கிறிஸ்ட் குணமாகாததால் நேற்றைய போட்டியிலும் அவர் விளையாடவில்லை.

நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் பெங்களூர் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான கிறிஸ் ஹெயிலும் மயங்க் அகர்வாலும் களமிறங்கினர்.

ஆட்டத்தின் இரண்டாவது ஓவரின் முதல் பந்தில் சிக்ஸர் அடித்த மயங்க் அகர்வால் அந்த ஓவரின் 3-வது பந்தில் ஆட்டமிழந்தார். இவரையடுத்து ஹெயிலுடன் விராட் ஹோலி ஜோடி சேர்ந்தார்.

இருவரும் அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை விரைவாக அதிகரித்தனர்.

ஹெய்ல் 71 ஓட்டங்களிலும், ஹோலி 45 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களை எடுத்தது.

இதையடுத்து 159 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலெடுத்தாடக் களமிறங்கியது பஞ்சாப் அணி.

அந்த அணி 19.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 163 ஓட்டங்களைப்பெற்றது.

இதன்மூலம் பஞ்சாப் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஆசார் மொகமட் தெரிவானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு புனேயில் நடைபெறும் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் எதிர் புனே வாரியர்ஸ் அணியும் மோதுகின்றன.

---

## ஐரோ. தூது...

மலை குமரன் வித்தியாலயத்தில் மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தனர்.

இதையடுத்து நேற்று மாலை ஐரோப்பிய நாடாளுமன்றக் தூதுக்குழுவினர் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் செய்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலொன்றும் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.விமலநாதன், மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் உட்பட பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள், மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பான இணையத்தின் தலைவர் எம்.அமலதாஸ் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (எ-1)

## எனது உடல் நிலை குறித்து கேட்பதை நிறுத்திக் கொள்ளுங்கள்-யுவராஜ்

(சண்டிகர்)

எனது உடல்நிலையைப் பற்றிக் கேட்பதை நிறுத்திக் கொள்ளுங்கள்என்று இந்தி அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புற்று நோயால் பாதிக்கப்பட்ட யுவராஜ் சிங் அமெரிக்காவில் சிகிச்சையை முடித்துவிட்டு கடந்த மாதம் நாடு திரும்பினார். குர்காவ்னில் தங்கியிருந்த அவர் நேற்று முன்தினம் சண்டிகருக்கு திரும்பினார். சண்டீகர் விமான நிலையத்திலிருந்து நேரடியாக வீட்டுக்குச் சென்ற அவர் அங்கு ஊடகத்தினரிடம் கலந்துரையாடினார்.

அப்போது யுவராஜ் கூறியதாவது, என்னுடைய உடல் நலத்தைப் பற்றி எதுவும் கேட்காதீர்கள். நீங்கள் அவ்வாறு கேட்கும் போதெல்லாம் நான் தற்போதும் உடல் நலக் குறைவோடு இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது.



எனக்கு புற்றுநோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டபோது அதை ஜீரணிப்பதற்கே கடுமையாக இருந்தது.பு ற்றுநோயோடு கடுமையாகப் போராடிவிட்டேன்.நான் பாதிக்கப்பட்டதால் எனது குடுபத்தினரும் பாதிக்கப்பட்டனர். புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்னைப்பார்த்து ஊக்கம் பெறுவார்கள் என நம்புகிறேன் என்றார்.

## நடிகையுடன் வேண்டாம் சுரேஷ் ரெய்னா பிடிவாதம்




இந்திய அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் சுரேஷ் ரெய்னா. சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் விளையாடும் அவருக்கும் இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவுக்கும் இடையே காதல் இருந்ததாக தகவல் வெளியாகி இருந்தது. இருவரும் ஒன்றாக ஊர் சுற்றி வந்ததும் தெரியவந்தது.

இந்த நிலையில் நடிகை யாரையும் திருமணம் செய்ய மாட்டேன்என்றுசுரேஷ்ரெய்னா கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ரெய்னா கூறியிருப்பதாவது,

நான் இப்போதே திருமணம் செய்ய விரும்பவில்லை. இன்னும் சில ஆண்டுகள் கழித்துதான் திருமணம் செய்வேன். ஆனால் பாலிவுட் நடிகையை திருமணம் செய்யமாட்டேன். அதில் உறுதியாக இருக்கிறேன்.

எனது குடும்பம் நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தது. இதனால் என்னையும் எனது குடும்பத்தாரையும் புரிந்துகொள்ளக் கூடிய பெண்ணைத்தான் திருமணம் செய்வேன்.

ஐ.பி.எல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடுவதில் பெருமை அடைகிறேன். சென்னை அணியில் சிறந்த அணித் தலைவர், பயிற்சியாளர் உள்ளனர். உள்ளூர் வீரர்களான அஸ்வின், பத்ரிநாத், தங்கள் பங்களிப்பை சிறப்பாக செய்கிறார்கள். சென்னை சேப்பாக்கம் மைதானம் எனக்குப் பிடித்தது.

5 ஐ.பி.எல் போட்டியிலும் சென்னை அணியில் விளையாடி வருகிறேன். இதனால் தமிழ் மொழியை கொஞ்சம் கொஞ்சமாகக் கற்று வருகிறேன். மைதான ஊழியர்கள்,ஹோட்டல் ஊழியர்கள் ஆகியோரிடம் கொஞ்சம் கொஞ்சமாக தமிழ் மொழியில் பேசுகிறேன்.இவ்வாறு ரெய்னா கூறியுள்ளார்.

# நல்லூர் கோட்ட அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

இன்று செங்குந்தா இந்துக் கல்லூரியில் நல்லூர்க் கோட்ட அதிபர்களுக்கு நடைபெற இருந்த கூட்டம் மின்சாரத் தடை காரணமாக கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மாற்றப் பட்டுள்ளதாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா அறிவித் துள்ளார். (ந)

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்...

வீதியில் உள்ள வீட்டில் இருந்து நேற்று மாலை 4.30 மணியளவில் இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதய பாலன் மற்றும் யாழ்.வணிகர் கழகத் தலை வர் இ.ஜெய சேகரம், செயலாளர் இ.ஜனக்குமார், பொருளா ளர் ஆர்.ஜெயராசா, உப செயலாளர் எஸ்.சிவ குமார் ஆகியோர் முன்னிலையில் திறந்த வாகனம் ஒன்றில் காளை மாடு ஏற்றப் பட்டு மாலை 4.38 மணியளவில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் நோக்கிப் புறப்பட்டது.

நாவலர் வீதி, காரைநகர் வீதி, அராலி வீதி, மானிப்பாய் வீதி, அரசடி வீதி, கே.கே.எஸ்.வீதி வழியாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை காளை மாடு சென்றடைந்தது.

இதன்போது வீதியின் இருமருங்கிலும் பெருந்திரளான மக்கள் கூடிநின்று காளை மாட்டைப் பார்த்தனர்.

காளை மாடு ஆலயத்தில் மாலை ஆறு மணியளவில் வாகனத்தில் இருந்து இறக் கப்பட்டது.

காளை மாட்டின் வருகையையொட்டி நகு லேஸ்வரர் ஆலய அந்தணச் சிவாச்சாரி யார்கள் மற்றும் யாழ்.மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பசுவதைக்கு எதிரான அமைப்பின் தலைவர் எஸ்.கங்கைவேணியன், அடியார்க்கு அமு தூட்டும் அண்ணலார் க.சிவபாலன், யாழ்.ரெலிக் கொம் உத்தியோகத்தர் ஜனார்த்தனன் உட்பட பலர் அங்கு கூடிநின்று வரவேற்பளித்தனர்.

மகாராஜஸ்ரீ நகுலேஸ்வராக் குருக்கள் காளை மாட்டிற்கு பூசை ஆராதனை செய்து வைத்தார்.

தொடர்ந்து யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் இந்து கலாசார உத்தியோகத்தர் , வணிகர் கழகப் பிரதிநிதிகள் மற்றும் சமூகப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் முன்னி லையில் காளை மாடு நகுலேஸ்வரர் ஆலயத்திற்குக் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து இந்து கலாசார உத்தியோ கத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் ஆலய முன்றலில் நடந்த கூட்டத்தில் ஆசி யுரையை ஆலய ஆதீனகர்த்தா நகுலேஸ் வரக் குருக்களும், வாழ்த்துரையை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வணிகர்கழகத்தலைவர்எஸ்.ஜெய சேகரம், க.சிவபாலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதன்போது யாழ்.அரச அதிபர், நீதி பரிபாலனம், நிதியுதவி வழங்கிய வர்த்தகர் கள், காளை மாட்டை ஒப்படைத்த மாட்டின் உரிமையாளர் உட்பட சகலருக்கும் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் நன்றி தெரிவித்தார். (ந)

# மனித உரிமை நிலை...

களுக்கு பொறுப்புக் கூறுதல் குறித்து அவர் பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத் வேண்டும் என்றும் இவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டு இலங் கைக்கு திருப்பி அனுப்பப்படும் அகதிகள் மீது இலங்கை அதிகாரிகளால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றது. இவ்வாறு இலங்கைக்கு நாடு கடத்தப்படும் அகதிகள் பலர் கடத்தப்பட் டும்,கைது செய்யப்பட்டும், பல்வேறு வகை யிலும் அச்சுறுத்தப்பட்டும் உள்ளனர்.

இவ்விவகாரம் தொடர்பில் இலங்கைக்கு விஜயம்செய்யும் அவுஸ்ரேலிய அமைச்சர்கிறிஸ் போவன், அங்குள்ள கள நிலைமைகள் தொடர் பில் நேரில் கண்டறிய வேண்டும் என மனித வுரிமைகள்கண்காணிப்பகம்வலியுறுத்தியுள்ளது.

அத்துடன்,பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட அகதிகள் பல ருக்கு இலங்கை அதிகாரிகள் சிகரெட்டினால் சுட்டு அச்சுறுத்திய விடயம் குறித்தும் மனித வுரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டி யுள்ளது.

இலங்கையில் அண்மையில் கடத்தப் பட்டு பின்னர் நாடுகடத்தப்பட்ட அவுஸ்ரேலிய குடியுரிமை பெற்றிருந்த பிரேம்குமார் குணரட் னத்தின் விவகாரம் தொடர்பிலும் இவ் அமைப்பு கோடிட்டுக்காட்டியுள்ளது.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்களுக்கு இலங்கை அர சாங்கம் பொறுப்பு கூற தவறியுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள மனிதவுரிமைகள் கண்காணிப் பகம்,ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழு வின் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் குறித்தும் அவுஸ்ரேலிய அமைச் சருக்கு இவ்வமைப்பு நினைவூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சரத் பொன்...

சரத் பொன்சேகவிற்கு கடுமையான பாது காப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட அவரை சென்று பார்வையிடமுடியாத அளவில் இந்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள் ளது.

என்னைக்கூட 15 நிமிடம் மாத்திரமே பார்வையிட அனுமதிக்கின்றனர்.

அத்துடன் சரத் பொன்சேகா எவ்வளவு காலம் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறவேண்டுமென்ற முடிவை மருத்துவர்கள் இன்னும் அறிய தரவில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (எ-11)

# வெட்கமில்...

அமைச்சர் பசில் ராஜபக்ஷ இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு தோட்டத் தொழிலாளர்களின் பங்களிப்பு இன்றி யமை யாதது. தோட்டத் தொழிலாளர்களின் பங் களிப் பினாலேயே இலங்கை இவ் வாறான பொருளாதார அபிவிருத்தியை எட்ட முடிந் துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியானது கொழும் பில் மேதினத்தை நடத்த முடியாது. யாழ்ப்பாணத் தில் நடத்தியுள்ளது. இதற்கான சுதந்திரத்தினை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

ஆனாலும் இதே ஐக்கிய தேசிய கட்சியி னர் தான் கடந்த காலங்களில் யாழ்.பொது நூலகத்திற்கு தீ வைத்தனர் என்பதனையும் ஐக்கிய தேசியக் கட்சியினரால் தான் கறுப்பு ஜூலை என்ற கசப்பான நிகழ்வு இடம் பெற் றது என்பதனையும் கூட்டமைப்பினர் மறந்து அவர்களுடன் ஒன்றிணைந்து வெட் கம் இல்லாமல் இந்த மேதினக் கூட்டத்தை நடத்தும் அளவிற்கு தாழ்த்தப்பட்டுவிட்டனர் என நினைக்கும் போது தான் மன வேதனை அடை வதாகவும் பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சர்பசில்ராஜபக்ஷ குறிப்பிட்டார். (எ-11)

# மே தின ...

மக்கள் நன்கறிவர் என அத்த நாயக்க கூறி னார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஐ.தே.க வின் மே தின கூட்டம் முடிந்த கையோடு ஓர் அரச தொலைக்காட்சி நிலையம் மக்கள் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிகள் காணப்படும் காட்சியை ஒளிபரப் பியது குறிப்பிடத்தக்கது. (எ-11)


**புவியியல் A/L 2014**

புவியியலை ஒரு பாடமாக தெரிவு செய்து கொண்ட மாணவர்களுக்கான

**புதிய பிரிவு ஆரம்பம்**

**05.05.2012 சனி**

**P.S. குமரன் B.A(Hons)**

பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்

**D.C.M** யாழ்ப்பாணம் (C-6485) | தனிப்பாட அனுமதி வழங்கப்படும்

**தேவை**

வடமராட்சியில் இயங்கும் பிரபல அச்சகம் ஒன்றுக்கு ரைப் செற்றிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புக்கு:

**077 2699965**

**021 226 0055**

(C-6486)


## மரண அறிவித்தல்

## புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்



பிரான்பற்று பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி வேலும் மயிலும் அவர்கள் 28.04.2012 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் செல்லக்கிளியின் அன்புக் கணவரும், விநாயகமூர்த்தி (ஜேர் மன்), கோமதி (யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியை), வதனி (நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்), சிவகுமார் (கனடா), செல்வக்குமார் (கனடா), சுதா, சுரேஸ்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலைவாணி (ஜேர்மன்), சுரேஸ்குமார் (வியாபாரம்), கமலநாதன் (மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப் நிர்வாகி) ஆகியோரின் மாமனும், தங்கராஜாவின் (ஜேர்மன்) சகலனும், மகேஸ்வரியின் (ஜேர்மன்) மைத்துனரும், அமரர் மகாலிங்கம், அமரர் அருந்தவம், அமரர் செல்லத்துரை, அமரர் துரைசிங்கம், திருச்செல்வம், மல்லிகைமலர் ஆகியோரின் சகோதரனும், பரமேஸ்வரன் (ஜேர்மன்), தங்கேஸ்வரன் (ஜேர்மன்), ஜெயந்தி (லண்டன்), சாந்தி (ஜேர்மன்), ஜெகதீஸ்வரன் (ஜேர்மன்), தயாபரன் (ஜேர்மன்) ஆகியோரின் சித்தப்பாவும், தர்சிகா, கோகிலா, விஜிகரன், யசோதரன், தாரணி, துளசி ஆகியோரின் அன்பு மாமனும், நல்லசேகரம், அருளம்பலம் ஆகியோரின் பெறாமகனும் வரப்பிரகாஷ், சரணிஜா, தரன்சியா, சிந்துர்ஜா, தக்சயப்பிரகாஷ், திஷான், இசாளினி, சிந்துஜன், லக்ஷனா, கபிலன், நவிந்தன், அபிலாஷ், கனுஜன், சுருதி, பிரவீன், அஸ்வின், தினேஸ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 03.05.2012 இன்று வியாழக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னை இல்லம்
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.
தொலைபேசி: 021 3734566, 0776148768

தகவல்: குடும்பத்தினர்

(C-6484)

# இலங்...

ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ இவ்வாறு எந்த உறுதிமொழியையும் சுஷ்மா சுவராஜிடம் வழங்கவில்லை என அரசாங்கம் மறுத்திருந் தது.

இதனையடுத்து இந்தியக் குழுவில் இடம் பெற்றிருந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இன்று சந்திக்க சுஷ்மா சுவராஜ் ஏற்பாடு செய் திருந்த நிலையிலேயே பிரதமர் மன்மோகன் சிங் இவர்களை அவசர மாக சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள் ளார்.

இலங்கைவிவகாரம் தொடர்பில் பிரதமர் மன் மோகன் சிங் இந்திய நாடாளுமன்ற உறுப் பினர்கள் குழுவிடம் கேட் டறியவுள்ளதாக புது டில்லி தகவல்கள் தெரி விக்கின்றன. (எ-11)


**மணல் விற்பனைக்குண்டு**

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

(8266)

4 ரெக்டர் - 23000/-

அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு

(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு

**கண்ணா**

**0776766499**

பாரம்பரிய பட்டுக்களின் பரந்த சோலை

**காவேரி சில்க்ஸ்**



இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரம்பரிய பட்டுக்கள், புத்தம் புதிய நவீனரக சல்வார்கள், பஞ்சாபிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகளும் நியாயமான விலைகளில் கிடைக்கும் ஒரே இடம்.

48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2333

திருமணப்பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்

**உங்கள் ஆலயங்களிலும் தென்னிந்திய இசை நிகழ்ச்சியைநடாத்த விரும்புகின்றீர்களா?**

தென்னிந்திய பிரபல திரைப்படப் பாடகர்

T.M. சௌந்தராஜன் அவர்களின் புதல்வன்

T.M.S. செல்வகுமார் தற்போது யாழ்ப்பாணம் வருகை தந்ததை முன்னிட்டு அவரின் இசை நிகழ்ச்சியை இம்மாதத்தில் நடாத்த் விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தென்னிந்திய கலைஞர்களின் தொடர்புகட்கு:

**0771827274**

(8282)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.